# தவத்திரு தனிநாயக அடிகளார்



# மாட்சி நயப்பு மலர்

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AIYADURAI SARAVANAPAVAN
TR.

## தமிழ்த்தூது
## தவத்திரு தனிநாயக அடிகளார்

# மாட்சி நயப்பு மலர்




## 18-07-81

யாழ். மறைமாவட்ட கத். ஆசிரியர் சங்க
வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அண்மையில் அணைந்த அறிவொளி,
கலாநிதி தவத்திரு தாவீது அடிகளார்க்கு
இந்நினைவு மலர் காணிக்கையாக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்....

தமிழ் நாட்டிலும், ஈழத்திலும், மலேசியாவிலும் வழக்கி லிருந்த தமிழ்மொழியை, அனைத்துலக அரியாசனமேற்றி, சக்தி வாய்ந்த சர்வதேச மொழிகளுடன் சரியாசனம் தந்தவர் தனிநாயக அடிகள்.

அடிக்கடி அனைத்துலகும் சென்று, தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, எங்கெல்லாம் உபயோகத்திலிருந்தன, இருக்கின்றன என்ற உண்மைகளைக் கண்டறிந்து உலகுக்கு எடுத்துரைத்தவர் அப் பெருந்தகை.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தமிழனின் தாரக மந்திரத்தை, செய்வத் திருமகனார் யேசுவின் பொன்மொழிகளோடு இணைத்து தமிழ்ப் பணியுடன் இறைபணியும் ஆற்றியவர் அந்த உத்தமர்.

## *இன்று...*

தமிழன்னையின் தூதாகத் தரணியை வலம் வந்த தனிநாயக அடிகளார் இறையடி நீழலில் இனிதே இளைப்பாறுகின்றார்.

அன்னார் அமரத்துவமெய்தியதைத் தொடர்ந்து, அவர்தம் பெருமையை அவனியெங்கும் எடுத்துரைக்கும் பணியில், ஏற்கனவே சில மலர்கள் பூத்துக் குலுங்கிப் புதுமணம் கமழ்ந்துள்ளன.

அந்த மலர்களின் வரிசையில் யாழ் மறைமாவட்ட கத்தோ லிக்க ஆசிரியர் சங்கமும், அடிகளார் மாட்சியை நயக்கும் இம் மலரை, தமிழ்ப் பெருங்குடி மக்களின் கரங்களில் தவழ விடு கின்றது.

## *இந்த மலரில்...*

வாழ்த்துரை வழங்கியுள்ள பெரியார்கள், அடிகளாரின் பணி களையும் ஆராயத் தவறவில்லை.

அடிகளார் மிக விரும்பிய ஒரு துறையினுள் நுழைந்து ஆய்வு செய்து கட்டுரை வடிவில் தருகிறார் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் பொற்கோவின் எழுத்தோவியம் அடிகளின் தமிழ்ப்பணியை அளவிடும் ஓர் அளவுகோல்

அசிசி நகரத்துப் புனிதரான பிரான்சிஸ்குவின் வழியில் இயற்கையின் எழிலில் இறைவனின் ஆற்றல்களை வியந்து ரசித்தவர் தனிநாயக அடிகளார். அவருடன் இயற்கைச் சோலையில் பறந்து இலக்கிய நயங்களை அள்ளியள்ளிப் பருகுகின்றார் கலாநிதி அந்தனி ஜாண் அழகரசன் அடிகள். நாளைய தனிநாயகமென 'புதிய உலகம்' இவரைப் புகழ்ந்துள்ளது.

தனிநாயகம் தந்த தமிழ்த் தூது, சிறப்புமிக்கதொரு இலக்கியம். தமிழ் தூதின் சில பகுதிகளை நயப்பவர் புலவர் அரியநாயகம் அவர்கள். தனிநாயகம் மரபில் தோன்றிய இவர், வளர்ந்துவரும் ஒரு தமிழறிஞர்.

தவத்திரு நாயகனின் வாழ்க்கை ஏட்டிலே, தங்கள் உள்ளங்களின் பசுமை நினைவுகளை எம்முடன் பகிர்ந்துகொள்ளும்,

- கருணாகர அடிகளார் அவரது பள்ளித் தோழர்,
- வித்துவான் நடராசா நல்லதொரு நண்பன்,
- பண்டிதர் ஆசிநாதன் உண்மை அபிமானி;
- வித்துவான் அடைக்கலமுத்து நெருங்கிப் பழகியவர்,
- நிர்மலா இராசரத்தினம் அடிகளாரின் மருமகள்.

முதுபெரும் கவிஞர்களுடன் இளங் கவிஞர்களும் கவிதையரங்கில் கலந்துகொள்கின்றனர்.

அடிகளார் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் பல ஏடுகளிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

அமரர் தனிநாக அடிகள் தமிழன்னைமேற் கொண்ட பாசத்தையும் அதன் விளைவாக அன்னைக்கு அவர் சூட்டிய ஆரங்களையும் அளவிட, இச்சிறு மலரும் உதவும் என்ற நம்பிக்கையுடன் மலரின் மணம் நுகர, வாசகப் பெருமக்களைப் பணிவன்புடன் அழைத்துச் செல்கிறேன்.

வாழ்க தனிநாயகம் அடிகள்
வளர்க அவர் தமிழ்ப் பணி
வணக்கம்.

*சாமுவேல் பெனடிக்ற்*
*மலராசிரியன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசியுரைகள்

1. கொழும்பு பேராயர்
2. யாழ் ஆயர்
3. வட்டுக்கோட்டை ஆண்டகை
4. சுவாமி பிரேமாத்மானந்தா
5. சபாநாயகர்
6. பிரதேச கலாசார அமைச்சர்
7. பேராசிரியர் சாமிமுத்து
8. கல்விப் பணிப்பாளர்
9. ஆசிரியர் சங்க பரிபாலகர்
10. ஆசிரிய சங்கத் தலைவர்

●

**செயலாளர் அறிக்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயர்

பேரருட் பெருந்தகை

# நீக்கிலஸ் மார்கஸ் பெர்ணாண்டோ

## ஆண்டகையின் அருளுரை



அனைத்துலக தமிழாராய்ச்சி மகா நாட்டுத் தந்தை தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் அரும்பெரும் தொண்டை நன்றியுடன் நினைவு கூர்ந்து விழா எடுக்கும் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் முக்கிய கடமையொன்றை நிறைவேற்றுகின்றது என்பது எனது எண்ணம். இதையொட்டி வெளிவரவிருக்கும் நினைவுமலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மனநிறைவு அடைகின்றேன். '' என்னை நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு '' என்ற உயர்ந்த நோக்கத்துடன் வாழ்ந்தவரெனவும், " யாதுமூரே யாவரும் கேளிர் '' என்னும் கூற்றுக்கொப்ப, தான் அறிந்த தமிழையும், அவ ளது இயல்பையும் பண்பாட்டையும் தரணியெல்லாம் கண்டுகொள்ள வழிவகுத்தவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரெனவும் நாம் அறிவோம்.

எனவே இந்த நினைவுமலரை வெளியிட முன்வந்திருக்கும் யாழ். மறைமாவட்ட ஆசிரியர் சங்கத்தின் முயற்சி பெருமளவாக வெற்றி பெறவேண்டும் என்றும், இந்த முயற்சி அடிகளாரைப் போன்ற தொண் டர்கள் இன்னமும் தோன்ற வழிவகுக்க வேண்டும் என்றும் வாழ்த்து கின்றேன்.

\+ நீக்கிலஸ் மார்கஸ் பர்ணாந்து

கொழும்புப் பேராயர்.

பேராயர் இல்லம்,
கொழும்பு—8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய மன்னார் மறைமாவட்டத்தின்

முதல் ஆயராக நியமிக்கப்பட்டுள்ள

**தவத்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கு**

எம் சங்கத்தாரால் அனுப்பப்பட்ட பாராட்டுக்கு

அன்னார் அனுப்பிய

## அருளுரை

Dear President

I thank you sincerely
your messages of
congratulations - I assure
you of my co-operation
May God bless you.

Tom Saundranayagam

Rome 2/6/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஆயர்

# பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை

ஆண்டகையின்

# ஆசிச்செய்தி



யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்சங்கம் தவத்திரு சேவியர் ஸ்ரனிஸ்லாஸ் தனிநாயகம் அடிகளாரர்க்கு யூலைத்திங்கள் பதினெட்டாம் நாளில் விழா எடுப்ப தறிந்து மனமகிழ்வெய்துகின்றேன்.

தனிநாயக அடிகளுடன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளேன். தமக்கிருந்த மொழி, இலக்கியத் திறன்களை அவர் தம்இளமைப் பருவத்திலேயே நன்கறிந்தார். இறைவன் தமக்களித்த இத்திறன்களை இறைபணிக்கே அவர் அர்ப்பணித்திருந்தார்.

தென்னிந்திய தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இறைபணியில் ஈடுபடுவதற்காக தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் அவர் ஆழ்ந்த புலமை பெற்றார். தாம் கற்ற பல்வேறு மொழிகளையும், தாம்தேடியறிந்த பண்பாட்டுமுறைகளையும் சிறந்தமுறை யில் பயன்படுத்தி, தமிழின் பழமை, அழகு, வளமையை கற்றோர் உலகுக்கு அளிக் கும் நல்நோக்குடன் **தமிழ்ப் பண்பாடு** எனும் புகழ்பூத்த சஞ்சிகையைத் தொடக்கி பல்லாண்டுகாலம் அது வெளிவரத் துணைபுரிந்தார். இவ்வாறே இந்தியாவில் வழக்கி லிருந்த பலமொழிகளில் ஒன்று என்றுமட்டுமே அறியப்பட்டிருந்த தமிழ்மொழியை, அனைத்துலக இலக்கியவானில் சிறப்பிடம்பெற வழிவகுத்தார்.

அவரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்பட்ட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு கள், கற்றோர் உலகினரால் அறியப்பட்ட மொழியாகத் தமிழை மாற்றின. அனைத்துலக நாடுகள் வரம்பில் தமிழின் பழமையையும் மதிப்பையும் உயரச் செய்ய அவர் எடுத்த முயற்சிகளின் மத்தியிலும், இறைபணியில் ஆர்வமும் திற மையும் சிறப்பும் மிக்க ஒரு குருவாகவும் அவர் திகழ்ந்தார்.

அனைத்துலகும் போற்றும் தமிழறிஞர் தனிநாயக அடிகளார் எம்முடையவும் எம் எதிர்காலத் தலைமுறைகளுடையவும் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நினைவுகூரப் படவேண்டியவர்.

ஏனெனில் சிறப்பாக அவர் தமிழராகிய எமக்கே உரியவர்.

**ஆயர் வ. தியோகுப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயக அடிகள்

இளைப்பாறிய ஆயர் குலேந்திரன் அவர்கள், வட்டுக்கோட்டை

யாழ்ப்பாணம் ஒரு தமிழ்நாடு. நூற்றுண்டுகாலமாகத் தமிழ் இங்கு வளப்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழை ஆழ்ந்து கற்று அழகான கவிதைகள் புனைவதில் பலர் தம்மையே அர்ப்பணித்துள்ளனர்.

தனிநாயக அடிகள் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியர். நெடுங்காலமாகக் கல்விக் கொள்கைகள்பற்றியே விரிவுரைகள் நடாத்தியவர். அத்துடன் நீண்டகாலம் வெளியுலகில் வசித்தவர். எனவே யாழ்ப்பாணத்தில் அவரிலும் பார்க்கத் தமிழில் புலமைவாய்ந்தோர் பலரிருப்பது ஆச்சரியமல்ல.

எனினும் இரு அம்சங்களால் தனிநாயக அடிகள் தமிழறிஞர்களுள் மிக உயர்ந்தவொரு இடத்தை வகிக்கின்றுர்.

1. தமிழ்மொழியில் அவர் கொண்ட ஒப்பற்ற காதல்.
2. தமிழுக்காக அவராற்றிய பணிகள்.

தமிழ் மொழியை மட்டுமே அறிந்தவர்கள் அதன்மேல் பக்திகொள்வது இலகுவானதொன்று. ஏனெனில் அவர்கள் அறிந்த மொழி தமிழ் மட்டுமே. எனவே அம்மொழியை அவர்கள் அன்பு செய்தேயாகவேண்டும்.

ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்களும் இருக்கிருர்கள். இவர்களும் தமிழை நேசிப்பது அதிசயமானதொன்றல்ல.

தனிநாயக அடிகள் பதினைந்து மொழிகளில் புலமை பெற்றவர், முப்பது மொழிகளில் அலுவலாற்ற அறிந்தவர். எனவே தாமறிந்த பல்வேறு இனிய சிறந்த மொழிகட்கிடையே தமிழ்மொழியின்பால் அவர் கொண்டிருந்த நட்பைக் காதலென அழைப்பது பொருத்தமானதே.

தமிழுக்கு அவராற்றிய பணி அப்பழுக்கற்றது. கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழுக்காக அளவிடற்கரிய பணியாற்றியவரில் அவரை விஞ்சியோர் எவருமில்லையென யான் தனிநாயக அடிகளார்க்கு அடிக்கடி கூறுவதுண்டு.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரு சில பகுதிகளில்மட்டுமே பேசப்பட்டுவருவதும், தன் சொந்தப்பகுதிகளிலேயே உதாசினப்படுத்தப்படுவதும், வெளியுலகுக்கு அதிகமாய் அறியப்படாததுமான ஒரு மொழியை, அனைத்துலக ஆராய்ச்சிக்கும், கருத்தரங்குகட்குமான ஒரு மொழியாக உயர்பீடத்திலேற்றியமையே அவர் தமிழுக்குச் செய்த மிகப்பெரும் பணியாகும்

அன்னரது தமிழ்ப்பணி விரிந்து பரந்ததொன்று.

1. தம்மால் முடிந்த அளவு, மிக நீண்டகாலமாக, தமிழ்ப் பண்பாடு என்ற ஒப்பரிய சஞ்சிகையை வெளியிட்டு பேரறிஞர் பலர் மத்தியில் தமிழ் மொழிக்குச் சிறந்த செல்வாக்கைத் தேடித்தந்தார்.
2. தமிழை வளம்செய்யவும், தமிழ் மொழியின் பெருமையை அனைத்துலகும் அறிந்துகொள்ளவும், சர்வதேச அறிஞர்களை அடிக்கடி ஒன்றிணைக்கும் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை நிறுவி நிர்வகித்து வந்தார்.
3. சமஸ்கிருதம் போன்ற வழக்கில்லாத மொழிகட்கே பீடம் அமைத்து ஆய்வு நடாத்திவந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தமிழ்மொழிக்கும் பீடம் அமைத்து, போதனைசெய்யவும் ஆராய்ச்சிச் சாதனைகள் நடாத்தவும் வழிவகுத்தார். உ+ம்.-சிக்காக்கோ, பிறேக், மொஸ்கோ, பெல்கிறேட்.
4. முன்னர் அறியப்படாத சில அரிய பழம்பெருமை மிக்க நூல்களைப் பதிப்பித்துத் தந்தார்.

தமிழ்கூறும் அனைத்துலக நெஞ்சங்களிலும் தனிநாயக அடிகள் அழிக்கவியலா முத்திரையொன்றைப் பதித்துச் சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர்
## சுவாமி பிரேமாத்மானந்தா அவர்களது
# ஆசிச்செய்தி

தமிழன்னை ஈன்றெடுத்த தனிப்பெருந் தனையனும் தனிநாயக அடிகள் தன்னன்னைமேல் ஆரா அன்பு கொண்டு அவளை உயர்தனிப் பீடமேற்ற இடையறாது உழைத்தார். பல்வேறு மொழிகளையும் பழுதறக்கற்றுப் பன்மொழி வல்லுனராக விளங்கிய அடிகளார் தன் தாய்மொழியாம் பைந்தமிழின் தொன்மையையும் சிறப்பையும் பாரெலாம் பரவும்வகை செய்யவேண்டும் என்று தணியாத ஆர்வம் கொண்டார். எம் தமிழன்னையைப் பிறநாட்டவர் பேணிப் போற்ற வேண்டும்; தமிழ்மொழி உலகின் தொன்மொழிகளுள் ஒன்றாக, இலக்கிய இலக்கண வளம்பெற்றதாக, நீதிநூற் கருத்துக்கள் நிறைந்ததாக மனிதனைத் தேவனாக மாற்றக்கூடிய மதக்கருத்துக்கள் செறிந்ததாக விளங்கும் உண்மையைப் பிறமொழியாளரும் உணரவேண்டும். இதனால் தமிழ்த்தாயின் பெருமை, உலகில் நீடுநின்று நிலைக்கும் பிறமொழிகளோடு ஒப்பநின்று மேன்மையுற வேண்டும் என்ற பேரார்வத்தினால் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டினை நடத்துவதற்கு முன்னின்று உழைத்து வழிகோலினார்.

அடிகளாரின் முயற்சியினால் கடல்கடந்த பலநாடுகளின் பல்கலைக்கழகங் களில் தமிழாய்வுப் பிரிவுகளும், தமிழ்ப்போதனா பீடங்களும் ஏற்படுத்தப் பட்டன. மலேசியா, செனகல், அமெரிக்கா, சோவியத் யூனியன், செக்கோஸ்லவாக்கியா முதலான நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களிலே தமிழன்னைக்கு இடமளிக்கப்பட்டிருப்பதைக்கண்டு எந்தத் தமிழ்ப்புதல்வன்தான் பெருமைகொள்ள மாட்டான்.

அடிகளார் சைவத்தமிழ் நூல்களையும் நுணுகி ஆராய்ந்து கற்று அவற்றின் நுட்பங்களை யெல்லாம் உணர்ந்தார். அவர் கத்தோலிக்க மதத்தவராயிருந்த போதும் பிற மதங்களுக்கும் ஏற்ற மதிப்பும், சிறப்பும் கொடுத்துப் போற்றிய பெருமையுடையவராயிருந்தார். அன்னார் ஆழ்ந்த, பரந்த, விரிந்த, பெருமனப்பான்மையுடைய உயர் விருட்சமாக விளங்கினார். தமிழுலகுக்குக் காவலனாக, வழிகாட்டியாக, அணிகலனாக விளங்கிய மேதை அவர்.

இத்தகைய போற்றரும் தவப்புதல்வருக்கு யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரிய சங்கம் நினைவுவிழா எடுப்பதறிந்து பெருமகிழ்வடைகிறோம். விழா சிறப்புற நிறைவுறவேண்டும்; மலரும் சிறந்த அறிவுக்களஞ்சியமாக வெளிவரவேண்டும் என்று இறை அருள் வேண்டி எனது ஆசிகளையும் தந்து நிறைக்கின்றேன்.

**சுவாமி பிரேமாத்மானந்தா**
தலைவர்
இராமகிருஷ்ணமிஷன் (ஸ்ரீலங்கா கிளை) கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர்

## அல்ஹாஜ் எம். ஏ. பாகீர் மாக்கார் அவர்களது

# பாராட்டுரை

1981 ஜூன் மாதம் 12ஆம் நாள்

தமிழுக்காகவே வாழ்ந்த தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நினைவு குறித்து வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பும் வாய்ப்புக் கிடைத்தமைகுறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உலகமனைத்திலும் தமிழ்மொழி ஒலித்திடவேண்டுமென்று ஆர் வத்தீ கொழுந்துவிட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் அடிகளார். சொந்தநாட்டில் மாத்திரமல்ல உலகநாடுகள் ஒவ்வொன்றுக்கும் சென்று தமிழின் தொன்மையையும் பெருமையையும் இனிமையையும் சொல்லிச் சொல்லி உள்ளம் மகிழ்ந்தார் அவர். தமிழ்த்தாய்க்கு ஏற்படும் பெருமையை தனக்கு ஏற்படும் பெருமையாக கருதியவர் அவர். மதத்துறவியாக — தமிழ்ப்பேராசிரியனாக — தமிழ்மொழி பரப் பும் தொண்டனாக — தமிழின் பெருமையைக் காக்கும் காவலனாக — தமிழுக்காக தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகியாக வாழ்ந்தார் தவத்திரு தனிநாயக அடிகளார்.

பற்றற்ற மனத்துடன் துறவியாக, தூய வெண்ணுடையுடன் விளங்கிய அவரால் துறக்கமுடியாததும் ஒன்று இருந்தது. அதுதான் அவர் தமிழ்மொழிமேல் கொண்டிருந்த பற்று! தமிழ்மொழிமேல் கொண்டிருந்த பாசம்!! தமிழ்மொழிமேல் கொண்டிருந்த காதல்!!!

தமிழ் வளர்த்த தாமோதரனார் போன்ற பெருமக்களை தந்து புகழ்பெற்ற யாழ்ப்பாண மண்ணுக்கு மேலும் புகழ்தேடித் தந்த தனி நாயகம் அடிகளார், தமிழையும் தமிழ்பேசும் மக்களையும் விட்டுப் பிரிந்தாலும் தமிழ்மொழி தரணியிலே ஒலிக்கும் காலம்வரை - தாழ் கடலும் தண்மதியும் உள்ள காலம்வரை அடிகளாரின் பெயர் நிலைத்து நிற்கும் என்பது எமது ஐயமற்ற கருத்தாகும்.

நாட்டுக்கு நல்வழி காட்டிய பெரியார்களின் வரிசையிலே தவத் திரு தனிநாயக அடிகளாரும் தனியிடம் பெறுகின்றார். அன்னாரை நினைவு கூரும் இவ்வேளையில் எனது நல்லாசிகளை நவில்கின்றேன்.

அல்ஹாஜ் எம். ஏ. பாகீர் மாக்கார்
சபாநாயகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

## மாண்புமிகு செல்லையா இராசதுரை

அவர்களது

# வாழ்த்துரை

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகளாரது திருப் பெயரை நினைக்குந்தோறும் செந்தமிழின் இனிமையும் பெருமையும் பளிச்சிடும்.

உலகமொளிகழில், சங்கத்தில் ஆய்ந்த தகுதிபெற்ற ஒரேமொழி தமிழ்மொழியாகும் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் ஆகிய மூன்று சங்கங்களிலும் புல வர்களும், கவிஞர்களும் வளர்த்த சிறப்பு தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு.

காலங்கடந்து, கடல்கோள்களால் தாக்குண்டு அழியாத சீரிளமை திறன்மிக்கத் தமிழ்மொழிக்கு இந்த நூற்றுண்டில் உலகமளாவிய சங்கம் அமைத்துப் பெருமைப்படுத்திய தனிநாயக அடிகளாரின் செயல்திறன் வியந்து தமிழன்னை பெருமிதம் அடைந்திருக்கிருள்.

காலங்கடந்தும், தனிநாயக அடிகளாரின் பெயர் என் றும் நிலைத்து நிற்கும்.

செ. இராசதுரை
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வித்தகர், செம்மொழிச் செம்மல்

**தளபதி, பேராசிரியர் ச. சாமிமுத்து எம். ஏ.**

*தமிழ்த்துறைத் தலைவர்*

*(தூய சூசையப்பர் கலைக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி)*

*அவர்களது*

# வாழ்த்துரை

தமிழ்ப் பேராழி தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நினைவுநாள் விழாவினைத் தங்கள் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் 18-7-81-ம் நாள் சிறுறக் கொண்டாடவிருப்பதுகேட்டு இறும்பூதெய்துகிறேன். தமிழிருக்குங்காலமெல்லாம் அவர் புகழிருக்கும்.

கத்தோலிக்கர்களாகிய நாம் வீரமாமுனிவரின் வழித்தோன்றலாக நம் தமிழ்த் தூதுவரைப்போற்றி புகழ்ந்து பெருமைப்பட வாய்ப்புண்டு.

தழ்ழகத்தில் அவருடைய தமிழ்த்தொண்டை ஆராய்ச்சியாளர் உலகம் நினைவிற்கொண்டு போற்றும் என்பதில் ஐயம் இல்லை.

விழா சிறக்க என் நல் வாழ்த்துக்கள்.

அன்புக்இனிய

ச. சாமிமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. சிவநாதன்

### கல்வி அதிபதியின்

# ஆசிச்செய்தி



தமிழர் அல்லாதோரும் தமிழின் சுவைகண்டு, தமிழ்மொழியை ஆய்வு செய்யும் அளவிற்கு இன்று ஈடுபாடு கொண்டுள்ளனர். ஐரோப்பிய மொழிகளிலே இலத்தீன் வகிக்கும் இடத்தைத் தொன்மைவாய்ந்த தூய தமிழ்மொழி பெற்றிடத் தவறவில்லை. இவ்வாறெல்லாம் ஆய்வுசெய்து ஐரோப்பிய நாடெங்கும் தமிழ்த் தூது சென்று தமிழின் பெருமை உலகமே அறிந்து ஆய்வுசெய்ய வித்திட்ட பெருந்தகை தவத்திரு தனிநாயமே,

பன்மொழி அறிவும், நிறைந்த ஆய்வும், உண்மையை உள்ளபடி கூறும் உரமும், முற்றுந்துறத்த முனித்துவ வாழ்வும் தனித்துவமாயக் கொண்ட பேரறிஞர் தவத்திரு தனிநாயக அடிகளார்க்கு நினைவுமலர் வெளியிட யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் முன்வந்தமை பாராட்டிற் குரியதாகும்.

காலத்தாலழியாத கருத்துக்களையும், தமிழ் உள்ளவும் தனித்துவமாய்க் கணிக்கப்படும் பேற்றினையும் பெற்றிட்ட பேராழி விண்ணுலகு சென்றிட்டாலும் அவர் செய்த பணிகள் சிறப்பாகத் தமிழுக்குச்செய்த தொண்டுகள் ஒருபோதும் அழிவுறுது நிலைத்து நின்று உலகினை உய்விக்க வழிகாட்டும்.

எதிர்கால வாரிசுகள் தமிழின் பெருமையினையும், அப்பெருமையை ஐரோப்பியரும் அறியச்செய்த அண்ணல் தவத்திரு தனிநாயகத்தையும் கண்டறிந்து அடியொற்றி இன்புற்று வாழ இந்த நினைவுமலர் துணைபுரிவதாக.

தமிழறிந்த தனிநாயக அண்ணல் நாமம் நின்று நிலைத்திடுக.

க, சிவநாதன்

வடமாநிலம்
கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்
01-07-1981.

# யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க பரிபாலகரின் ஆசியுரை



ஈழத் தமிழ்த் தாய் பெற்றெடுத்த தவப் பெரும் புதல்வன். தமிழ்த் தொண்டு செய்த துறவிகளிலே தனிச்சிறப்பு மிக்கவர். தமிழ்மொழியின் தனிச் சிறப்பை உலகெல்லாம் பரப்பியவர். தமிழ் மக்களின் இன்னல்களிலே அக்கறையும், ஈடுபாடும் கொண்டவர். **1956**ல் காலிமுகத் திடலிலே தமிழ்மக்கள் தெரிவித்த எதிர்ப்பிலே கத்தோலிக்க துறவிகளுக்கும் முக்கிய பங்குண்டு என்பதை நாடு முழுவதும் அறியச்செய்ய அவரும் அதிலே பங்கெடுத்தார்.

அமைதியின் உருவம். ஆனால் அறிவும் ஆற்றலுமிக்கவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு வித்திட்டு அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்.


இப்படிப்பட்ட ஒரு பெரியாருக்கு யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் நினைவு விழா எடுப்பது பொருத்தமிக்கதொரு செயலாகும். இத் தினத்திலே சங்கம் வெளியிடும் நினைவுமலர் பயன்மிக்கதொன்று என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இவ்வாறான முயற்சியிலே எமது கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பல தொல்லைகள் மத்தியிலே அடியெடுத்து வைத்ததற்கு என் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். வாழ்க யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம். வளர்க அதன் பணிகள் பாரிலே.

**அருட்திரு. யே. நீக்கிலஸ்**
பரிபாலகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா. ம. மா. சு. ஆசிரியர் சங்கத்

## தலைவரின் ஆசிச்செய்தி



தமிழ் வரலாற்றில் எவருமே செய்யாத, செயய் இயலாத ஒன்றைச் செய்தவர் தவத்திரு தனிநாயக அடிகளார் " தமிழ்த்தூது " தனிநாயகத்துக்கே உரிய தனித்துவம். தமிழ்கூறு நல்லுலகத்தின் பரப்பை விரிவாக்கியவர். கிறிஸ்துவின் துறவியாக அவர் பெற்ற அழைப்பில் ' தமிழ் செய்து ' இறைவனுக்கு புகழ்ச்சிப் பலி செலுத்தினார்.

உலகத் தமிழும், தமிழரும் விடுதலைபெற விரும்பினார். அதற்காக உழைத்தார். எதிர் கொண்ட தடைக்கற்களை உறுதியுடன் தாண்டிப் பயணம் செய்தார். இசை பட வாழ்ந்தார்.

தமிழரையும், தமிழைப்பற்றித் தெரிந்தோர்களையும், உலகளாவிய முறையில் ஒன்றுகூட்டிய ' தனிநாயகப்பணி ' தமிழ் உள்ளவரை நிலைத்திருக்கும். தமிழ் ஆய்வும், தமிழ்ப் பண்பும் தழைக்க உழைத்த அவர் பணியில் தொடர நாம் உறுதி கொள்வோம்.


இந்த ஆண்டின் சிறப்பு நிகழ்ச்சியாக அடிகளாருக்கு விழா எடுக்க சங்கம் நினைத்தது சாலவும் பொருத்தமானது.

விழாவிலும், மலர் வெளியீட்டிலும், கொடித்தினம், சிட்டிழுப்பு என்பவற்றிலும் உறுதுணையாக நின்ற ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், குரவர்களுக்கும், துறவியர்களுக்கும் நன்றி.

அடிகளாரின் ஆவல் நிறைவு பெறுக.

ஆர். யோசவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுச் செயலாளரின்

# சுருளோலையிலிருந்து சிதறிய சில

ஆண்டொன்று அகவைவெய்தி மீண்ட ஒரு வருடத்தில் உங்கள் முன் அடியெடுத்து வைக்கும் நீண்ட இடைவெளியில் நினைத்திடவேண்டிய உள்ளத்துணர்வுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள அரியதொரு சந்தர்ப்பத்தினை அளித்திட்ட அமலனுக்கு அனந்தகோடி நமஸ்காரம்.

30-07-80இல் முடிவுற்ற முதலாண்டு நிறைவினிலே, மீண்டுமொரு முறை பணிபுரியத் தாய்ச்சங்க நிர்வாகிகளுக்கு வாய்ப்பளித்த பொதுச்சபை உறுப்பினர்க்கு உளமார்ந்த நன்றிகள். 1981ஆம் ஆண்டின் செயற்றிட்டங்களைத் திட்டவெனக் கூடிய செயற்குழுவின் முதலாவது கூட்டத்திலே தமிழ்த் தொண்டு புரிந்த கிறிஸ்தவ அறிஞர்களைக் கௌரவிக்கும் வகையிலே விழாவொன்றை எடுப்பதென்று தீர்மானித்தோம். தீர்மானத்தைச் செயற்படுத்த முயன்றுவரும் வேளையிலே உலகெங்கும் வாழும் தமிழின்சுவை கண்ட தமிழபிமானிகள் அத்தனைபேரும். துன்பக்கடலில் மூழ்கித் தவிக்க 01-09-1980இல் தவத்திரு தனிநாயக அடிகளார் இறைவன் இணையடியில் இரண்டறக் கலந்து உலகையே ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டார். இத்துயர் எமது சங்கச் செயற்பாட்டிலும் பெருமாற்றத்தை ஏற்படுத்தியது.

கிறிஸ்தவ தமிழறிஞர்கட்கு எடுக்கும் பெருவிழா தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகளின் நினைவு விழாவாக மாற்றியமைக்கப்பட்டது. யாழ் நகரின் நுழைவாயிலிலே சிலையமைத்தல், வீரசிங்கம் மண்டபத்தில் கருத்தரங்கு, றிம்மர் மண்டபத்தில் கண்காட்சி, பொது திறந்த வெளியரங்கில் கலை கலாச்சார நிகழ்ச்சி, மாணவரிடையே கட்டுரைப் போட்டி, கொடித்தினம் என்றவகையிலே விழா நிகழ்ச்சிப் பட்டியல் நீண்டது. செயற்குழுக்கள் அமைக்கப்பட்டன. மண்டப ஒழுங்குகள், முற்பணக் கொடுப்பனவுகள், கண்காட்சி அமைப்புப் பிரிவுகள், ஒவ்வொரு பிரிவுக்குமான விடய விளக்கங்கள் அத்தனையும் பகிர்ந்தளித்து தீவிரமாய்ச் செயற்பாடுகள் செய்யப்பட்டன..

30-05-81இல் தவத்திரு தனிநாயக அடிகளாரின் அரும்பெரும் சேவைகளை அலகிட்டு நான்கு பிரிவுகளில் மாணவரிடையே கட்டுரைப்போட்டி நிகழ விண்ணப்பங்கள் கோரப்பட்டன. 17 கிளைகளும் பங்கு பெற்றன. நான்கு பிரிவுகளிலும் 1627 போட்டியாளர் கலந்துகொண்டனர். மாவட்டரீதிலும், கிளை ரீதியிலும் தெரிவுகள் நடைபெற்றன. போட்டி முடிவுகளை மலரின் பிறிதோர் பக்கத்தில் காணலாம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு செயற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டு வரும் வேளையிலே நினைப்ப தெல்லாம் நடந்து விட்டால்......என்ற வாறு இறை நாட்டம் வேறுவகையில் அமைந்துவிட்டது. கட்டவிழ்த்து விட்ட காடையர் கூட்டம், சீருடை களைந்த சிறு மதியாளர் கும்பல் ஆகியன சேர்ந்து ஆடிய வெறியாட்டத்தில் தீவைப்பு, கடையுடைப்பு, கொலை, கொள்ளை அத்தனையும் நிகழ்ந்து யுத்தத்தின் பின்னர் வானம் பார்த்த பூமியாய் நிற்கும் நகரினையொத்த நிலை யாழ் நகருக்கு ஏற்பட்டது. அறிவுப் பசியகற்றும் அறிவாலயமாய் விளங்கிய அருட்திரு. ரி. எம். எவ். லோங் அடிகளாரின் கண்ணின் மணியெனக் கட்டிக் காக்கப் பட்ட யாழ் நூலகம் தீயில் வெந்து சாம்பராகியது. தீபற்றிய செய்தி திக்கெட்டும் பரவ, அச்செய்திகேட்ட கலாநிதி அருட் திரு தாவீது அடிகளார் ஆற்ருது ஆருயிர் நீக்க மக்கள் வெள்ளம் மனமுடைந்து, பொருளிழந்து, உயிரிழந்து வாடிவதங்கிக் கருகிச் சுருண்டு கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சிதரும் வேளையிலே யாழ் நகரில் விழாவா?

கேள்விக்கணைகள் திருவர்கிகள் நெஞ்சங்களிலே பாய்ச்சப்பட்டன. கூடியது செயற்குழு. ''விழாவைப் பின்போடுவோம்'' 'திட்டமிட்டதுபோல் ஆடம்பரமற்ற அமைதி விழாவாக நிகழ்த்துவோம்' என்ற குரல்கள் எதிரொலித்தன. நீண்ட கலந்துரையாடலின் பின் குறிப்பிட்ட தினத்திலே ஆடம்பரமற்ற வகையில் அமைதியான முறையில் புனித பத்திரிசியார் கல்லூரியிலேயே நடத்துங்கள் என்று பணித்தது செயற்குழு. பணிப்புரைக்கமைய அமைதியான சூழ்நிலையில் ஆடம்பரங்களைக் குறைத்து இவ்வாறு செயற்பட்டோம்.

கொடி அணிவிப்பு மூலம் அடிகளா-ரை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலே கொடித்தினம் பாடசாலை மட்டத்தில் 19-06-81இலும், பங்குத்தளங்களில் 21-06-82 இலும் பரவலாக்கப்பட்டது. கொடித்தினத்தைப் பாடசாலைகளும் பங்குத்தளங்களும் பயனுடைய தினங்களாக்கிப் பணியாற்றியமை பலரினதும் பாராட்டிற்குரியதாக அமைந்திருந்தது.

கட்டுரைப் போட்டியில் மாணவர் அல்லாதோரும் பங்குகொள்ள வாய்ப்புக் கிட்டவில்லையென்று குரலெழுப்பப்பட்டது. பாடசாலை மட்டத்திலென்னும் செயற்குழுவின் தீர்மானத்தைத் திடீரென மாற்றியமைக்க அவகாசமில்லாமைக்கு வருந்துகின்றோம். எதிர் காலத்தில் இவற்றிற்கும் ஏற்புடையன செய்யப்படுமென்று கூறிவைக்கின்றோம்.

நிதிசேகரிக்க வேறு கதியில்லையென்று அதிட்ட இலாபச் சீட்டை மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். 1980ஆம் ஆண்டில் இதற்குக் கிடைத்த ஒத்துழைப்பும் ஆர்வமும் இம்முறை கிட்டவில்லையென்பதை ஆழ்ந்த கவலையுடன் வெளியிடும் வேளையில், பலகிளைகள் ஆர்வமுடன் காட்டிய ஒத்துழைப்பையும் நாம் மறந்துவிட முடியாது.

நினைவு மலர் வெளியீடு எமது நிதியில் பெரும் பாகத்தைக் கரைத்துள்ளமையால் இம்முறை நினைவுமலரை இலவசமாக விநியோகிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். கிளைகள் செயற்குழுவில் தீர்மானித்தபடி மலரின் பெறுமானத்தின் ஒரு பகுதியையாவது தந்துதவிச் சங்க நிதிநிலையை உறுதிப்படுத்த ஆவன செய்ய அன்புடன் வேண்டுகின்றோம்.

சங்கத்தின் வளர்ச்சி உறுப்பினர்காட்டும் ஆர்வமிகு உழைப்பிலேயே உரமிடப்படல் வேண்டும். அங்கத்துவ பலமும் அவர்தம் உழைப்புமே சங்க வளர்ச்சியின் தலைக்கூறுகள். இன்னும் பலர் ஏனோ தானோ என்ற வகையில் ஆட்டுக்குத் தீர்ந்தது. குட்டிக்குந் தானே என்று ஒதுங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியதன்று. கத்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிக்க ஆசிரியர் அனைவரும் ஒரேயணியிற் திரண்டு ''ஆசிரியன் வழிகாட்டும் ஊழியன்'' என்ற விருதுவாக்கை இலட்சிய வாக்காகக் கொண்டு அணிதிரளும் நாளே எமது இலட்சியம் கைகூடும் வெற்றித்திருநாளாயமையும். மன்னர் மறைமாவட்டம் பிரிந்து தனித்தியங்கவேண்டிய இறைசித்தம் நெருங்கியுள்ள வேளையிலே நான்கு கிளைகள் நம்மை விட்டுப் பிரியவேண்டிய சூழ்நிலையில் அங்கத்துவ பலம் குறைவடைவது நியாயமானதே. இருப்பினும் மறையாசிரியர்களும், பயிற்சி பெறும் ஆசிரியர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் சங்கத்திற் சேர்ந்து உறுப்பினராய் விளங்கக்கூடிய சாத்தியக் கூறுகள் சங்க யாப்பில் அமைந்திருந்தாலும் இத்தன்மையோர் எத்தனைபேர் உறுப்பினராயுள்ளனரென்பதை உங்கள் சிந்தைக்கு விட்டு வைக்கிறோம். அங்கத்துவ பலத்திலேயே சங்கத்தின் முழுச் சக்தியும் முடங்கியுள்ளமையால் ஒவ்வொருவரும் இதனை உய்த்துணர்ந்து இன்னுமொருவரை உறுப்பினராக்க முயலுவார்களேயாயின் எமது பலம் என்றும் குறைவுபடாது. எதிர்வரும் ஆண்டு நிறைவு விழாவிலே ஏராளமான உறுப்பினர் அங்கத்துவம் பெற்றுப் புதுப் பொலிவுடன் சங்கம் வளர்ச்சியுற இறையாசியையும் உங்கள் அயரா உழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

நாம் நினைத்தவற்றை நினைத்தவாறே நிகழ்த்த முடியாதவர்களாயினும் நிமலா உன் சித்தத்தை நிறைவேற்றும் கருவிகளாய் இருந்தோம். என்றும் எம்மை ஆண்டு நடத்தியருள உமது மேலான அருளை நிதமும் நிறைவாக வேண்டி எமது நன்றித் துதிகளை உமது பாதத்தடியில் படைக்கின்றோம்..

எங்கள் சங்க முயற்சிகளில் எவ்வித சூழ்நிலையிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஆலோசனைகள் நல்கி எம்மை வழிநடத்தி எம்மை ஏற்றமுடன் மிளிரவைத்த யாழ் மறை ஆயர் அவர்கட்கு எமது இதயங்கனிந்த நன்றித் துதிகள் உரித்தாகுக.

சங்கமும் மறையும் தமதிரு கண்ணெனப் போற்றி எமது சுழற்சிகட்கெல்லாம் சுழன்று, எம்மை நெறிப்படுத்தி, என்றும் நேசக்கரம் நீட்டி அல்லும் பகலும் அயராதுழைக்கும் எம் பரிபாலகர் அருள்மிகு ஜே. நீக்கிலஸ் அடிகளாருக்கு அன்பு கலந்த நன்றித்துதிகள் நலமுடன் உரித்தாகுக.

பரந்து விரிந்த பங்குத் தளங்களிலே பணிபுரிந்து சங்கத்தின் வளர்ச்சியிலும் தளர்விலாதுழைத்து வரும் பங்குத் தந்தையர்க்கும் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக,

நிருவாக உறுப்பினர், சங்க உறுப்பினர் அத்தனைபேரினதும் அயரா உழைப்பின் அற்புதப் பேறே பொற்புறு சங்கம். அன்னோர்க்கு எஞ்ஞான்றும் நன்றிகள் உரித்தாகுக.

விழாச்சிறக்க, மலர் மலர, கட்டுரை கணிக்க, கொடியணிவிக்க, அதிட்டஇலா பச்சீட்டை அறிமுகம் செய்யக் குழுவாயும் தனித்தும் செயற்கரிய செய்துதவிய செம்மல்களுக்கு எமது மனமார்ந்த மங்கள வாழ்த்துகள் உரித்தாகுக.

குன்றிலிட்ட தீபமெனச் சங்கம் திசையனைத்தும் பரந்து விரிந்து நற்பயனை நம் சமூகத்திற்களித்திட வாழ்த்தி விடைபெறுபவர்

உங்கள் சேவைக்குரிய
**சி. வின்சென்ற்,**
பொதுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆய்வுக் கட்டுரை

பேராசிரியர், கலாநிதி

**கா. சிவத்தம்பி**

---

அடிகளார்

# மாட்சி விதப்புரைகள்

1. தவத்திரு ஜே. ஏ. கருணாகர அடிகள்
2. தவத்திரு கலாநிதி அந்தனி அழகரசன் அடிகள்
3. பேராசிரியர் பொன். கோதண்டராமன்
4. வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா
5. புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம்
6. பண்டிதர் ஆசிநாதர்
7. வித்துவான் அடைக்கலமுத்து
8. திருமதி நிர்மலா இராசரத்தினம்
9. திரு. ஏ. வி. பி கோமஸ்
10. அருட்சகோதரி பெனடிக்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயகம் அடிகளின் அழைப்பு

# சில வரலாற்றுக் குறிப்புகள்

## 1928--1938

### தமிழ்ப்பணி திருப்பணி இறைபணி

தனிநாயகம் அடிகட்குத் தமிழ்ப்பணி, திருப்பணி, இறைபணி ; தமிழ்த்தொண்டு, திருத்தொண்டு, இறைத்தொண்டு; தமிழ்த் தூது, திருத்தூது ; இறைவாக்கினர், வான தூதர் வரிசையில் வந்தது. இறைமகன் இயேசு உரைத்த பெரும்தூது ; காலப்போக்கில் அதன் எதிரொலியாக அமையும் தூது.

'' என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே''

என்ற திருமூலர் கூற்றைக்கொண்டு அவரது அழைப்பை நோக்காதவர் தனிநாயக அடிகளின் வாழ்க்கையைத் தக்கவாறு எடைபோட முடியாது. அவரை ஒரு சாதாரண தமிழ்ப் பெரியாராகவோ, தொண்டராகவோ, தமிழுக்காக — தமிழ்ப் பண்பாட்டிற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த ஒரு தியாகச் செம்மலாகவோ கருதுவது, அவரையும் அவர் வாழ்வையும் மேலெழுந்தவாரியாகக் கணிப்பதாகும். எவ்வாறு திருமூலருக்கு இக்கூற்று ஒரு வெறும் அணியலங்காரமாக அமையவில்லையோ, அவ்வாறு அதே அளவுக்குத் தனிநாயக அடிகள் இக்கூற்றை மேற்கோளாக எடுத்தபொழுது அவருக்கும் இஃதோர் வாழ்க்கை அனுபவமாக அமைந்தது. இஃதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர் அவருக்குப்பெரும் தவறு இழைப்பர் ; இறைவனுக்கே தவறு இழைப்பர் ; ஏனெனில் இளந் துடிப்புள்ள வாலிபவயதில் இறையடியார்கள், இறைவாக்கினர் முதலானோரை அழைத்த அதே கடவுள், அவரையும் தமது திருப்பணிக்கு அழைத்தார். ஆகவே அவர் அவ்வழைப்பைத் தொடர்ந்து ஆற்றியபணி யாவும் தன்னை ஆட்கொண்டு நடத்திய இறைவனுக்கே உரியது. இறைவனுக்கு உரியதைத் தமிழ்மொழிக்குச் சொந்தமாக்குவது இறைவனுக்கே தவறு இழைப்பதாகும். திருமந்திரத்திலேயே தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு என்று திருமூலர் தனது தமிழ்ப்பணியை இறைபணியாகச் சுட்டிஉரைப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

### டால்ஸ்டாயின் நாவல் தந்த திருப்பம் :

அப்பொழுது அவருக்கு வயது பதினைந்து. கதைகளைப் படிப்பதில் அவ்வயதுக்குத்தக்க ஆர்வமும் ஈடுபாடும் அவரைத் தூண்டின. லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) எழுதிய உயிர்ப்பு (Resurrection) என்றநாவலை அவர் படிக்க நேர்ந்தது. அக்கதை அவருக்கு ஒரு புதிய அனுபவத்தை அளித்தது. இவ்வனுபவமே அவருக்கு இறைவனின் அழைப்பாக அமைந்தது. இவ்வழைப்புக்கிணங்க அவர் தனது பள்ளிப்படிப்பை முடித்ததும் இறைவன் திருப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார். எரேமியாசுக்குப் போலவே கடவுளின் அழைப்பு அவருக்கும் கரடுமுரடான ஒரு பாதையைத் திறந்தது. சிறிதுகாலம் யாழ்நகரில், காலஞ்சென்ற எமிலியானஸ் ஆண்டகை இளங்குருவாகப் பணியாற்றுகையில் ஆரம்ப குருத்துவக் கல்வியில் அவரால் நெறிப்படுத்தப்பட்டார். அதன் பின்னர் கொழும்பு புனித பெர்ணட் குருமாணவர் மடத்தில் மெய்யியல் படிப்பை முடித்ததும், கடும் சோதனையொன்று அவரை எதிர்கொண்டு வந்தது. அவரைத் திருப்பணிக்கு அழைத்த அதேஆயர் கியோமார் ஆண்டகை அவ்வழைப்பைத் தொடர்ந்து ஆதரிக்க மறுத்துவிட்டார். அதுமட்டுமன்று ! இலங்கையில் எந்த மறைமாவட்டத்திலும் அவருக்கு இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி மறுக்கப்படும் ஒரு சூழ்நிலை அக்காலத்தில் நிலவியது. இறைவாக்கினர் எரேமியாஸ் நாடுகடத்தப்படும் துன்பநிலைக்கு உள்ளானதுபோல இவரும் இறைபணியைத் தொடர்ந்து பின்பற்றத் தன் சொந்த ஊரையும், பெற்ற தாய்நாட்டையும் துறந்து செல்லும் துன்பம் நிறைந்த துறவறத்தின் ஓர் உச்சக்கட்டத்திற்குத் தள்ளப்பட்டார். அவரோ பின்வாங்கியவர் அல்லர். இறைவனும் அவரைக் கைவிடவில்லை. இவ்விக்கட்டான நிலையில் அக்காலத்து சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரும், பெருந்தகையுமான மத்தியூஸ் அடிகளார் அவருக்கு ஊக்கமளித்து உறுதுணையாய் நின்றார். காலஞ்சென்ற செபஸ்ரியன், ஏபிரகாம், பெஞ்சமின் ஆகிய யாழ். மறைமாவட்ட பழம்பெரும் தந்தையரும் நாட்டைத் துறக்கநேர்ந்தாலும் ஏற்ற தொண்டைக் கைவிடாதவாறு அவரை நெறிப்படுத்திக் காத்தனர்.

## இறைவனது திருவிளையாடல் :

புறக்கணிக்கப்பட்ட கல்லையே வீட்டுக்கு மூலைக்கல்லாக்கும் இறைவனின் திருவிளையாடலை இங்கும் காணலாம். விரைவில் இவர் மார் இவானியோஸ் (Mar Ivanios) என்ற இந்தியப் பேராயரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தனது குருத்துவப் பயிற்சியைத்தொடர உரோமைக்கு அனுப்பப்பட்டார், அங்கு அவர் தன்னைப் புறக்கணித்த தனது தாயகத்தை மறக்கவில்லை. தன்னைப்பெற்ற யாழ். மறைமாவட்டத்துக்கே முதற்கண் அருஞ்சேவை செய்தார். இச்சேவையின் பயனாக இறைவனின் இரகசிய திட்டப்படி தற்போதைய யாழ். ஆயர், திருமலை ஆயர் முதலானோரும் இன்னும் பலரும் அதே கல்லூரியில் இறையியல் கல்வித்திறன் பெற்று இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் திருச்சபையை முன்னேற்றக் கடவுள் கைக்கு ஏற்ற கருவியானார்.

## சுற்றுமதில் எதிரொலிக்கச் சொற்பெருக்கு:

இவர் எவ்வாறு இறைவனை நன்றாகத் தமிழ்செய்ய முன்வந்தார் என்பதைப் புரிந்து கொள்ள இவரது போக்கை மாணவப் பருவம்தொட்டுக் கவனிப்பது நன்று. யாழ்நகரில் படிக்கும் காலத்திலேயே இவர் அறிவாற்றலில் மட்டுமன்று, ஆர்வத்திலும் மனஉறுதியிலும் தலைசிறந்து விளங்கினார். அன்று உயர்தர மறைக்கல்விப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், பேச்சுப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் ஒருங்கே பெற்றும், "Bottled Sunshine" எனும் மாணவர்விகட வெளியீட்டின் ஆசிரியராக விளங்கி தனது அறிவாற்றலையும், ஆர்வத் துடிப்பையும் வெளிப்படுத்தினார். தனக்கிருந்த அறிவாற்றலை நெறிப்படுத்துவதிலும்: தனது ஆர்வத்தைத் தக்க துறைகளில் தேர்ந்து அவ்வத் துறையில் செலுத்தும் ஒரு போக்கும் இவர் வாழ்வின் எல்லாக் காலகட்டங்களிலும் காணப்பட்டதொன்று. மற்றமாணவர் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் டெமாஸ்தனிஸ் கடல் இரைச்சலை எதிர்த்துப் பேசிப் பயின்றதுபோல, இவர் தென்னஞ்சோலையில் உலாவிக்கொண்டு சுற்று மதில் எதிரொலிக்கச் சொற்பெருக்காற்றுவார். கொழும்பிலும் கல்விமான்கள், நூல் நிலையங்களை அணுகித் தனது கல்வியிலும், பண்பாடு மேம்பாட்டிலும் கண்ணும் கருத்துமாயிருந்து ஏனையவர்களைவிடத் தனக்கே சொந்தமான தனி ஆற்றலாலும், ஆர்வத்தாலும் ஆச்சரியப்படத்தக்க அளவு முன்னேறினார். இவருடைய ஆர்வமே அங்கு வருகை தந்திருந்த இந்தியப் பேராயர் மார் இவானியோஸ்மட்டில் இவர் பெரும்கவர்ச்சி கொள்ளவும் தனக்கிருந்த இக்கட்டான நிலையில் அவரை நாடவும் உதவியது.

## மன உறுதியால் முன்னேற்றம் :

இச்சந்தர்ப்பத்தில் போலவே மீண்டும் மீண்டும் இவர் வாழ்வில் கடவுளுடைய இரகசிய வழிநடத்துதலுக்கு இவரை ஆளாக்கியது ஒன்று இவரது தளராத மனஉறுதி. குருத்துவத் திருப்பணியைத் தேர்ந்து கொண்ட இவர் அது மறுக்கப்பட்டபோது அதனைக் கைவிடாது பின்பற்றியமை இவருக்கும், இவரைப் பெற்றெடுத்த இலங்கைத் தமிழ்த் திருச்சபைக்கும் எதிர்பாராத முன்னேற்றம் அளித்தது இங்கு கவனிக்கத்தக்கது. கொழும்போடு நிற்கவிருந்த இவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவப்பயிற்சி உரோமைவரையும் சென்றதற்குக் கடவுளுக்கடுத்து இது ஒரு காரணம். அடுத்ததாக அவரை மாறிமாறி ஆட்டிவைத்தது அவருக்கே சொந்தமான ஓர் ஆர்வத்துடிப்பு. தன்னைத் தூண்டும் ஒருநல்ல காரியத்தை, நல்லபணியை எங்கு எப்போது காணநேர்ந்ததோ, அங்கு அப்போது அவர் ஒரு வெறிகொண்டவன்போல அதிலே தன்னை முற்றும் மறந்தவராய் குதிக்கும்குணம் உடையவராய் இருந்தார்.

## "இறையரசு வருது"

மார் இவானியோஸ் மலையாள பிரிவினைத் திருச்சபையில் ஒரு பெரும் கருதினல் நியூமன் போன்று விளங்கியவர். அவருடைய கல்வி அறிவும், கம்பீரமான தோற்றமும், பேச்சுவன்மையும் அவர் கையாண்ட இந்திய-இலங்கை பண்பாட்டில் வளர்ந்தவர்களின் கண்ணைக்கவரும் சீரோ மலங்கார த் (Syro-Malankara Rite) திருமுறையும் எப்படி இந்த இளங் குருமாணவன் அவரைப் பின்பற்ற வைத்ததோ, அதுபோலவே உரோமைக்கு வந்ததும் அங்கு சிறந்து விளங்கிய இறையியல் பேராசிரியர்கட்கு மாறி மாறி இவரை அடிமையாக்கியது இவரது ஆர்வ வெறி. முதற்கண் திருமுழுக்கு அருளப்பர் இறைமகன் இயேசுபோன்று, "இதோ இறையரசு விந்துவிட்டது, வருகிறது, வரப் போகிறது" என்று திருஏட்டுக்குக் கவர்ச்சியான, புதிய, புரட்சிகரமான விளக்கம் அளித்துவந்த ஸ்பானிய பேராசிரியர் யோசவ் இராமோஸ் (Prof. Joseph Ramos) என்றவர் இவருக்குத் தனிப்பெரும் குருவானர். அவரோ மிகச் சிறியவர். தோற்றமே அற்றவர் எனலாம். மிக எளிமையான போக்குடையவர். பேச்சுவன்மையோ, குரல் வளமோ அவருக்கில்லை. மதிய உணவுக்குப் பின் முதல்வரும் அவரது பாடத்துக்குத் தவருது பிந்தியே வருபவர். இவர் தொலையில் காணப்பட்டவுடனேயே "இறையரசு வருகுது" என்று கேலியாக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு மாணவர் ஓடோடிவந்து சண்டையிட்டு முன் இருக்கைகளைப் பிடிப்பர். இதற்கெல்லாம் காரணம் ஒருபுறம் எல்லா மாணவர்க்கும் தெளிவாகக் கேட்க உரையாடும் குரல் வன்மையும், திறமையும் இப்பேராசிரியருக்கு இல்லாமை. மறுபுறம் திருஏட்டிற்கு இவர் அளிக்கும் உரையோ மிகச்சிறந்தது. புத்திக்கூர்மையும், திருஏட்டைக் கசடறக்கற்று அதில் அடங்கிய பல்வேறு பகுதிகளும் ஒன்றோடொன்று முரணுகக் காணப்படும் கூற்றுக்களும், இவரது புதிய புரட்சிகரமான உரையில் விளக்கமும், தெளிவும், பொருத்தமும் பெற்றுக், கேட்போர் மனதைக் கவர்ந்தமை. திருவெளிப்பாடு 20: 1—5 குறிப்பிடும் ஆயிரம் ஆண்டு கால ஆட்சி ஏனைய உரையாசிரியர்களுக்கு வெறும் பேதகக் கொள்கை. இவருக்கோ இதுவே இறைவாக்கினர் யாவருடையவும் கூற்றுக்களின் நிறைவு. உமது அரசு வருக என இறைஞ்சுமாறு கற்பித்த இயேசுபெருமான் எம்மைக் காணவைத்த கனவின் நனவு. கடவுளின் அரசு அண்மையில் உள்ளது என்று இயேசு போதிக்கத் தொடங்கினதின் தெளிவு. இப்பேராசிரியர் வாயிலும், பேச்சிலும் இது ஒரே பல்லவி. இதற்காகவே அவர் வருகிறுர் என்றதை மாணவர் கேலியாக "இறையரசு வருது" என்று சொல்லிக்கொள்வர். இக்கேலியின் மத்தியிலும் மாணவரிடையே இனியில்லைஎன்ற செல்வாக்கும், பெருமதிப்பும் இவருக்கிருந்தது. இம் மதிப்பையும், செல்வாக்கையும் அளிப்பதிலும் தலைசிறந்து விளங்கினர் எமது குரு மாணவர். இறையியல் படிப்பு முடித்து 1938-ம் ஆண்டு பங்குனித்திங்கள் குருவாகத் திருநிலைப்படுத்தப்படமுன் அதேஆண்டு தைத்திங்கள் 23-ம்நாள் திகதியிடப்பட்ட தன் அருமைப் பேராசிரியர் முகவுரையுடன் திருவெளிப்பாட்டுக்கு அவர் அளித்த உரையை ரொபேட் அல்போர்ட் (Robert-Alford) என்ற அவுஸ்திரேலிய சகமாணவரது உதவியுடன் உரோமையில், இலத்தீன் மொழியில் (Apocalypsis Schematica Explanatio, Rome 1938) "திருவெளிப்பாட்டு உரைச்சுருக்கம்" என்றநூலை அச்சேற்றித் தனது நூல் வெளியீட்டுப்பணியை அன்றே தொடங்கிவைத்தார், சேவியர் இஸ்ரனிஸ்லஸ் என அழைக்கப்பட்ட எமது மாணவர் திலகம், வருங்காலத் தமிழ்த்தூது தனிநாயக அடிகள்.

ஜோ. அ. கருணுகரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுப் பொருளாளர் கூறுவது :

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பது பெரியார் கூற்று.

எம் சங்கம் தொடங்கிய ஓராண்டு காலத்துள் எழுச்சி மாநாடு ஒன்றை நடத்தவும் சாதனைகள் சிலவற்றை நிறைவேற்றவும் பெரும் பொருள் வேண்டியிருந்தது.

அதிட்ட லாபச்சீட்டு, ஆண்டுச்சந்தா, விளம்பர சேகரிப்பு, உப கரிப்புகள் என்ற வகையில் ரூபா 24,492-00 ஐச் சேகரிக்க உதவிய ஆசிரியப் பெருந்தகைகளினதும், மாணவமணிகளதும், அன்பர்களதும் அருஞ் சேவையை நாம் என்றுமே மறக்கவியலாது. இப்பணத்தில் ரூபா 19,532-30 சதம் முதலாண்டுச் செலவாகியது.

இன்று எம் சங்கம் தவத்திரு தனிநாயக அடிகளார்க்கு எடுக்கும் விழாவின் செலவினங்களைப் பகிர்த்துகொள்ளுமுகமாக அதிட்ட லாபச் சீட்டு, கொடித்தினம் என்பவற்றில் எம்முடன் ஒத்துழைத்த அபிமானிகள் அனைவர்க்கும் தாய்ச்சங்கச் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த நன்றித்துதிகளைக் கூறி நிற்கின்றேன்.

வணக்கம்.

**அ. யோசவ்,**
பொதுப் பொருளாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா. ம. மா. க. ஆ. சங்க ஆண்டு விழா



யா. ம. மா. க. ஆ. சங்க எழுச்சிமாநாடு



10—05—1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநாயக அடிகளார் மிகவிரும்பிய ஒருதுறையில் ஆய்ந்து கட்டுரை வடிவில் சமர்ப்பிக்கிருர் :

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் கலாநிதி
கா. சிவத்தம்பி

# தமிழ் இலக்கியத்தில் மதங்களின் பங்கு

## I

கட்டுரையின் தலைப்பினை நோக்கும் பொழுது, சைவம், வைஷ்ணவம் முதலாம் அறுவகை வைதிக மதங்களும் அவற்றின் உட்பிரிவுகளும், அவைதிக மதங்களெனக் கொள்ளப்படுபவையான ஆசீவகம், சமணம், பௌத்தம் என்பனவும் இப்பெரும் பாரியத்தினுள் வராதனவாகிய சிறு தெய்வ வழிபாடுகளும் இவற்றைவிட இந்தியப் பெரும் பாரியத்தினின்றும் தோன்ருத ஆனல் இன்று இந்திய வரலாற்றுள் இணைந்து விளங்கும் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களும் தமிழ் இலக்கியப் பரப்பிலும் பொருளிலும் முக்கியமாக தமிழ் மக்களின் இலக்கிய அனுபவத்திலும் ஏற்படுத்திய விஸ்தரிப்புக்களைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் எனக் கூறலாம். ஆனல் அத்தகைய ஒரு விவரண ஆய்வினை மேற்கொள்ளாது, மதம், இலக்கியம் ஆகிய இவ்விரண்டும் எவ்வகையில் " பண்பாடு " என்பதன் அங்கங்களாக விளங்குகின்றன என்பதையும், பண்பாட்டின் அங்கங்கள் என்ற வகையில் ஒன்று மற்றதற்கு எத்துணை அத்தியாவசியமாக அமைகின்றதென்பதனையும், இப்பரஸ்பரக் கட்டுப்பாடு தமிழ் இலக்கியத்திலே எவ்வாறு தொழிற்பட்டுள்ளது என்பதனையும் சிறிது சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரை ஆசிரியனின் நோக்கமாகும்.

## II

மதமோ, இலக்கியமோ தமக்கென முற்றிலும் தனியான ஒரு இயக்குதளத்தைக் கொண்டனவன்று. சமூகம் என்னும் மனிதக்குழுமமுழுமையின் பல்வேறு பரிமாணங்களில் இரண்டே இவை. சமூக வாழ்க்கையே இவை இரண்டுக்கும் அடிப்படை.

" பண்பாடு " என்னும் மனிதவாழ்க்கைக்கோலத்தின் இரண்டு முகிழ்ப்புக்களே மதமும் இலக்கியமும்; பண்பாடு என்னும் வட்டத்திற்குள்ளேயே இவை இயங்கும்.

சமூகவியல், மானிடவியற்றுறைகளில் பண்பாடு என்பது " உயர் வழக்குகள், கருத்துக்களா"கக் கொள்ளப்படுவதில்லை,

" பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப்பொருள்கள் ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியேயாகும். ஒரு கூட்டத்தினரின் பண்பாடு என்பது அக்கூட்டத்தினரின் தொழில்நுட்பவளர்ச்சி உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி விஞ்ஞானம், இலக்கியம், கலைகள்,

நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதி யாகும்.''

எனவே பண்பாடு என்ற பெருவட்டத்தினுள் மதம், இலக்கியம் எனுமிரண்டுமே வரும்,

இக்கட்டத்திலே மதம்பற்றிய வரைவிலக்கணம் ஒன்று அத்தியாவசியமாகின்றது. மத ஒப்பியலாய்வில் உலகப்பிரசித்தி பெற்ற பேராசிரியர் நினியன் ஸ்மாட் (Niniam Smart) அவர்கள் மதத்தின் இயல்பினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

'' மதம் என்பது ஆறு பரிமாணங்களைக் கொண்ட ஒன்றாகும். கோட்பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்கநெறிப் போதனைகள், சடங்குகள், சமூகநிறுவனங்கள், மத அநுபவம் தரும் உந்துதல் அல்லது இயக்கப்பாட்டுயிர்ப்பு என்பனவே அந்த ஆறு பரிமாணங்களுமாம்.''

பேராசிரியர் ஸ்மாட் எடுத்துக் கூறியுள்ள இவ் ஆறு அமிசங்களையும் பற்றி ஆழமாக நோக்கும்பொழுது, அவை வெளிப்படுத்தப்படுவதற்கும், பேணப்படுவதற்கும், கையளிக்கப்படுவதற்கும் அவை ஏதோ ஒரு வகையில் இலக்கியத்தை நம்பியிருக்க வேண்டுமென்பது தெரியவரும். அந்த வடிவம் வாய்மொழியாகவோ, எழுத்துமொழியாகவோ இருக்கலாம். அதுவும் அவை உயர்மதங்களாகவிருப்பின் (நாமும் இங்கு எம்மையறியாமலே உயர் மதங்களைப் பற்றியே சிந்திக்கின்றோம்) அவற்றுக்கு எழுத்தங்கிகாரம் இருப்பது அவசியமாகும். மதங்களின் ஊற்றுக்கால்களாகவிளங்கும் ''நூல்'', கள் அவ்வம்மதங்களில் பெறும் முக்கியத்துவத்தை நோக்கின் இவ்வுண்மை புரியும். விவிலியம், குர்ஆன், தம்மபதம், வேதங்கள் ஆகியன போற்றப்படும் முறையை நோக்குதல் வேண்டும்.

மதம் தரும் அநுபவத்தை வெளியிட மொழியைவிட வாய்ப்பான வாய்க்கால் வேறெதுவுமே இல்லை. 'சமாதி' நிலைகூட மொழித்தொடர்பை உள்ளடக்கியே நிற்கின்றது. மொழியாற்கூட எடுத்துக் கூறப்பட முடியாதது எனும் பொழுது மொழியின் சாதாரணத் தொடர்புநிலை முக்கியத்துவம் நன்கு புலப்படுகின்றது.

இவ்வுண்மையை இன்னுமொரு வகையிலும் நிறுவலாம்.

மதம் என்பது மூன்று அத்தியாவசிய அமிசங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை (Faith), இரண்டாவது சடங்குகள் (Ritnals). இந்தச் சடங்குகளுக்கு அத்தியாவசியமான ஐதீகங்கள் (Myths) இதற்குள்ளேயே அடங்கும். மூன்றாவது இவை இரண்டும் வளர்க்கும் அல்லது இவையிரண்டடியடியாக வளர்த்தெடுக்கப்பெறும் சமூகக் கண்ணோட்டம் அல்லது உலக நோக்கு (Weltenschaung). இம்மூன்றும் ஒருங்கிணையும் பொழுதே மதம் தொழிற்படும். இம்மூன்றினையும் பண்பாட்டிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது. சற்று ஆழமாக நோக்கினால் இலக்கியத்தின் உந்துசக்தியாகவும் களமாகவும் நம்பிக்கைகள், ஐதீகங்கள், உலகநோக்கு (இங்கு சமயச் சார்பற்ற விஞ்ஞான ரீதியான உலக நோக்குப் பற்றி நாம் குறிப்பிடவில்லை) விளங்கி வந்துள்ளன என்பது தெரியவரும், சமய இலக்கியக்கள் என நாம் கொள்வனவற்றில் இம்மூன்றும், விறகில் தீயாகவும், பாலிற்படு நெய்யாகவும் கிடப்பதை அவதானிக்கத் தவறமுடியாது.

இதனால் மதத்திற்கு இலக்கியம் அத்தியாவசியமான வெளிப்பாட்டு முறைமை என்பது புலனாகின்றது,

## III

அடுத்து இலக்கியத்தை நோக்குவோம். ஒரு சமூகம் நிலைபேறுடைய நிறுவனமாக இயங்குவதற்கும், அவ்வாறு இயங்கியுள்ளது என்பதை அறிவதற்கும், இலக்கியம் மிக முக்கியமானதாகும். இதனாலேயே இலக்கிய உருவாக்கமில்லாது சமூக உருவாக்கமில்லை யெனப் பேராசிரியர் றேமண்ட் வில்லியம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Raymond Williams) கூறுவர். அந்த இலக்கியம்வாய்மொழி இலக்கியமாகவோ, எழுத்து மொழி இலக்கியமாகவோ அமையலாம். வெளிப்பாட்டு முறைமை அமைவது வேறுபடினும், சமூக உருவாக்கத்திற்கு இலக்கியம் அத்தியாவசியமானதென்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

இலக்கியம் என்பது சமூக உணர்வுகளையும் சிந்தனைகளையும், அச்சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் உணர்ச்சிகளையும் மொழிக்குறியீடு கொண்டு தருவதாகும். "மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் உணர்ச்சிகள்" எனும்பொழுது உணர்ச்சிகள் சமூக உறவுகளினடியாகவே தோன்றுபவை என்பது நன்கு தெளிவாகின்றது. சமூக உறவுகளினடியாக வரும் தனிமனித உணர்ச்சிகள் என்று கூறும் பொழுது, அதற்குள் மதமும் தவிர்க்க முடியாதபடி இடம்பெற்று விடுகின்றது. ஏனெனில் குறிப்பிட்ட சமூகத்தின் உணர்வில், சிந்தனையில், அதன் நம்பிக்கைகள், சடங்குகள் உலகநோக்கு என்பன இன்றியமையாவகையில் ஆழமாக இடம்பெற்றுவிடும்.

இந்த நம்பிக்கைகள், சடங்குகள் உலக நோக்கு ஆதியன உற்பத்தி உறவுகளின் தன்மைக்கேற்றனவாகவே அமையும். உற்பத்தி உறவு மட்டத்தினின்றும் முற்றிலும் விடுபட்டனவாய் இவை இருத்தல்முடியாது.

எனவே இதுகாலவரை தோன்றிய இலக்கியங்கள் மத உணர்வுகளைப் பிரதிபலித்திருப்பது தவிர்க்க முடியாததாகும். இத்தகைய சூழ்நிலையில் இலக்கியத்தின் கனமாக மதம் (நம்பிக்கை, ஐதிகம், உலக நோக்கு) அமைவதில் ஆச்சரியமில்லை. இவ்வமைவு சமூகத்துக்குச் சமூகம் அதன் உற்பத்தி வளர்ச்சிக்கேற்ப மாறுபடும்.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் போழுது பாரம்பரிய சமூகங்களில் மதமும் இலக்கியமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக அமையும் நிலைமை புலனாகும்.

## IV

இந்தியாவின் இன்றைய நிலையில் மொழி வழிப் பண்பாடே முக்கியமான பகுதிநிலைக் கூறாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலைமை ஏற்படுவதற்கான சில அடிப்படைக்காரணங்கள் உள்ளன. "பண்பாடு" எனும் பொழுது அதன் முக்கியமான முகிழ்ப்பினை நாம் மொழியிலேயே காணலாம். அதாவது மொழி பண்பாட்டின் குறியீடாகின்றது. மேலும் பண்பாட்டின் தனித்துவமான தொழிற்பாட்டுக்கு மொழியே காரணியாகவும் அமைகின்றது. இக்கருத்து லெவி ஸ்ற்றோஸ் (Levi Stranss) என்பாரது கூற்றினால் நன்கு புலனாகின்றது. அவர் பண்பாட்டின் தோற்றத்திற்கு மொழி முக்கியமானதென்பர். (Language is a condition of culture)

இதுவரை நாம் மொழியையும் மதத்தையும் பண்பாட்டினுள்ளடங்கியவையாகவே கொண்டோம். "தமிழ்" என்று கூறும் பொழுது இங்கு மதத்தையும் விஞ்சிய மொழிநிலைப் பண்பாட்டையே (Linguistic culture) குறிக்கின்றோம். இந்த மொழிநிலைப்பண்பாட்டுக்குள் மதம் ஓர் உப பண்பாடாக (Sub-culture) அமையும். மதங்கள் ஒரு மொழி வட்டத்தினுள் இயங்கும் பொழுது, பண்பாட்டின் பொதுமை காரணமாக ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் கருத்துக்களை எடுத்துக்கூற அப்பொதுக் களஞ்சியத்தையே பயன்படுத்தவேண்டிவரும். இதனால் அவை உபபண்படுகளாகவிருக்கும், அதேவேளையில் முழுப்பண்பாட்டினதும் வளத்தையும் செழுமையையும் பயன்படுத்துவதாகவுமிருக்கும். சைவ, வைஷ்ணவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய பதநிலைகளிலே அவ்வக் கடவுளரை குறிப்பிடுவதற்குத் தமிழிற் பயன்படுத்தும் சொற்களை எடுத்து ஆராய்ந்தால் மேற்கூறியதன் உண்மை விளங்கும். ஆண்டவன், இறைவன், தேவன், பிதா, ஈஸ்வரன் என்ற சொற்களின் பயன்பாட்டை நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இவ்வுபபண்பாடு ஒவ்வொன்றும் முழுப்பண்பாட்டிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி முழுப்பண்பாட்டையும் தனது மேலாண்மைக்குட் கொண்டு வரவும் விரும்புகின்றது.

இவற்ருல் மதம் அதன் அநுட்டான நிலையில் மொழிப்பண்பாட்டின் ஓர் அங்கமாக உபபிரிவாக விருப்பினும் அது அம்மொழிப்பண்பாடு முழுவதையும் பயன் படுத்துவதாகவே இருக்குமென்பதும் புலனுகின்றது.

இவ்வாறு மதமும் மொழியும் ஒன்று மற்ருென்றிலே தங்கி நிற்கும்பொழுது மதம் மொழியின் **"வளர்ச்சி"க்கு " உதவுகின்றது"** என்பது ஏற்புடைமையற்ற ஒரு கருதுகோளாகவே அமையும். குறிப்பிட்ட ஒரு மதம் குறிப்பிட்ட ஒரு மொழியிலே புதிய பரிமாணங்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக, மறுபிறப்பு வாதத்தில் நம்பிக்கை கொண்ட மதங்கள் தொழிற்பட்ட எமது பண்பாட்டினுள் இஸ்லாம், கிறித்தவம் வந்து சேர்ந்த பொழுது அவை தமது "இறுதி நாள் தீர்ப்பு"க் கோட்பாட்டைச் சனரஞ்சகப் படுத்த முனையும் பொழுது பல புதிய கருது கோள்களையும், சொற்ருெடர்களையும் பயன் படுத்தவேண்டிய நிலையேற்பட்டது. இது மொழியின் வளத்தில் ஏற்பட்ட ஒரு "வளர்ச்சி"தான். ஆனுல்இந்த "வளர்ச்சி" ஏற்படுத்தப்படாவிட்டால் இஸ்லாமும் கிறித்தவமும், தத்தம் தனித்துவத்தையும் பிற மதங்களிலிருந்து தாம் வேறுபடும் முறைமையையும் தமிழில் நிறுவமுடியாது போயிருக்கும். எனவே மதங்களால் வந்ததாகக் கொள்ளப்படும் "வளர்ச்சி" உண்மையில் அவற்றைப் பொறுத்தவரையில் அத்தியாவசியமான தேவை என்பது புலனுகின்றது.

தமிழைப் பெருவட்டமாகக் கொண்டால் தமிழைப் பயன்படுத்திய மொழிகள் உப-பண்பாட்டுக் கூறுகளாக நிற்கும் மதத்தைப் பண்பாட்டுக் கூருகக் கொண்டால், அம்மதம் சுயநிலமொழிகள் உப-பண்பாட்டுக் கூறுகளாக நோக்கப்படும். இங்கு நாம் மொழி அடிப்படையிலேயே நோக்குகின்ருேம்.

## V

"தமிழில் மதங்கள்" என்று கூறும் பொழுது உண்மையில் உயர்மதங்கள் பற்றியே சிந்திக்கின்ருேம். சமூகவியல் நிலை நின்று நோக்கும்பொழுது இது ஏற்புடைமையுடைய ஒரு நிலைபாடாகாது. ஆயினும் இந்நிலை தவிர்க்கமுடியாத ஒன்றென்பதை ஏற்கனவே பார்த்தோம். தமிழில் நாம் பேசும் உயர் மதங்கள் யாவுமே வளர்ச்சியுற்ற நாகரிகங்களின் வழியாகத் தோன்றியவையே.

"தமிழில் மதங்கள்" என்னும்பொழுது இன்னுமொரு முக்கியமான ஒரு பரிமாணமுள்ளது. தமிழில் இடம்பெற்றுள்ள சில மதங்கள் இந்தியப் பண்பாட்டைத் தமது தளமாகக் கொண்டவை (சைவம், வைஷ்ணவம்). சில இந்தியப் பண்பாட்டு வட்டத்திற்கு அப்பாலிருந்து வந்தவை (கிறித்தவம், இஸ்லாம்), பின்னர் கூறப்பட்ட இருமதங்களும் தம்மைத் தமிழ்என்னும் மொழிநிலைப் பண்பாட்டுடன் இசைவு படுத்தியுள்ளன. இதற்குக் காரணம் அம்மதங்களை மேற்கொண்டோர் இப்பண்பாட்டு வட்டத்தினுள்ளிருந்தோரே. அவர்களுக்கு, அவர்கள் எற்கனவே அறிந்திருந்த மொழியநுபவம், பண்பாட்டநுபவம் என்பனவற்றின் அடிப்படையிலேயே புதிய மதங்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இயைபு படுத்திக் கொள்ளவும் வேண்டியிருந்தது.

அம்மதங்கள் தங்கள் அடிப்படைக் கருதுகோள்களை தமிழ்ப்படுத்தியும், தமிழ்ப்படுத்த முடியாதவிடத்து அம் மதத்தின் மூல அல்லது அறிமுக மொழியிலிருந்து பதப்பெயர்வு செய்தும் கொண்டனர். அல்லா, யெகோவா, ஹறும், ஹலால், தீன், அல்லேலூயா என்பன உதாரணங்கள். வைதீக மதங்களிற்கூட இந்நிலைமை காணப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது, அவை வடமொழிப் பதங்கள் பலவற்றைக் கையாளுகின்றன, (பாபம், புண்ணியம்).

## VI

முதலில், சமூகவியல் நிலையில் மதங்கள் ஆற்றும் பணிகள் எவ்வாறு இலக்கியத்தின் மூலம் நிறைவுபெறுகின்றது என்பதைத் தமிழ் நிலை நின்று காண்போம்.

மதம் ஒழுக்க நெறிகளையும் சமூகப் பெறுமானங்களையும் நிலைநிறுத்துகின்றது. தமிழிலே காணப்படும் அறநூல்கள் இவ்வுண்மையை வலுப்படுத்தி நிற்கின்றன. இங்கு அறம் என்னும் பொழுது ஒவ்வொரு மதமும் அதன் நம்பிக்கை சடங்கு உலக நோக்கு ஆகியவற்றுக் கேற்ற அறப்பெறுமானங்களையே வற்புறுத்தும் என்பதை மறந்துவிடக்கூடாது. தமிழிலுள்ள அறநூல் வளத்துக்குச் சமண பௌத்தமதங்கள் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் (கி. பி. 3 முதல் கி. பி. 7 வரை) சமூக மேலாண்மையுடன் விளங்கியமையே காரணமாகும்.

மதத்துக்கும் ஆட்சிமுறைக்கும் நெருங்கிய உறவு ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். பெரும்பாலும் இவ்வுறவு சுமுகமானதாகவே இருக்கும். சிலவேளைகளில் முரணுற்றதாகவும் இருக்கும். சமூக மாற்றம் நிகழும் சூழலையும் தன்மையையும் கொண்டு இந்நிலை தீர்மானிக்கப்படும். சோழர் காலத்திலே நிலவிய சைவமதப் பேணுகைக்கும் அரசநிறுவனத்துக்குமுள்ள தொடர்பினை இங்கு மனங்கொள்ளல் வேண்டும். கோயில் நிர்வாகம் முதல் சைவசித்தாந்தம்வரை இச்செல்வாக்கினை அங்கு காணலாம். சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்கும் சோழ ஆட்சியமைப்புக்குமுள்ள அடித்தள ஒற்றுமையை இரண்டிலும் பேசப்படும் அதிகார வரன் முறையால் விளங்கிக்கொள்ளலாம். சோழர்களின் வைஷ்ணவ எதிர்ப்புக்கான சமூக பொருளாதாரப் பின்னணி இன்னும் தெளிவாக்கப் படவில்லை,

நிலவும் ஆட்சியமைப்புக்கெதிரான போராட்டங்களும் மதப்போர்வையினூடே நிகழ்த்தப்பெறுவதுண்டு. சைவ வைஷ்ணவ சண்டைகளுக்கு அத்தகைய ஓர் அடிப்படை இருந்திருத்தல் வேண்டும். சிலுவைப்போர் என இன்று வரலாற்றிற் குறிப்பிடப்பெறும் போர் உண்மையில் மதங்களின் போர்அன்று பொருளாதாரக் காரணங்களுக்காக ஆடப்பட்ட போரே.

தமிழ் நாட்டில் 15ஆம், 16ஆம் நூற்றாண்டில் முருகவணக்கம் மேலோங்கியமைக்கும் விசயநகர நாயக்கமன்னராட்சி திணித்த படைவழங்கு நிலமாகிய முறைமைக்கும் அடிப்படையில் தொடர்பிருத்தல் வேண்டும். தெலுங்கராட்சி இந்துமதத்தின் பேராலேயே நிறுவப்பெற்ற பொழுது தமிழ் மக்களின் தனித்துவத்தை முன்னிறுத்துவதற்கும் வலியுறுத்துவதற்கும் முருக வணக்கம் உதவியிருத்தல் வேண்டும். "செந்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான்" என்பதன் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

மக்களாட்சிக் கோட்பாடு பரவிவரும் இந்நாட்களில் பிராமணிய முறைமைக்குள் வராத தெய்வங்களான மாரியம்மன் போன்ற தெய்வங்களின் வணக்கம் முதனிலைப் படுவதையும் நோக்குதல் வேண்டும். இவ்வாறு அவ்வணக்கங்கள் மேனிலை எய்தும் பொழுது அவற்றை வைதீகம் இசைவுபடுத்திக் கொள்ளும் முறைமையினையும் நோக்குதல் வேண்டும். கருமாரியைக் கிருஷ்ணமாரி எனச் சுப்ரபாதம் பாடும் மரபு தற்செயல் நிகழ்வன்று. இவை மதஇலக்கியங்கள் சமூக அசைணியக்கத்தின் வெளிப்பாடாக அமைவதைக் காட்டுவனவாகும்.

இவற்றிலும் பார்க்க தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானது பக்தியநுபவ வெளிப்பாடாகும்.

மத அநுபவத்தின் பல்வகைக் கோலத்தை உளவியல் நிலைநின்று ஆராய்ந்த வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியம் ஜேம்ஸ் அவர்கள் மனிதர்களின் தனி நிலைப்பட்ட மத அநுபவத்தையே முக்கியமானதாகக் கொள்வர். இந்த அநுபவம் அவர்களது ஆளுமையிழையாக வருவது. இவ்வநுபவம் மிக மிக முக்சியமானதாகும். இதுவே தமிழிலக்கியத்திற் பேசப்பெறும் பக்தியுணர்வின் அடிப்படையாகும். தெய்வத்தைத் தன்னிலைப்படுத்தி, மனித உறவுப் படிம அடிப்படையில் அத்தெய்வத்தின் உறவு கற்பித்துக்கொண்டு, அந்த உறவின் அடிப்படையில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே பக்தியனுபவத்தின் அச்சாணியாகும். தெய்வங்களை மனிதநிலைப்படுத்தி அம்மனிதநிலையின் இன்றியமையா உணர்ச்சி பாவங்களை அத்தெய்வத்தின்மேல் ஏற்றி முழுமனித அநுபவத்தையுமே சமூக அநுபவக் குறியீடுகளில் (ஆண்டான் அடிமை காதலன் காதலி. தகப்பன் பிள்ளை, தாய் பிள்ளை, நண்பன்) வெளிப்படுத்தும் முயற்சிதான் பக்தி முறையாகும். சைவ வைஷ்ணவ மதங்களில் நிலவிய ஐதீகங்கள், தெய்வங்களை மனிதப்பண்புப் படிமத்தில் நோக்க உதவின.

இத்தப் பக்திப் பாரம்பரியமே தமிழ் இலக்கியத்திற்கு அனைத்திந்தியப் பாரம்பரியத்தில் மிக முக்கியமான ஓரிடத்தை வழங்கியுள்ளது, கி. பி. பத்தாம் நூற்றுண்டின் பின்னர் இது படிப்படியாக வடக்கு நோக்கிப் பரவுகின்றது, இந்தப் பக்தி அனுபவத்தின் தலைசிறந்த இலக்கிய வெளிப்பாடாய் அமைவன மாணிக்கவாசகரின் திருவாசகம். (திருக்கோவையார் அன்று) நம்மாள்வாரின் பாசுரங்கள் ஆதியனவாகும். ஆக்கத்திறனுடைய பெண்ணொருத்தி இந்த அனுபவங்களைத் தனதாக்கிக் கொள்ளும் பொழுது அது எத்தகைய அற்புதமான கவிப்பிரவாகத்துக்கு இடமளிக்க முடியுமென்பதற்கு ஆண்டாளின் பாசுரங்கள் உதாரணமாகும்.

தமிழ் நாட்டின் இலக்கியப் பாரம்பரியம், 7ஆம் 8ஆம் நூற்றுண்டில் தமிழ் நாட்டில் தோற்றுவிக்கப் பெற்ற நிலமானிய அமைப்பில் நிலவிய பிரபுத்துவ உறவுகள் சமண பௌத்த மதங்களுக்கெதிராகத் தோன்றிய சமூக இயக்கத்தின் மனிதாயுதப் பண்புகள் போன்றவற்றின் ஒன்றிணைந்த கோலப் பொலிவுதான் பக்தி இயக்கம். இவ்வனுபவ நெறியின் தாக்கத்தை தமிழ் நாட்டினுட் பிற்காலத்தே வந்த மதங்களிலும் காணலாம்.

தமிழ் நாட்டின் மறைஞான (Mystie Poetry) க் கவிதையிலும் இப்பண்பினைக் காணலாம். மறைஞானக் கவிதைகளுக்கு உலகப் பொதுவான சிலபண்புகள் உள்ளன. புலனுணர்வுக்கும், தெரிவுணர்வுக்கும் அப்பாற்பட்ட ஒரு தெளிவினை (ஞானத்தெளிவினை) புலனுணர்வுக்குறியீடுகளாலும் உருவகங்களாலும் புலப்படுத்துவது இக்கவிதைகளின் முக்கிய பண்புகளில் ஒன்ருகும்.

இத்தகைய கவிதைகள் மொழிப்பண்பாட்டிற் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துவன. சொல்லைக்கொண்டு சொல்லின் பொருளுக்கு அப்பாலுள்ள ஒன்றை உணர்த்தவும் வெளிப்படுத்தவும் முனையும் இக்கவிதைகள் இலக்கியத்தில் மிக முக்கியமான இடத்தை வகிப்பது இயற்கையே. சித்தத்தின் தொழிற்பாட்டிற்கு அப்பாலுள்ள உணர்வு நிலையினை இவை குறிக்கும். ''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட'' எனவரும் தொடர் இதனை ஓரளவு சுட்டி நிற்கின்றது, இதனைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு கார்ல்மார்க்ஸ் மதம் பற்றிக் கூறிய ''உலகப்பிரக்ஞை பற்றிய மறுதலையான உணர்வு'' (Revrsed world consciousness) என்னும் கோட்பாடுபற்றிய தெளிவு மிருத்தல் வேண்டும், ஏனெனில் உண்மையில் இந்த மறுதலையான உணர்வு மூலம் மனிதநிலையின் சாரத்தையே இக்கவிஞர்கள் (Human essence) காணமுனைகின்றனர். இத்தகைய கவிதை வெளிப்பாட்டில் ஈடுபடுபவர்கள் பௌதீகநிலையில் ''உன்மத்த'' நிலையுடையோர் என்னும் உண்மையை நாம் மறந்துவிடலாகாது. இந்த உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தநிலை அகக்காரணிகளால் எழுவதாக விருக்கும். அன்றேல் புறக்காரணிகளால் தூண்டப்படுவதாகவுமிருக்கும்.

தமிழ் இலக்கியத்தில் இம்மறைஞானக் கவிதைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. வைதிகப் பாரம்பரியத்தில் வரும் மறை ஞானக்கவிஞர்களான திருமூலர், மாணிக்க வாசகர், தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோரது கவிதையாக்கங்கள் மூலம் தெரிய வருகின்றது. ஒரே மொழிப்பண்பாட்டு வட்டத்துள்ளிருந்து முகிழ்த்தெழும் இரு வேறு மதங்களின் மறைஞானப் பாடல்களின் அனுபவ ஒருமையை விளக்குவனவாகத் தாயுமானவர் பாடல்களும் மஸ்தான் சாகிபு பாடல்களும் அமைகின்றன.

தமிழிலுள்ள சித்தர் பாடல்கள் மறைஞானக் கவிதைப் பாரம்பரியத்தில் ஒருபுதிய பரிமாணத்தை உண்டாக்கியுள்ளன. பெரும் பாரம்பரியத்தைப் புறக்கணிப்பது போன்ற ஒரு 'பாவ' நிலையினை அவை சுட்டுவதை அவதானிக்கத் தவறக்கூடாது.

மதஅநுபவத்தினை முற்றிலும் இதயதாபமாகவே கொள்ளாது புறநிலையான மெய்யியல் உரைகல் கொண்டு அதனை விளக்கி சித்தத்தின் அறிவியலைத் தெளிவு படுத்தும் பொழுது மதத்தின் மெய்யியற் கோட்பாடுகள் தெளிவுபடுகின்றன. தமிழில் இதனைச் சைவசித்தாந்தம் பற்றிய சாஸ்திரங்களிற் கண்டு கொள்ளலாம். சைவசித்தாந்த சாஸ்திர விளக்கமாக அமைந்துள்ள நூல்களும் அச்சாத்திர நூல்களுக்கு எழுதப்பட்டுள்ள உரைகளும் தமிழில் தத்துவசிந்தனைகள் வெளிப்படுத்தப்படும் லாவகத்தினை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அந்த நூல்களிற் போதிய பரிச்சயமேற்படும் பொழுது தமிழில் எக்கருத்தினையும் ஐயந்திரிபறவும் மயக்கமறவும் எடுத்துக்கூறும் நடையாற்றல் தானே ஏற்படும். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நடைச்சிறப்புக்கு இதுவே காரணமாகும்.

ஐரோப்பியச் செல்வாக்குக்கு முற்பட்ட தமிழர் சிந்தனையின் இலக்கிய வெளிப்பாடுகளை நோக்கும்பொழுது தமிழர் சிந்தனை முற்றிலும் சமயச்சார்பற்றதாக இருக்கவில்லை என்பது புலனாகின்றது, திருக்குறளில் வரும் ஒழுக்கவியற் சிந்தனைகள்கூட மதச் சார்பினவே. குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தனவையாக இல்லாதிருக்கலாம். ஆனால் அந்த ஒழுக்கநெறி பாரம்பரிய மதங்கள் சுட்டும் அறஅடிப்படை வழியாகவே வருவது.

தமிழர்களின் அழகியற் படிமங்கள் கூட மதநிலைப்பட்டனவாகவேயுள்ளன. ஐரோப்பியப் பாரம்பரியத்திலே தோன்றியது போன்ற மதச்சார்பற்ற நிலைநின்ற அழகியல் நோக்குத் தமிழில் இன்னும் இடம் பெறவில்லையென்றே கூறவேண்டும். ஐரோப்பியச் செல்வாக்குவழித் தோன்றிய இலக்கிய வடிவங்களின் அழகியல் அடிப்படைகட்குப் பாரம்பரிய இலக்கிய வடிவக்களின் அழகியல் அடிப்படைக்குமுள்ள வேறுபாடுகளை நுணித்து நோக்கும்பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகும். தமிழின் மிகப்புதிய இலக்கியவடிவமான புதுக்கவிதை பாரம்பரிய அழகியலுணர்வுகட்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை இங்கு நோக்குதல்வேண்டும்.

## VII

தமிழ் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சி முறைமையும், தமிழ் பேசும் மக்களின் சிந்தனை வளர்ச்சி நெறியும் இலக்கியத்தையும், மதத்தையும் இணைத்தே வைத்திருந்தன: தமிழின் முற்றுமுழுதான சமயச் சார்பற்ற இலக்கிய வளங்கள் நாவலும் சிறுகதையுமே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயக அடிகளாரும் தமிழாய்வும்

பேராசிரியர், கலாநிதி பொன் கோதண்டராமன்
தமிழிலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழாராய்ச்சியை எண்ணிப்பார்க்கும்போது தனிநாயக அடிகளாரை எந்த ஆய்வாளனுலும் மறக்க முடியாது. அடிகளார் இலங்கை, தமிழகம், இலண்டன் ஆகிய இடங்களில் கல்விகற்று, ஆய்வு நிகழ்த்தித் தம்முடைய ஆய்வுத் திறனை நன்கு வளமாக்கிக் கொண்டவர். இலங்கையிலும் மலேசியாவிலும் பணியாற்றித் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தவர். தமது பன்மொழிப் புலமையையும் பல்கலை அறிவையும் தமிழ்ப் பணிக்காகவே பெரிதும் பயன்படுத்தியவர்,

உலக அரங்கில் தமிழாராய்ச்சிக்கு ஒரு சிறப்புமிக்க இடத்தை உருவாக்கியதில் அடிகளாருக்குப் பெரும் பங்கு உண்டு.

உலகநோக்கில் தமிழாராய்ச்சிக்கு மிக விரிவான அடித்தளத்தை அமைக்க அடிகளார் இடைவிடாது பாடுபட்டார். அவருடைய உழைப்பின் பயனை இன்று தமிழாய்வாளர்கள் எல்லோரும் கண்முன்னே காண்கின்றார்கள்.

தமிழியல் தொடர்பான ஆராய்ச்சிக்காகத் தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) என்ற ஆய்விதழை முதன்முதல் தொடக்கி வெளியிட்ட பெருமை இவரையே சாரும். அவரால் தொடங்கி நடத்தப்பட்ட அந்த இதழ்தான் தமிழியல் (Journal of Tamil Studies) என்று பெயர் மாற்றப்பெற்று இப்போது உலகத் தமிழ் நிறுவனத்திலிருந்து வெளிவருகின்றது.

சிறந்த கருவி நூல்கள் இல்லாமல் எந்த ஒரு மொழியிலும் உயர்ந்த ஆய்வுகள் நடத்தமுடியாது. இத்தகைய கருவி நூல்கள் அறவே இல்லாத நிலையில் திட்டவட்டமான முறையில் ஆய்வுகளை நிறைவேற்ற இயலாது, கருவிநூல்கள் மிகுதியாக வெளிவரவேண்டும் என்பதை உணர்த்த அடிகளார் அதற்கு உதவியான நூலை ஒரு முன்மாதிரியாக உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

சங்க இலக்கியங்கள் பற்றியும் சங்கத் தமிழர் வாழ்வுபற்றியும் இவருடைய ஆய்வுப்பகுதிகள் வேறு எந்த நூலிலும் காண முடியாத அளவுக்குத் தெளிவையும் விளக்கங்களையும் வழங்குகின்றன. சங்ககாலத் தமிழகத்தின் கல்விமுறைபற்றி இவர் நிகழ்த்திய ஆய்வுக்கு இலண்டன் பல்கலைக் கழகம் இவருக்கு அங்கே ஒரு டாக்டர் பட்டம் வழங்கியது. அந்த ஆய்வேடு பல ஆண்டுகளுக்கு முன்பே நூலாக வெளிவந்திருக்க வேண்டும், அவ்வளவு சிறப்புக்குரிய இன்றியமையாத ஆய்வு இது.

பலநாடுகளில் நிகழும் ஆய்வைப்பற்றியும் அங்குள்ள கல்விமுறைகளைப்பற்றியும் நன்கு உணர்ந்துகொண்ட அடிகளார் பிறநாடுகளில் தமிழாய்வு A Reference guilde to Tamil Studies என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலையும் உருவாக்கினார். தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிறநாட்டறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இந்நூலுள் சிறுபான்மை இந்திய இலங்கைத் தமிழறிஞர்கள் கட்டுரைகளும் உண்டு.

உலகநாடுகளில் என்னென்ன முறையில் என்னென்ன நோக்கத்தில் தமிழாராய்ச்சிகள் நடக்கின்றன என்பதை நன்கறிந்து கொள்ளவும் முறையாகத் தமிழாராய்ச்சியை வளர்க்கவும் இப்படிப்பட்ட நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் தேவை. எதையும் விரிந்த அளவில் நெடுநோக்கில் திட்டமிடும் அடிகளார் அவர்கள் தமிழாய்வு வளர்ச்சிக்கும் மிக நன்கு திட்டமிட்டுத்தான் இந்த நூலை உருவாக்கியுள்ளார்.

உலக அறிஞர்கள் போற்றும்வகையில் தமிழாராய்ச்சியைப் புதுமைப்படுத்தி விரிவுபடுத்தவேண்டுமென்று அரும்பாடுபட்ட அடிகளார் உலகநாடுகளில் வாழும் தமிழர்களைப்பற்றியும் உலகநாடுகளில் பரவியுள்ள தமிழ்க்கலைகள், தமிழ்ப் பண்பாடுகள் ஆகியனபற்றியும் மிகக் கவலையோடும் அக்கறையோடும் சிந்தித்திருக்கிறார். பல நாடுகளை நேரில் சுற்றிப்பார்த்த அந்தப் பெருமகனார் அங்கே வாழும் தமிழர்களைப் பற்றிப் பல செய்திகளைத் திரட்டித் தம்முடைய ஒன்றே உலகம் என்ற நூலில் மிக உருக்கமான முறையில் எடுத்து விளக்குகிறார்.

பிறநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு எளிதில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்புக்கிட்ட வேண்டும் என்பது இவருடைய ஆழ்ந்த விருப்பம். பிறநாடுகளில் சிதறிக்கிடக்கும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் ஆராய்ச்சி நிலையிலாவது தொகுத்துக் காக்கப்படவேண்டுமென்றும், பிறநாட்டு நூலகங்களில் உள்ள தமிழ்நூல்களும் தமிழைப் பற்றிய ஆய்வுநூல்களும் தமிழாராய்ச்சியாளர்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் அச்சிடப்படவேண்டும் அல்லது படியெடுக்கப்படவேண்டும் என்றும் தவத்திரு அடிகளார் பெரிதும் விரும்பினார்.

தனிநாயக அடிகளார் மறைந்துவிட்டார். இந்துமாக்கடலைப் போன்ற அவருடைய தமிழ் உள்ளத்துக்கு மரணமில்லை, அந்தத் தமிழ் உள்ளம் இலங்கையிலும், இந்தியாவிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், இன்னும் தமிழ் வழங்கும் பிறநாடுகளிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இதுதான் அடிகளார் தமிழுலகுக்கு வழங்காமல் வழங்கும் செய்தி.

**நன்றி — ' புலமை '**

---

மனிதநலப் பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு பிறரன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே சான்றோருடைய பெரும் இயல்பு. என் கடன் பணிசெய்து கிடப்பதே எனப் பிற்காலத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு இத்தகைய கொள்கையுடைய சான்றோர் இருப்பதே காரணம். இந்நூற்றாண்டில் சாதி வேற்றுமைகளை ஒழிக்கவேண்டுமென்றும் மக்களினத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்தவேண்டுமென்றும் விளக்கும் இயக்கங்கள் இக்கொள்கையிலிருந்தே தோன்றின. பிறருக்குப் பணிசெய்யும் மனநிலை இப்பண்பின் பயனே.

செல்வநாயகம் நினைவு சொற்பொழிவுகள்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைச் சோலையில் ஒரு தமிழ்த்தேனீ

கலாநிதி வே. அந்தனிஜான் அழகரசன் அடிகள்
(எம். ஏ., பி. எச். டி.)

இயற்கையோடு இயைந்து, இசைந்து இன்ப அன்பு வாழ்க்கை நடத்தியவன் தமிழன். நீரில், நெருப்பில், தீயில், தென்றலில் பூவில், பொய்கையில், மயிலில், மலையில், மல்லிகையில், முல்லையில் அழகைக் கண்டு வாழ்ந்தவன் அவன். அகநானூற்றை அலசிப்பார்த்தால் சங்க இலக்கியங்களை அகலவும், ஆழவும் படித்தால் எவ்வளவு தூரம் நம்முடைய முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து, பிணைந்து இரண்டறக் கலந்து வாழ்ந்தார்கள் என்பதைக் கேட்டுப் பெருமை அடைகின்றோம். அண்மையிலே நம்மை விட்டுப் பிரிந்த தமிழ்த் திருமகன் தனிநாயக அடிகளும் எவ்வளவு தூரம் இயற்கையை விரும்பினார், அதன் அழகில் தன்னை மறந்தார், ''இயற்கைச் சோலையில் எப்படி ஒரு தமிழ்த் தேனீ''யாக விளங்கினார் என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அடிகளார் பிறந்த ஊராகிய கரம்பொன் ஒரு நெய்தல் நிலமாகும். கடலும் கடலைச் சார்ந்த இயற்கை எழில் மிக்க கிராமமாகும். இவர் இயற்கைச் சூழ்நிலையிலே வாழ்ந்தார். இவர் சிறுவயதிலே பயின்ற பாடசாலை ஊர்காவற்றுறையிலே உள்ள புனித அந்தோனியார் பள்ளிக்கூடமாகும். அங்கு இவர் ஆரம்பக் கல்வியை மேற்கொண்டிருந்தபோது தன் ஊரின் இயற்கை அழகால் கவரப்பட்டு, புனித அந்தோனியார் பள்ளிக்கூடச் சஞ்சிகைக்கு ''ஊர்காவற்றுறையின் கவிதை'' ( Poetry of Kayts ) என்ற தலைப்பில் தன் ஊரின் சிறப்பை எடுத்துக்காட்டிய பாங்கு அவர் உள்ளத்தில் பொங்குபுனலாக வழிந்தோட இருந்த 'இயற்கை இரசனையை''ப் புலப்படுத்துகிறது.

சிறுவயதில் தளிர்விட்ட இந்த இயற்கை இரசனையே அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்தமிழ் பயின்றபோது தன் எம். லிட் பட்டத்துக்கு ஆய்வுப் பொருளாக ''பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'' (Nature in Ancient Tamil Poetry ) என்ற கருப்பொருளில் ஆராய்ச்சி செய்யத் தூண்டியது. ''பூக்கள் கொண்டு தமிழர்கள் சொல்லிவிட்டார்கள்' ''The tamils said it all with flowers '' என்ற ஆங்கிலக் கட்டுரை மூலமும், ''கலியாண சுந்தரனாரின் இயற்கையும், இயற்கை இயலும்'' Nature and the natural in Kalyanasundarar என்ற ஆங்கிலக் கட்டுரை மூலமும், ''தமிழர்களின் பொற்காலத்தில் இயற்கை கவிதை'' (2) ''நிலப்பாகுபாடும் கவிதையும்'3 ''இயற்கையில் மனிதாபிமானக் கண்ணோட்டம்' The humanistic Concept of nature போன்ற அரிய படைப்புக்கள்மூலம் இயற்கையில் தன் நாட்டத்தை, ஈடுபாட்டை நிலைபெறச் செய்துள்ளார்.

## தமிழ் இலக்கியத்தில் இயற்கைபெறும் இடம்

இலக்கியம் வளர்ந்து எழுவதற்கு நிலைக்களனாக உதவும் பொருட்கள் மக்களும், இயற்கையும் என்பார் அடிகள். இயற்கையைவிட்டு மக்களையும், மக்களை விட்டு இயற்கையையும் புலவர் பாடினால் அவ் இலக்கியம் குறையுள்ளதாக விளங்கும். தமிழ்ப் புலவர்கள், தம் புலமைத்திறனைக் காட்டுவதற்கு, முதற் பொருளாக மக்களையும், துணைப்பொருளாக இயற்கையையும் எடுத்துக் கொண்டனர்.

இயற்கையைத் தமிழ்ப் புலவர்கள் கையாண்ட முறைபோன்று, வேறு எந்த நாட்டுப் புலவரும் கையாளவில்லை என்பார் இயற்கையில் தோய்ந்த அடிகள். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் இருந்தே தமிழர்கள் தாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வாழ்ந்த நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என ஐந்திணையாகப் பாகுபடுத்திய பாங்கு உலகில் எந்த இலக்கியத்துக்கும் இல்லாத சிறப்பாகும். 'பாலை'' என்ற நிலம், குறிஞ்சியும் முல்லையும் திரிந்த நிலமாகும். எனவே அது தனி நிலம் அல்ல. ஏனைய நான்கு நிலத்தையும் ''நானிலம்'' என்று கூறிய பெருமை தமிழரையே சாரும். ''நானிலம்''-என்ற சொல் உலகையும் குறிக்கும் சொல்லாகும். தாம் வாழ்ந்த நிலம்மூலம் ஒழுக்கத்தை-பண்பாட்டைக் கற்பித்த இனம் தமிழ் இனமாகும்.

'செந்தமிழ் இயற்கை
சிவணிய நிலம்''

என்ற பாவாலும் தமிழர்கள் எவ்வளவு தூரம் இயற்கையில் ஈடுபாடு கொண்டவர்கள் என அறிகின்றோம். தொல்காப்பியப் பொருளதிகாரம் இத்துணை நுணுக்கமாக இயற்கையைப் புலநெறி வழக்கிற்கு அமைத்ததுபோல் வேறெந்த இலக்கியத்திலும் அமைந்ததாகத் தெரியவில்லை என வியந்து போற்றுவார் கரம்பொன் தந்த பொன்மணைச் செம்மல்.

தமிழ்ப் புலவர்கள் இயற்கையை நன்றாகப் பயின்ற பின்னரே செய்யுள் ஆக்கத் தொடங்கினார்கள். தொடக்க காலத் தமிழ்ப் பாக்கள் இயற்கைச் சுவை, உலகச் சுவை மிக்கவை. இயற்கை அழகை இயற்கை அழகாகக் கண்டன.

## இயத்கை - மனித உணர்வுகளின் பின்னணி

தமிழர்கள் இயற்கையை நேசித்தமுறை கிரேக்கர்களும், உரோமர்களும், ஐரோப்பியர்களும் நேசித்த முறையைவிட வேறுபட்டதாக விளங்குகிறது. தியோக்கிறட்டிசும், வேர்ஜிலும் இயற்கையை அணுகிய முறை வேறு. தமிழ்ப் புலவர்கள் அதனை நோக்கிய கண்ணோட்டம் வேறு. கிரேக்கர்களுக்கும் உரோமர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இயற்கை வெறும் நாடக மேடையாக அமைந்திருந்தது. ஆனால் தமிழர்களுக்கோ அது மனிதனின் உணர்வுகளையும், எண்ணங்களையும் படம் பிடித்துக்காட்டும் கண்ணாடியாக விளங்கியது. மனிதன் வாழவும், அன்புசெய்யவும் துணைசெய்யும் தோழனாகவும் இருந்தது. "The poetry of the Tamils places man and human emotion at the centre and nature as the setting in which man live and loves." மனித உணர்ச்சிக்குப் பின்னணியாக இயற்கை தமிழனுக்கு விளங்கியது. தமிழனுடைய பண்பாடும், பாடல்களும் மனிதனையும் மானிட சிந்தனைகளையும் மையமாக வைத்துச் சுழன்றதோ, அதேபோன்று இயற்கையும் அடிப்படையில் இவற்றையே பின்புலமாக வைத்து இயங்கியது. (6) அருவியிலே ஓடுகிற தண்ணீர் ஒரு புலவருக்குத் தலைவனைப் பிரிந்த தலைவியின் கண்ணீரை நினைவூட்டுகின்றது. சங்கப் பாடல்கள் மட்டுமின்றி, சிந்தையை அள்ளும் சித்திரச் சிலப்பதிகாரத்தையாத்த இளங்கோ அடிகளும் ''வையை'' ஆற்றைப் பெண்ணாக உருவகப்படுத்தி, கண்ணகிக்குப் பின்னால் நிகழப்போகும் துன்பத்தை முன்கூட்டியே அறிந்தவள் போல, பூக்கள் நிறைந்த ஆடையால் தன் தலையை மூடிக்கொண்டு, கண்ணீர் சொரிந்தாள் என்பதை இவ்வாறு அழகாகச் சொல்லோவியமாகப் படைப்பார்

''புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையையென்ற பொய்யாக்குலக்கொடி
தையற்குறுவது தானறிந்தனள் போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யாறன்றிது பூம்புனல் யாறென''
(புறஞ்சேரி. கசாச—சஎச

## இயற்கையோடு இசைந்த புலவர்கள்

### தமிழ்ப்புலவர்கள்

பழந்தமிழ்ப் புலவர்கள் யாண்டும் மெய்யுணர்வாளர்களாகவே (Realists) காட்சி அளிக்கின்றனர் என்பார் தனிநாயக அடிகள். வட இலக்கியக் கவிஞர்களைப் போன்று பண்

டைத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையை இயற்கைகடந்த ஒரு நிலையாகக் கருதாமல் இயற்கையாகவே கண்டார்கள் என்பார் சேவியர் அடிகள். 7 பழந்தமிழ்ப் புலவர்கள் கையாண்ட உவமைகள் கூட இயற்கைக்கு ஒத்த உவமைகளாகவே இருக்கின்றன என சில எடுத்துக்காட்டுக்களைத் தருவார் அடிகள். வேப்பம் பூவைப் பார்த்த புலவர், அது இறால்மீன்கண்போல் இருக்கின்றது என்றார். வேறொருவர், கலைமானின் கொம்பு எப்படி இருக்கிறது என்றால் ''இரும்பு திரித்தன்ன மாயிருமருப்பு'' உடையது என்றார். பாடினியின் சிவந்த மெல்லிய உள்ளங்கால், எப்படி இருக்கிறது என்றால், வேட்டைக்கு சென்று நீர் வேட்கையிக்கு இளைப்புற்ற நாயின்நாவினையொக்கும் என்பார். இன்னொருவர், வாகைப்பூவை மயிலின் சிகைக்கு உவமித்தார். மற்றொருவர், நெல்லிக்கனியை முயலின் கண்ணிற்கு நிகர் என நிகழ்த்தினர். பிறர் ஒருவர், நாரையானது ''பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்னப் பவழக்கூர்வாய்'' உடையது என உரைத்துள்ளார். காந்தள் இதழ்கள் குவிந்திருப்பது, இறைவழிபாடு செய்யும் இனிய மகளிரின் குவிந்தகைபோல் கவின் செய்கின்றது என்றார் ஒருவர். 8 இப்படி இயற்கையில் ஊறினவர்கள் சங்க காலத்துப் புலவர்கள்.

## தமிழர்களும் - மலர்களும்

சங்க காலத்தில், தமிழர்கள் மலர்களைத் தங்கள் வாழ்க்கையின் பல துறைகளில் பயன்படுத்தியது போல், வேறு எந்த நாட்டு மக்களும் அதிகமாகப் பயன்படுத்தவில்லை என்று கூறலாம் என உலகின் பல பாகங்களுக்குத் தமிழ்த் தூதாகச் சென்ற அடிகள் கூறுவார்.

''செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன்காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப '
(பத்து:முல்லை. 93–96)

மலராயினும், இலையாயினும், மரம் செடி கொடி எதுவாயினும், தமிழர் தம் வாழ்க்கையில் பயன்படுத்திய முறையை நுணுகி ஆராயுமிடத்து, வேறு எந்த மக்கட் குழுவினரும் இவ்வாறு அமைத்துப் பயன்படுத்தியுள்ளனர் எனத் தோன்றவில்லை என்பார் தமிழ்த்தேனீ தனிநாயகம். 9 மலை நிலத்திற்கும், மலைசார்ந்த நிலத்திற்கும் தமிழர்கள் கொடுத்த பெயர் குறிஞ்சியாகும். மலையிலே காந்தள், வேங்கை, ஆரம், அகில் விளைகின்றனவே—என் இந்தப் பூக்களின் ஒன்றின் பெயரால் அம்மலைப் பிரதேசத்தைக் கூப்பிட்டிருக்கக்கூடாது என வினவுவார் அடிகள்? அவரே அதற்குரிய விடையையும் தருகின்றார். மலைகளிலே விளைகின்ற பூக்களுக்குள்ளே அரியபூ, சிறப்பானபூ. பன்னிரெண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மலரும் பூவாக இருக்கிறபடியால்— மலையையும், மலையைச் சார்ந்த இடத்தையும் குறிஞ்சி (Strobkanthus Kunthianus) என அழைத்தார்கள் போலும். தொல்காப்பியர் காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகளுக்குமுன்னரே தமிழ்மக்கள் மலைநாட்டிற்குக் குறிஞ்சி நிலம் எனப்பெயரிட்டனர். அதற்கு எத்துணைக் காலத்திற்கு முன்னர், அக்குறிஞ்சிச்செடி மலைநாட்டில் மிக்க சிறப்புடையது எனக்கருதி அவர்கள் ஆராய்ந்திருத்தல்வேண்டும்? அவர்களின் நுண்ணறிவைக்கண்டு வியப்பார் தவமுனி. முல்லைமலர், நிலத்துக்கு அடையாளமாக இருப்பதுடன் அது கற்புக்கும் அடையாளமாக விளங்குகின்றது. ''முல்லை சான்ற கற்பினள்' எனப் பல முறை இலக்கியத்தில் கையாளப்பட்டிருக்கிறது. மேனாட்டார் லில்லிமலரைக் கற்பின் சின்னமாகக் கருதியது போல, தமிழரும் முல்லை மலரைப் போற்றினர் போலும். வெண்மையான நிறமும், சிறப்பான மணமும் உடைய பூவினைக் கற்பிற்கு அறிகுறியாகத் தமிழர் நிறுவியது வியப்பில்லை என்பார் அடிகள். தமிழ் மக்கள் ஏனைய பூக்களிலும் முல்லையைப் பெரிதும் விரும்பி, அதனைத் தமக்கும், தம் இசைக்கருவிகட்கும், வழிபாட்டிற்கும் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினர் எனப் பல சங்கப் பாடல்கள் சான்று பகரும். இவ்வாறே பிற நிலங்களாகிய பாலை, மருதம் நெய்தல் போன்றவற்றிற்கும் பெயர் வைத்ததற்கும் சிறந்த காரணங்கள் உள்ளன என்பார் தமிழ்த்தூது. 10

தமிழர்கள் தங்கள் அக வாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் பூக்களை மிகுதியாகப் பயன்படுத்தித் தங்கள் ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் கூறினர். தமிழர்களின் தொட்டில் தொடக்கம் சுடுகாடு வரையும், பிறப்பு முதல் இறப்புவரை பூக்கள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. குழந்தை பிறந்ததும் தன் தந்தையை முதல் முதலாகப் பார்க்கும்போது அவன் போருக்குரிய மலர்களையும், மாலைகளையும் அணிந்திருக்கும் காட்சியையே காண்கின்றது 11

இக்காலம்போல் அக்காலத்திலும், தாய்மார்கள் தம் சிறுவர்களுக்குச் சிறுமலர்களை முடியில் மிலைச்சுவது வழக்கமாயிருந்தது. காதலன் காதலிக்குக் கையுறையாக வேங்கை மலர்களைக் கொடுத்தான். வேங்கை மலர்கள் குறிஞ்சி நிலத்துக்குரிய அழகிய மலர்கள். வேங்கை பூக்கும் பருவம் திருமணம் நடக்வேண்டிய பருவம் எனக் கருதப் பெற்றது. இயற்கையுடன் அளவளாவிய தமிழ் மக்கள் வேங்கை மரத்தின் நறுநிழலில் திருமணங்களை நிகழ்த்திவந்தனர்

வேங்கை பூப்பின்வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிறந்த தலைவர் தம் நாடு மீண்டு, தம்மை மணந்து கொள்வர் எனத் தலைவியர் எதிர்நோக்கி இருப்பர். குறுந்தொகைப் பாட்டு ஒன்றில், தலைவி ஒருத்தி வேங்கை பூத்தது கண்டதும் தன்னை அறியாமலே கண்ணீர் சொரிந்தனள் எனப் புலவர் கூறுகின்றார். வேங்கை பூத்ததும், தலைவன் வராமையே அதற்குக் காரணமாகும். திருமணம் நிகழும்போது, தமிழ்மக்கள், மணப் பெண்மீது மலர்களைத் தூவி வாழ்த்தினர். தலைவன் ஒரு தூரதேசத்துக்குப் போக இருந்தான். தலைவிஇதைக் கிஞ்சித்தும் வரவேற்கவில்லை. அழுத முகத்துடனும் கண்ணீருடனும், தன் குழந்தையுடனும் தலைவனிடம் சென்றாள். கணவனுக்குப் பக்கம் சென்று தன் குழந்தையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, குழந்தையின் முடியில் இருந்த மலர்களின் வாசனையை மணந்து கொண்டிருந்தாள். நுகர்ந்து கொண்டிருந்தாள்—அவளுடைய பெருமூச்சு பூக்களின்மேல் பட்டதும், அவை வாடிவிட்டன என அகநானூற்று ஆசிரியர் ஒருவர் வெகு அழகாகக் கூறுவர். 12 தம் ஊர்க்குப் புதிதாய்வந்த விருந்தினர்கட்கு அவ்வூர் மக்கள் மலர் கொடுத்து வரவேற்பர். பாணர்களும், புலவர்களும் அரசனிடம் இருந்து பொற்றாமரை பெறுவர். இசைவாணர்கள் யாழ் முதலிய இசைக்கருவிகளுக்கு மலர்மாலை சூட்டி மகிழ்வர். தமிழர்கள் தங்கள் வழிபாட்டுக்களிலும் பூக்களை மிகுதியாகப் பயன்படுத்தினர். எனவேதான் அவர்கள் செய்த பூ+செய் = பூசெய் = "பூசை"யாகியது.

இப்படித் தமிழர்களின் முழு வாழ்க்கையிலும் சிறப்பாக இடம்பெற்றது பூவாகும்.

## இயற்கைதந்த அணிகலன்கள்

தமிழர்கள் ஆடையை இயற்கையிடம் இருந்து எடுத்தது மட்டுமன்றி அவர்கள் அணிந்த அணிகலன்களும் இயற்கையிடம் இருந்து பெற்றார்கள். ஆம்பல் கொடியையும், பனையோலையையும் இன்னும் பல்வகை இலைகளையும் கொண்டே தம்மை அணிசெய்திருந்தனர். பண்டைத் தமிழர் எத்துணையாக ஓலைகளைக் கையாண்டு வந்தனர் என்பதற்கு, இன்றும் தமிழர் அணியும்அணிகலன்களின் பெயர்கள் சான்று பகர்கின்றன. தோடு, அரசிலை, குழை, ஓலை, கொந்திளவோலை, தாலிக்கொடி என்று அவ்வணிகலன்களுக்குப் பெயர் சொல்லும்பொழுது, அவை முதலில் ஓலையும் குழையுமாகவே இருந்திருத்தல் வேண்டும் எனக் கருத இடம் உண்டு என்பார் இயற்கைப்பிரியர் தனிநாயக அடிகளார். 13 தமிழர்கள்தம் கட்டில், நாற்காலி முதலிய பொருட்களும் செடி, கொடி இலைகளின் வடிவங்களைக் காட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையும் இறைவனும்

தனிநாயக அடிகள் இயற்கையையும் அதில் உள்ள எல்லாவற்றையும் நேசித்த மனி தாபிமானி. இயற்கையோடு நெருங்கி வாழ்ந்ததால், இயற்கையில் அவர் இறைவ னைக் கண்டார். பரம்பொருளாகிய கடவுள் இயற்கையில் மிகச் சிறிய பொருள்களையும் படைத்தபடியால், அடிகள் சிறியவர்களையும் நேசித்தார். இறைவனை ஆழமாக நேசித் ததுபோல் இயற்கையையும் ஆழமாக நேசித் தார்.

## இயற்கையும் பண்புநலனும்

இயற்கையின் அழகை விரும்புகின்ற ஒரு வர் மன அமைதியையும், மன அமைதியால் தன் ஆளுமையையும் உருவாக்கலாம் என்ற கருத்துக் கொண்டவர் அடிகள். 14 தமிழ் மக்கள் இயற்கையோடு நெருங்கி வாழ்ந்தபடி யால்தான் தலைசிறந்த இலக்கியக் கருவூலங் களைப் படைக்க முடிந்தது. நல்ல உயர்ந்த பண்புகளுடன் வாழ முடிந்தது. நீண்ட ஆயு ளுடன் வாழ முடிந்தது என்பர். திரு வி. கலியாணசுந்தரனாரைப் போன்று, தனிநாயக அடிகளும் இயற்கையை ஓவியங்களை, சிற்பங் களை விரும்பினார். உயிர்கள் பற்றிய நூல் கள் நாம் காணும் உலகமாகும் நாம்காணும் இயற்கையாகும். நூல்களிடமிருந்து நாம் கற்பதைவிட இயற்கையிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள்கின்றோம் என்ற கொள்கை கொண்டவர் அடிகளார். உவில்லியம்வேட் ஸ்வொத் (William Wordsworth) என்ற ஆங்கிலநாட்டுக் கவிஞர் கூறிய இயற்கை பற் றிய கருத்தையே அடிகளார் கொண்டிருந் தார் என்று சொன்னால் இது மிகையாகாது.

"One impilse from a Vernal wood may teach you more of man, of moral evil and of good than all the sages car." (15)

இயற்கையோடு நெருங்கி வாழ்கின்றவர் பிறர்பணியில் ஈடுபடுகின்றவராகவும், உயிர்க ளுக்குத் தீங்கு செய்யாத பண்பு கொண்டவ ராகவும் விளங்குவார் என்பது அடிகளின் நம் பிக்கை 16 அடிகளாரும் தன் வாழ்க்கை யில் பிறருடைய உள்ளத்தைப் புண்படுத்தாத பண்பாளராக வாழ்ந்திருக்கின்றார்.

## முடிவுரை

அடிகளார் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தர். அவருக்குப் பூ என்றால் கொள் ளையாசை. அதுவும் உரோசாப் பூ என்றால் இன்னும் விருப்பம். வெள்ளை உரோசாப் பூவை மிகவும் விரும்பினார். இவர் படிக்கும் அறையில், மேசையில் உரோசாப் பூக்கள் இருப்பதைக் கண்டு இன்பம் அடைவார் அடி கள்.

அடிகள் பண்டத்தெருப்பில் தன் கடைசி நாட்களைக் கழித்த காலத்தில், தான் இயற் கையெய்தி இறைவனடி சேர்வதற்கு ஓர் இரு நாட்களுக்கு முன் தன்கைப்படஒருவெள்ளை உரோசாப்பூவை நாட்டினதாக அங்குள்ள கன்னியர்கள் என்னிடம் கூறினார்கள். ஆம், பிறப்பு முதல் இறப்பு ஈறாக இயற்கையில் அதிக ஈடுபாடு கொண்ட அடிகள், உண்மை யாகவே இயற்கைச் சோலையில் ஒரு தமிழ்த் தேனீதான்.

வாழ்க! இயற்கைச் சோலை
வளர்க! இலக்கியச் சோலை
ஓங்குக! தனிநாயகத்தின் புகழ்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்னையின் தன்னேரில்லாத் தனயன்
## தவத்திரு
# தனிநாயகம் அடிகளார்

(வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா)

திருவுங் கல்வியுஞ் சிருந்தழைத்த தனிநாயக அடிகளார் தமது இழுமென் மொழியால் விழுமிய தொண்டுகள் பணிகள் பலபுரிந்து தமிழன்னையை நீலக்கடலுடுத்த ஞாலமெங்கணும் சீராட்டிப் பாராட்டிச் சிறப்புறவைத்த பெருமகனுராவார். உலக மாதாவாகிய கன்னிமரியம்மையை வணங்கும் பான்மையுடையவராகலின் தமிழன்னையின் சீரிளமைத் திறம்வியந்து தமிழ்த்தூதராக ஓயாது அயராது உயரிய பணியாற்றிய பேரறிஞர் தனிநாயகம் அடிகளார் உள்ளத்தால், உருவத்தால், மூச்சால், பேச்சால், நடையால், உடையால், எண்ணத்தால், பண்பால் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் தழைக்க விழைந்து உழைத்து விழுமிய பயனுங்கண்டார்.

## உயர்குடிப் பிறப்புங் கல்வியும் :

இறைவன்நிகர் செல்வன்எழில்செறி சேயூரான் — விண்ணாட்டு
நிறை பொறுமை நீதியகலாதான் — நறைகமழும்
பூங்காவி மார்பன் புகழுள வெள்ளாமாசன்
நீங்காத கீர்த்தி நிலையாளன் — பாங்காய்
இனியொருவர் ஒவ்வா இருகுலமுந் தூய்யன்
நனிநாயகன் எனும் பேர்தாங்கும் — இனியவனை
மற்றுமுள பற்று நகரவளமை சூழ்ந்திடுதென்
பற்று நெடுந்தீவு பரிக்க வைத்து
— கைலாயமாலை

என்று பெரிதும் பேற்றப்படும் சிறப்புமிக்க குலகோத்திரத்தில் அடிகளார் பிறந்தார். பசுந்தீவு எனப் பாராட்டுப்பெற்ற நெடுந்தீவு தந்தை வழிப்பிறப்பகம். தாயார் ஊர் காவற்றுறை. இவ்வண்ணம் யாழ்ப்பாண நன்னாட்டிலே பிறந்து சம்பத்திரிசியார் கல்லூரியிற் பயின்று குருத்துவப் படிப்பிற்காக உரோமாபுரி சென்றனர். அங்கு இறையியற் பல்கலைக்கழகத்திற் குருத்துவம் பயின்று இறையியலிற் கலாநிதிப்பட்டமும், பன்மொழிப்புலமையும் பெற்றனர்.

நாடு திரும்பினார். தமிழ்கற்க விழைந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தனர். 'முதுமாணிப் பட்டம்' பெற்றும் மனநிறைவு காணாது இலக்கிய முதுமாணியுமானார்.

## இமிழ் கடல்வழித் தமிழ்த்தூது :

பல்கலைக் கழகங்களில் நிறைந்த கல்வியைப் பெற்றார். பரந்துபட்டிருக்கும் உலகெங்கணும் தமிழ்த்தூது கொண்டுசெல்ல முயன்றார். சென்றார் அமெரிக்காவுக்கு. தமிழர் பண்டைய நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் இவை தொடர்பான விரிவுரைகள் நிகழ்த்தினார். அங்குள்ள பல்கலைக் கழகங்களிலும் விரிவுரைகள் செய்தனர். பல்வகை அபிவிருத்திச் சபைகளும் விரிவுரைக்கு அழைத்தன. வெறும் பேச்சுக்கல்ல. பணமுங் கொடுத்தனர். ஆண்டொன்றிற்கு இருநூறுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகள் ஆற்றினார். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிற் கல்விபெற்ருர். பெற்ற கல்வியைத் துணையாகக்கொண்டு திருவும் பெற்ருர். கல்வி திரு இவை இரண்டும் பெற்றதும் சீரும் பெற்ருர். எனவேதான் திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும் என்று தொடங்கலாயினேன்.

பேச்சுடன் நிற்கவில்லை. எழுதவுந் தொடங்கினர். பற்பல உலக சஞ்சிகைகளில் அடிகளாரின் எழுத்தோவியங்கள் வெளிவந்தன. எழுத்துலகிற் பிரவேசித்தபோது புனைபெயர் வைத்துக்கொள்ளவில்லை. புனைபெயர் எழுத்துலகிற்கு ஒரு புகும்வழி; பேச்சு வல்லுநருக்கு எழுதும் ஆற்றல் தன் வலியக் கைகூடும். பல மொழிகள் தெரிந்தவர் ; ஆங்கிலம் ஆற்ருெழுக்கு ; தூயதமிழ், ஆங்கிலமுந் தமிழும் அடிகளாரின் நாதவிந்து. தோற்றமுங் குரலும் கம்பீரமானவை. மொழிநடையும் அடிகளாருக்குரிய தனிப்பாணி. பாருங்கள் தமிழ் ஓவியத்தை.

> " வாழ்க்கை எதுவாயிருந்தாலும் அதுஒருபட்டறிவு, அனுபவம், நுகர்ச்சி என்பதில் ஐயமில்லை. இந்நுகர்ச்சி அழகுடன் கலக்குங்கால் கலையாகின்றது, கலையின் அரசு மக்களின் அனுபவ வாழ்க்கையளவு பரந்துள்ளது. எங்கு அனுபவம் உள்ளதோ அங்கு கலையும் இருத்தல்கூடும். அழகுடன் சேர்ந்த அனுபவமே கலையாக மாறுகின்றது. செய்யுள் இயற்றுவதும் ஒருகலை ; செப்பமாய் நெய்யிட்டு முடிசீவுவதும் ஒருகலை ; கல்லினைச் செதுக்கி உருவாக்குவதும் ஒருகலை ; பென்சிலைச் சீவுவதும் ஒருகலை ; ஓவியம் எழுதுவதும் ஒருகலை ; ஒப்பாரி பாடுவதும் ஒருகலை ; இசை பாடுவதும் ஒருகலை ; வசை பேசுவதும் ஒருகலை ; யாழினை மீட்டுவதும் ஒருகலை ; யாழ்ப்பாணக் கறிகள் சமைப்பதும் ஒருகலை ; நடனம் ஆடுவதும் ஒருகலை ; நகைச்சுவை வளர்ப்பதும் ஒருகலை ; கோயில் அமைப்பதும் ஒருகலை ; கோஞர்பால் கற்பதும் ஒருகலை."

## தமிழும் ஆங்கிலமும் :

தமிழ் மக்களின் தன்னேரில்லாத் தனிநாயகம் அடிகளார் தூதுசென்று நாடுதிரும்பினுர். தூத்துக்குடி திருமாமறை ஆயருடனிருந்து பணியாற்றினுர். தமிழ் இலக்கியக் கழகம் புத்துணர்ச்சி பெற்று எழுந்தது. பாரிய பணிமனையும் பெறப்படலாயிற்று. கத்தோலிக்க எழுத்தாளர் சங்கமும் நிறுவப்படலாயிற்று. அடிகளார் புலவரானுர். புலவர்கள் வந்துகூடினர். நூல்கள் பல உருப்பெற்றன. தூத்துக்குடியில் 1952-ல் எழுத்தாளர் மாநாடு ; 1953-ல் கோயம்பத்தூரில் அடுத்த எழுத்தாளர் மாநாடு. "தமிழர் பண்பாடு" என்ற சஞ்சிகை (Tamil-Cultere) ஆரம்பமானது. ஆங்கிலச் சஞ்சிகை எனினும் முழுக்கமுழுக்க தமிழ். தமிழர் பண்பாடு, கலைபோன்ற விடயங்களையுடையதாய் விளங்கியது.

கழகங்கள் அமைக்கலாம் ; முழக்கங்கள் இடலாம். கொண்டுநடத்தும் ஆண்மை வேண்டுமன்றே. உரோமாபுரியில் இருக்கும்போதே வீரமாமுனிவர் கழகம் நிறுவி வாஞெலிமூலம் தமிழோசை ஒலிக்கச் செய்தார். திருமறையினையும் வளர்த்தார். தீந்தமிழினையும் அபிவிருத்தி செய்தார். மக்களின் ஒத்துழைப்புடன் மும்மாத சஞ்சிகையைப் பத்தாண்டுகளுக்குமேல் நடாத்திக் காட்டிய அடிகளார், அதனை நல்லறிஞர் என்று போற்றப்படுகின்ற பேராளர் கையில் ஒப்படைத்தபோது அது செயற்படாமலே மெல்ல மெல்லச் சொல்லாமலே மறைந்துவிட்டது.

## பல்கலைக் கழகமும் உலகத் தமிழும்:

திருமறை வளர்க்கப்புகுந்த அடிகளார் தமிழ்மொழி விருத்திக்கும், உழைத்தார். தமிழ்மொழிமூலமே தமிழ்மக்கள் மத்தியிற் திருமறை வளர்த்தல் சாலப் பொருத்தமுடைத்தென்று எண்ணினுர். வீரமாமுனிவர் வழிநின்ருர். உத்தியோகம் புருட இலட்சணம். பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு ஏற்படலாயிற்று. இலங்கைப் பல்கலைக் கழ

கத்தில் விரிவுரையாளர் பதவிபெற்ருர். இலண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்ருர். தமிழறிஞர், பிரமுகர் இவர்களுடன் பழக்கமும் பெற்ருர். மலேசியாப் பல்கலைக் கழகத்திற் கீழைத்தேசக் கல்விப் பேராசிரியராஞர்.

உலகத்தமிழ் மாநாடு கூட்டுவதற்கான ஏற்பாடுகளில் முனைந்து உழைத்தார். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அடிகளாரின அயரா உழைப்பால் உருவாயிற்று. மலேசியாவில் முதலாம் மாநாடு உலகமெங்கணுமிருந்து உத்தமர், பேரறிஞர், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர், அரசியல் முதல்வர் எல்லோரும் வருகைதந்தனர். அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் எடுத்த முதலாம் மாநாடு அடிகளாரின் அயரா உழைப்பால் கோலாலம்பூரில் வெகு கோலாகலமாக இனிது நிறைவேறியது.

## விருது வாக்கியம் :

புறநானூற்றில் மறைந்துகிடந்த பேருண்மை விளக்குஞ் செய்யுளின் அடியொன்றினை உலகுக்கு எடுத்துக்காட்டிய பெருமை அடிகளாரைச் சாரும். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் விருதுவாக்கியமாக அடிகளாரால் பொறித்துக் காட்டப்படலாயிற்று. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றஅடி உலகத் தமிழ் மகாநாட்டில் மாத்திரமல்ல, ஐக்கியநாடுகள் சபையிற்கூட ஒலித்தது. சொல்வன்மை படைத்த ஜி. ஜி. பொன்னம்பலமே இவ் விருது வாக்கியத்தை ஐ. நா. சபையில் எடுத்துரைத்தவர், எடுத்துரைக்க வைத்தவர் அடிகளார். பொருள் நிறைந்த அடியாக இருந்தபடியாற்ருன் பொன்னம்பலமும் வழிமொழிந்தார்.

திருமந்திரத்தின் ஒரு மூலையிற் பதுங்கி ஒதுங்கிக் கிடந்த தன்னேரில்லா ஈரடிகளைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு விதந்துரைத்துக் காட்டியவரும் அடிகளார். 1951-ம்ஆண்டு சித்திரைத்திங்கள் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற தமிழ்வளர்ச்சிக் கழகம் நடாத்திய தமிழ் விழாவில் உரையாற்றிய அடிகளார் தமது பேருரைக்கு முத்திரை பதிக்கும் முகமாக :

"என்னை நன்ருய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருய்த் தமிழ்செய்யுமாறே"

என்று தமது கம்பீரமான குரலில் கூறியதும் மக்கள் பெருந்திரள் கைகொட்டி ஆரவாரித்தது. செம்முகங்கள் மலர்ந்தன ; கரங்கள் குவிந்தன ; சிரங்கள் தாழ்ந்தன; மகிழ்ச்சிக்குரல் எழுப்பினர். எழுந்த குரல் வானைப் பிளந்து அப்பாலுஞ் சென்றது.

## யாவரும் போற்றும் மாதவன் :

அன்புக் கரம்நீட்டி ஆதரிக்கும் பண்புடையாளர். பண்பெனப்படுவது "பாடறிந்து ஒழுகுதல்." இதற்கு அடிமையானவர் அடிகளார். சீறவோ சினக்கவோ அவருக்குத் தெரியாது. குறைசொல்லவுந் தெரியாது. நிறைய நிறை சொல்லுவார். இன்ஞர் என்பவருமிலர் ; இனியர் என்பவருமிலர். யாவரையும் ஒப்பநோக்கும் மனப்பான்மை உடையவர். சமய சமூக வாதங்கள் கடந்தவர். சமத்துவம், பரத்துவம், தத்துவம்போன்ற அனுபவங்கள பொதிந்தவர்.

கத்தோலிக்க துறவியுமாஞர். தமிழ்த் தொண்டருமாஞர். திருமறைத்துறை யோகியவர் ; குருத்துவக் கடமைகளை முறைப்படி அனுசரித்தவர். இறைவழியில் நின்றவர். இறைமைக் குணங்களாகிய செம்மை, உண்மை, நன்மை என்ற தன்மை வாய்ந்த தமிழ் மொழியும் தழைத்தோங்கச் செய்வதற்காக முதலிற் தமிழினை நன்கு பயின்றனர். பின்னர் வீரமுழக்கஞ் செய்தனர். எட்டுத் திசையும் இசைபோக உழைக்க விழைந்தனர். எடுத்த கருமம் தொடுத்து முடித்தனர். உலகம் உவப்ப நடந்தனர். தமிழ்த்துறையெலாங் கண்டனர். வெற்றி கொண்டனர். உடல் பொருள் ஆவி எல்லாம் துறந்து இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(தவத்திரு. தனிநாயக அடிகள் எழுதிய சிறந்த கட்டுரைத் தொகுதி ''தமிழ்த் தூது'' இந்நூலைப் பற்றிய பதிப்புரையில்...... ''அடிகளாரின் இனிய தமிழ் நடையும் தமிழைப் பற்றிப் பேசும்போது அவர்களிடம் காணப் பெறும் பெருமிதமும் நூலின் பொருட் செறிவும் படிக்கச் சுவையூட்டுவன. 'யாதும் ஊரே; யாவரும்; கேளிர்', என்ற சங்கப் புலவர்களின் மாண்பும், எல்லா நாடும் தம் நாடெனக் கொள்ளும் இதயமும் படைத்தவர் அடிகளார்''...... எனக் குறிப்பிட்டுள்ளது.*

*தமிழ்த் தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, மலரும் மாலையும், காப்பியக் கவிஞர் வீரமாமுனிவர், தமிழ் தாட்டின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை; தமிழரும் அவர்தம் கவின்கலைகளும், தமிழ் ஊறும் நல்லுலம்'' ஆகிய சிறந்த ஏழு கட்டுரைகளைத் கொண்டதாகும். தமிழ் நாட்டின் பல் கலைக்கழகங்களில் பாட நூலாகவும் விளங்கியது. இந்நூலில் இருந்து சில பகுதிகளைத் தருவதில் பெருமையடைகின்றேன்.)*

# தவத்திரு தனிநாயகம் அடிகளின்
# "தமிழ்த் தூது"
## (கட்டுரைக் கொத்து)

*புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம்*

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளோடு முன்தோன்றிய மூத்த குடி''

என்று பழந்தமிழ் நூல்கள் எடுத்துரைக்கின்ற தமிழினத்தின், மொழியின், நாட்டின், பண்பாட்டை, கலாச்சாரத்தை, நாகரிகத்தை, சீரினை, சிறப்பினை, உயர்வினைத், தனித் தன்மையினைத் தமிழர்களாகிய நாம் அறிந்து கொள்ளாதும், தெரிந்து கொள்ளாதும், ''பாமரராய், விலங்குகளாய்''; ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்''; ''நாமமது தமிழர் எனக் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?' என வயிறெரிந்து பாடினார் பாரதியார். இவரின் கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதைத் தவத்திரு தனிநாயக அடிகள் **1951**ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காம் தமிழ்விழாவில் நிகழ்த்திய ''சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு'' எனும் உரையின்போது குறிப்பிட்டார்கள். ''இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின் Discouery of India என்றும் Histody of Indian Literature என்றும் பலப் படப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் பார்மின், மாக்ஸ்முல்லர், வின்றர்னிட்ஸ் போன்றவர் முதலாகப் பலரும், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ ஒரு சொல்லேனும் ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக் கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர்கள் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர் இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின் இன்று இவ்வுண்மையை எடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கூறுவதும், மக்கள் மனதில் ஐயம் விளை விப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுவதற்கும், பெரிதும் மனத்துணிபு வேண்டற்பாலதாயிற்று. தமிழராகிய நாமும், நமது இந்திய மொழிகளிலேனும் நம் தமிழைப்பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினேம் அல்லேம்.

''மெய்யுடை யொருவன் சொலமாட்டா மையால்
பொய்போ லும்மே பொய்போலும்மே-''

''பொய்யுடையொருவன் சொல்வன்மை யினல்
மெய்போலும்மே மெய் போலும்மே'

ஆதலின் உலகம் நம்மை உணராமலும்,நாமே நம்மை உணராமலும்; ''பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு, நாமமது தமிழர் எனக்கொண்டு இங்கு உயிர் வாழ்ந்து வந்துள்ளோம்''எனக் குறிப்பிட்டார்கள்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்-''

எனப் பாரதி கண்ட கனவை அடிகளார்;

''வேற்று நாடுகளில் வாழும் பொழுது தமிழ்ப்பற்றும் ஆற்றலும் மிகுவது வேற்றுநாடுகளில் வாழ்ந்துள்ள தமிழர் உண்மையென உணர்வர். உரோமை மாநகரில் நான் உறைந்த குருமடத்திலும், திருமறை நூற்கல்வி பயின்ற பல்கலைக் கழகத்திலும், நாற்பத்து மூன்று வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தோர் என்னுடன் மாணக்கராய் இருந்தனர். அவருடன் ஐந்து ஆண்டுகள் (1934-1939) வாழ்ந்ததன் பயனாகவே பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன். அவரிடை வதியுங்கால் என் தமிழ்ப் பற்றுமிகுந்ததே அன்றிக் குறைந்திலது. அயல் நாட்டுத் தொடர்பாலும், அயல் மொழிப் பயிற்சியாலும், நம் நாட்டு மொழிப் பற்று நனி சிறந்து வளர்கின்றது; பிறமொழிகளுடன் தமிழைச் சீர்தூக்கிப் பார்க்கும் பெரும் பேற்றினையும் அடைகின்றேம்.

அவ்வாண்டுகளில் உரோமை மாநகரில் ஒருங்கு வாழ்ந்த தமிழர் எண்மர். நாங்கள் ''வீரமாமுனிவர் கழகம்'' என ஒன்று குருமடத்தில் நிறுவி, தமிழை ஆண்டும் ஒருசிறிது பயின்று வந்தனம்; வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலிபரப்பும் வாய்ப்பும் பன்முறை பெற்றேம். அங்ஙனம் ஒலிபரப்புந் தோறும் ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை'' செய்தோம் எனக் கருதிக் களிப்புற்றேம். ஆங்கு வதியும் காலத்தேதான், அயல்நாடு செல்லும் தமிழ் மாணவர் தமிழ்ப் பயிற்சி மிக்குளரேல், எத்துணை உயரிய தமிழ்த் தொண்டு இயற்றுதல் கூடும் என்பது இனிது உணர்ந்தேன்.

''அமெரிக்கா இற்றை ஞான்று தோன்றிய நாடு; இன்னும் இளமை நிலையில் இருக்கின்றது. ஒரு நூற்றாண்டு, இருநூற்றாண்டுகள் படைத்த இடங்கள் அல்லது பொருள்கள் என்றால், அமெரிக்கருக்கு மிகப் பழைய பொருள்களாகவும், இடங்களாகவும் தோன்றுவன. ஆதலால், அவர்கட்குத் தமிழர் ப, மையையும், தமிழரின் பண்டை வாணிகத்தையும், இயவனர், உரோமர் போன்றோருடன் தமிழ் நாட்டு நட்பையும் கூறியபோது அவர்க்குப் பெரிதும் வியப்பு உண்டாயிற்று. அவருட் பெரும்பாலார் இந்திய-இலங்கை வறுமை பற்றியும் உடல் நலம்குன்றியமக்கள் பற்றியும், நோயுற்ற ஊர்கள்பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். எனினும் தமிழ் நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கிய நிதிப் பெருக்கை, தமிழ் மொழியின்சிறப்பியல்பை பழந்தமிழ்க் காதற் பாக்களை,பக்திமாலைகளை பற்றிக் கேள்விப்பட்டவர் அல்லர். அவர் கட்குத் தமிழிலக்கியத்திலிருந்து நான் மொழி பெயர்ப்புடன் கூறிய சில பகுதிகள் இவை. திருக்குறளில்,

''அகர முதலவெழுத்தெல்லாம்,
ஆதி பகவன் முதற்றே யுலகு'', என்னும்

குறள் வெண்பாவை, விவிலிய நூலில்வரும்

"நானே அகரமாயிருக்கிறேன்", என்னும் திருமொழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்டேன். மேலும்,

'யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; தியினுள் தேறல் நீ; பூவினுள் நாற்றம் நீ; கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மையும் நீ என்ற பரிபாடற் பகுதிகளை இசையுடன் உரைத்து விளக்கினேன். இனி தமிழ்மொழியின் வியத்தகும் இயல்புகளையும், தமிழரின் இயற்கை ஈடுபாட்டினையும் ஐந்திணை இலக்கணத்தையும் மலர் மாலைகளை நம்முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக் கூறினேன். தமிழன்னையின் எழில் வடிவத்தைப் பற்றி இன்னும் எனக்கு அமெரிக்கர் ஓலைகள் விடுத்துத் தெளிந்து கொள்கின்றனர்.

தமிழைப் பற்றி மேடை உரைகளை ஆங்கிலத்தில் நடாத்திய எனக்குத் தமிழில் உரையாடுவதற்கோ வாய்ப்புக் கிடைத்ததேஇல்லை வானொலிப் பேட்டிகளில் யாதேனும் தமிழிற் சொல்லும்படி கேட்டால், பாரதியாரின் "செந்தமிழ் நாடு", "யாமறிந்த மொழிகளிலே' என்ற தலைப்புப் பெற்ற செய்யுட்களில் ஒன்றை கூறுவேன். பன்முறைபேட்டியின் பதிவை ( Recording ) நானே தமிழொலி கேட்பதற்காக மீண்டும் ஓர்ந்து கேட்டின்புறுவேன். தேநீர் விருந்துகளிலும் பிற நண்பர் கூட்டங்களிலும், என்னைத் தமிழிற் பாடக் கேட்கும்பொழுது, தமிழ் இசைப் பயிற்சி மிகுதியாகப் பெறாத யான் "தமிழ் மணம் கமழ வேண்டும்' "வெண்ணிலாவும் வானும் போலே", என்ற பாட்டுக்களைப் பாடுவேன். "செந்தமிழ் நாட்டைக்" கும்மியாய்ப் பாட மீண்டும் மீண்டும் கேட்பர். நான் பாட அவர் கைதட்டித் தாளம் போடுவர்.

அமெரிக்காவில் மூன்று திங்கள், தமிழர் எவரையும் காணும் வாய்ப்புப் பெறாத நான், தமிழின் ஒலி இன்பத்தை நுகரக் கருதி, ஒரு நாள் திருக்குறளை எடுத்து, வாய் விட்டுப் படிக்கத் தொடங்கினேன். நூலைத் திறந்ததும் முதன்முதல் நான் கண்ட குறட்பா,

"இருவே றுலகத் தியற்கை; திருவேறு;
தெள்ளிய ராதலும் வேறு'- என்பது.

அந்நேரத்தில் இச்செய்யுளின் ஆழ்ந்த கருத்தொன்று எனக்குத் தோன்றிற்று. அஃது உரைகாரர் கருத்துமன்று; ஊழைப்பற்றிய கருத்துமன்று; என் அருள் மறையின் கருத்தொன்று அச்சொற்களில் பொதிந்திருப்பது கண்டேன். அவ்வடிகளின் மென்மையையும் இனிமையையும் நுகர்ந்தேன். அப்பொழுதும் இத்துணைச் சிறப்புப் பெற்ற இலக்கியத்தையும், இதனைத் தோற்றுவித்த மொழியையும் பரப்புதல் வேண்டுமெனும் துணிவும் மிகுதியாய் ஏற்பட்டது.

திசைநோக்கி கோவிலையும், தமிழ் மொழியை எனக்குத் தாய்மொழியாகத்தந்த இறைவனையும் கைகூப்பி வணங்கினேன்.

கீழ்த்திசை நாடுகளில் தமிழ்ப்பண்பாடு மிகவும் பழமையான காலத்திலேயே பரவியது. சாவகம், சுமத்திராப் போன்ற இடங்களில் இரண்டாம் நூற்றுண்டுக்கு முன்னனே தமிழ். மக்கள் குடியேறி இருக்க வேண்டுமென்பது கெல்டோன் போன்ற அறிஞர்களின் கருத்து. தமிழ் நாட்டிலிருந்து மரக்கலங்கள் அந்நாடுகளுக்குப் பண்டுசென்று வாணிகம் நடத்தின என்றும், ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறுர்கள். இன்றும் சுமத்திராவில் வாழ்ந்து வரும் "காரோபட்டாக்" வகுப்பினரின் உட்பிரிவினராயிருக்கும் சிம்பிரீங் என்போர் தம்மைச் 'சோளியர்' 'சேரர்' 'பாண்டியர்' கலிங்கர் என்று வகுத்திருக்கின்றனர்.

சாவகத்தில் எழுப்பப் பெற்றிருக்கும் 'பிரம்பானுன்', எனும் கோயில், சைவ சித்தாந்தத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கோயில்என்பர்.

இந்தோனேஷியா மொழியில் வழங்கும் சொற்கள் பல, அம்மக்கள் தமிழ் நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பைக் குறிப்பன. எடுத்துக் காட்டாக கப்பல்' என்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கபல்' என்கின்றனர். அவர் வழங்கும் வேறு சில தமிழ்ச் சொற்கள் 'வாடை', 'சுக்கு', 'இஞ்சி' கஞ்சி', 'கொத்துமல்லி', 'குதிரை', கூடை, பெட்டி, பிட்டு போன்றவை. 'தாலி' என்ற சொல்லைக் கொடி' என்ற பொருளி லும் பயன்படுத்திக் கொள்கின்றனர். அம்மா அக்கா, மாமா, தம்பி போன்ற உறவுச்சொற் களும் அங்கு பேச்சுவழக்கில் உள.

தமிழ் மக்கள் பண்டு இசைத்துறையில் அடைந்த முன்னேற்றத்தைப்பற்றி இதுகாறும் போதிய ஆராய்ச்சி நடைபெறவில்லை.சிலப்பதி காரமும்அதன் உரை நூல்களும் பெரியஇசைக் களஞ்சியம் போலப் பல உண்மைகளைத் தம் மகத்தே அடக்கிக் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக; Equal temperament என்று கூறப்படும் இசை நிலையைஐரோப்பியர் ஏறக் குறைய நூற்றிருபத்தைந்து ஆண்டுகட்கு முன் னரே கண்டு பிடித்தனர். ஆனால் தமிழர் இதனை ஈராயிம் ஆண்டுகட்கு முன்னரே அறிந்திருந்தனர் என்பதற்குச்சிலம்பே சான்று (தமிழரும் அவர்தம் கவின் கலைகளும்)

வீரமாமுனிவர் காலம் தொடங்கி, தமி ழில் கன்னிமரியம்மையார் மீது மிகவும் உருக் கமான இலக்கியப் பாடல்கள் பாடப்பெற்று வந்திருக்கின்றன. தமிழிற்குச் சிறப்பான இப் பக்திப் பாடல்கள் கத்தோலிக்குத் தமிழ் இலக்கியத்திலும், அதன் இளமையிலேயே நன்கு பொருந்தியுள்ளன. ''மரியன்னை இலக் கியம்'' (Marian Poetry) எனக் கத்தோ லிக்கு நாடுகளில், கடவுளன்னைமீது உள்ள இலக்கியத்தைத் தொகையிடுவர். இத்தாலி யத்திலும், ஆங்கிலத்திலும் அவ்விலக்கியம் பெருந்தொகையாய் உள்ளது. ஆயினும் தமிழ் மொழியில் கடவுளன்னையைப் பற்றிய பாடல்கள் சென்ற மூன்று நான்கு நூற்றாண் டுகளிலேதான் இயற்றப்பெற்றமையாயினும் ஐரோப்பிய மரியன்னை இலக்கியத்திற்கு அள விலோ, சுவையிலோ வேறு எவ்வகையிலுமோ குறைந்தில. வீரமாமுனிவர் அன்னையை விளித்துக் கூறும் சில அடிகளைப் பார்க்க;

'‘துன்ப நோய்க் குயிர் மருந்தே!
துயர்க்கடலின் நிலைக்கரையே!
இன்பவீட்டுயர் வழியே!
இருள்மயல்கொள் உயிர்க்கொளியே!''

''வழுவார்க்கு நீநிலையே மருள்வார்க்கு
நீ தெளிவே
அழுவார்க்கு நீ களியே அயர்வார்க்கு
நீநிதியே,

''கல்லார்க்குக் கலைக்கடல் நீ கடவார்க்கு
நிலைத்திறன் நீ
இல்லார்க்கு இரணியம் நீ எல்லார்க்கும்
எல்லாம் நீ

''நன்னையே! ஆதரவே! நண்பொழியாத்
தயைக்கடலே!
அன்னையே! அடைக்கலமே! அடிமை
எனை ஆள் அரசே!

''ஆடினும் நான் துறைத்துணை நீ
அருந்தினும் நான் உயிர்ச்சுவை நீ
பாடினும் நான் உரைபொருள் நீ
பருகினும் நான் உயிர்ச்சுகம் நீ''

அவர் மரபில் தோன்றிய வேதநாயகம் பிள்ளை தேவதாயின் பல இலக்கணங்களைப் பற்றி வெண்பாக்கள் இயற்றியுள்ளார்.இவர் அடைக்கலமாதா மீதே பாடிய வெண்பா எத் துணை ஓசையுடைமையும், பொருட்செறிவும் அமைந்துள்ளது!

''ஆரடா பேயே நீ அஞ்சாமல் என்னுடனே
போராடா செய்யப் புறப்பட்டாய்-வீரப்
படைக்கலமாக் கொண்டேன் நான் பண்
டுன்னைத் தேய்த்த
அடைக்கலமா தாசீர்அடி'

பொறுமை மாதாவை நோக்கி இங்ஙு னம் வேண்டுகின்றார்.

''தானமிலேன் சாந்தமிலேன் சற்குணங்
கள் ஏதுமிலேன்
ஞானமிலே னேனுமுனை நம்பினேன்
எனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமைமா தாவாநான் செய்பிழைகள் எல்லாம்
பொறுமைமா தாவே! பொறு''

இவ்வாறு அடிகளார் தமிழ்மொழியின், நாட்டின் பெருமையை, சிறப்பினைப் பண்பாட்டினை, கலாச்சாரத்தினை தாம் சார்ந்திருந்த சமய இலக்கிய நெறியினைப் பரப்புவதில் பெரும்பங்கு கொண்டார்.

அடிகளாரிடம் இருந்த மொழிப்பற்றும் ஆர்வமும் எத்துணை என்பதனை ''என்னுடைய கால்களோ தடுமாறுகின்றன. என்னுடைய கண்களோ பஞ்சடைகின்றன ஆனால் எனது தமிழ் ஆர்வமோ, தமிழ்ப் பற்றோ குறையவில்லை'' என வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் கூறியதன் மூலம் அறிக.

அன்னார் இவ்வுலகில் வாழும்போது கண்ட கனவுகளை நனவாக்குவது தமிழ்கூறும் நல்லுலகின் கடமையாகும். அது எவ்வளவு தூரம் நிறைவுறும் என்பது காலந்தான் பதில்சொல்ல வேண்டும்.

வாழ்க தமிழ்! வளர்க அடிகளார் புகழ்!!

\- - - - - - - - - - - -

தமிழர் பண்பாட்டு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை, ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர் ஐரோப்பியர் ஆகிய பிற நாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், பத்தரும், ஐரோப்பியக் கிருஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதிகுமார் சட்டர்ஜி, இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு—திராவிட பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலப்பதிகாரத்தையும், புத்தரியற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமாறுப் புலவர் இயற்றிய சீராப்புராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுளாரென்பதும் புலனாகின்றது.

— அருட்திரு. தனிநாயகம் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகளாரும் குருத்துவமும்

## நிர்மலா இராசரத்தினம்

( பொதுஜனத் தொடர்புக்கலை — டிப்புளோமா )

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேநின்று இருவரையும் இணைப்பவர் குரு. நண்பனாக, ஆசிரியனாக, தந்தையாக, ஆலோசகராக மக்கள் மத்தியில் தொண்டாற்றி வருபவரும் இவரே. இறைபணிக்கென்று இறைவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் இவர்கள். இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட குருத்துவத்தைப் பங்கம் எதுவுமின்றிக் காத்து வாழவேண்டிய நிலையில் குருக்கள் உள்ளனர். இவ்வுலகில் இன்னல்கள், சோதனைகள் மத்தியில் எதிர் நீச்சல் போடவேண்டியவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள். கவலையும், வேதனையும், சோதனைகளும் இவ் அடிகளாரையும் விட்டு வைக்கவில்லை. குருத்துவ அந்தஸ்தை அடைவது இலகுவானதல்ல என்பதை இவரது வாழ்வு காட்டுகிறது.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.''

எனும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப இறைவனின் பற்றைப் பற்றிக் கொண்டார் உலகப் பற்றைத் துறந்த இத்துறவி தமிழைத் துறக்கவில்லை. பக்தியின் மொழியாக நம் தமிழைக் கண்டார். இறைவனுடனும், தமிழுடனும் இரண்டறக் கலந்தார். இவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகளைப் பார்க்கும் போது இவர் இறைவன் மேல் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும், விசுவாசமும் புலனாகும். தமிழ் இலக்கியக் கருத்துக்களைச் சமயச் சொற்பொழிவுகளின் போது புகுத்தியும், ஒப்பிட்டும் உதாரணமாக மேற் கொண்டும் வந்தார். பரிசுத்த தேவதாயின் மேல் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த இவ்வடிகளார் தன் நூல்களில் அவளை மகிமைப்படுத்தக் கூடிய இடங்களில் மகிமைப்படுத்தியும் அவளின் புகழை எடுத்துக் கூறவும் பின்நிற்கவில்லை. இலங்கையில் விரிவுரையாளராகக் கடமைஆற்றியபோது புதன்கிழமை மாலையில் பொரளையில் உள்ள (All Saints Church) சகல புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெறும் சதா சகாய மாதாவின் ஆராதனைகளில் பிரசங்கம் செய்தார். இவை தேவதாயின் மேல் இவர் கொண்டிருந்த அளவற்ற அன்பிற்கு சான்று பகர்கின்றன.

1913-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 2-ம் திகதி ஊர்காவற்றுறையில் உள்ள 'கரம்பொன்' எனும் இடத்தில் அடிகளார் பிறந்தார். நெடுந்தீவு உடையாராக விளங்கிய சின்னத்தம்பி நாகாகதர் அவர்களின் இளைய மகன் கணபதிப்பிள்ளை இஸ்ரனிஸ்லோஸ் இவரது தந்தையார். இவர் ஓர் ஆசிரியர். கரம்பொனைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரி சிசில் இராசம்மா இவரது தாயார் ஆவர். இவர்கள் தம் திருமணத்தின் பின் கரம்பொனில் உள்ள புனித ''சின்னமடுமாதா', தேவாலயத்திற்குச் சென்று தம் முதற் குழந்தை ஆண் மகவாகப் பிறந்தால் குருவாக இறைவனுக்கு அர்ப்பணிப்பதென்று நேர்த்தி வைத்திருந்தனர். இவர்களின் விருப்பின்படி ஆண்குழந்தையும் பிறந்தது. 'சேவியர்' என்று பெயரிட்டனர். இவரது தலையில், உச்சியில் ஓர் சிறு சிலுவை அடையாளமும் இருந்தது.

பெற்றோர் இவரைக் குருவாக்க விரும்பியபோதும் சிறுவயதில் இவர் மறுத்து வந்தார். இது அவர்களுக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. ''பெற்றோர் வைத்த நேர்த்தியைப் பிள்ளை விரும்பாவிடில் நிறைவேற்ற வேண்டியதில்லை. விருப்பமில்லாவிட்டால் குருவாகத் தேவையில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவசங்கீர்த்தனத்தின் போது சுவாமி சொன்னார். ஆகவேநான் போகமாட்டேன்'' என்று பெற்ருேர் கேட்கும் போதெல்லாம் மறுத்து வந்தார்.

ஆரம்பத்தில் இரு வருடங்கள் ஊர் காவற்றுறை புனித அந்தேகனியார் கல்லூரியிலும், பின் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வியையும், உயர் கல்வியையும் கற்ருர். கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுத் துறையிலும் திறமை மிக்கவராக விளங்கினுர். துடியாட்டமும், துடுக்குத்தனமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. 1930-ம்ஆண்டு கேம்பிரிட்ஜ் பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்தார். இதன் பின்பு இவரது மனம் குருத்துவத்தில் நாட்டம் கொண்டது. இவரது தாயின் மரணமும் இவரைக் குருத்துவத்தை நாட வைத்தது. ''இவ்வுலகில் நான் ஒரு முறைதான் வாழ முடியும், ஆகவே நான் செய்ய வேண்டிய நல்லவற்றைச் செய்ய வேண்டும் என் உடன் பிறப்பினர்க்கு அன்பு காட்ட வேண்டுமானல் உடனே அதைச் செய்ய வேண்டும். இதனைக் காலம் தாழ்த்தவோ கவனயீனமாக விடவோ கூடாது. ஏனெனில் நான் ஒருபோதும் மீண்டும் இவ்வழியால் போக முடியாது!'' எனும் பொருள் பொதிந்த கட்டுரை ஒன்று அடிகளாரின் மனம் மாறி குருத்துவத்தை நாட வழி காட்டியது.

1931-ம் ஆண்டு கொழும்பில் உள்ள புனித பேணுட் குருமடத்தில் சேர்ந்து குருத்துவப் பயிற்சி பெய்ருர். இங்குபெரும் பிரச்சினைகளை இவர் எதிர் நோக்கவேண்டி இருந்தது. இருவருடங்கள் இங்குபயின்ற பின் குருமடத்தை விட்டு, விலகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். குருத்துவ அந்தஸ்துக்கு அழைத்தல் இல்லை என்று கூறப்பட்டது. ஆனல் அடிகளார் மனந்தளரவில்லை. குருத்துவமே தனக்கு இறைவன் கொடுத்த அந்தஸ்து என்று அவர் உணர்ந்து கொண்டார்'' தன் தலையணை கண்ணீரால் தோய அழுது, அழுது இறைவனுடன் தன் கவலையையும், பிரச்சினைகளையும் எடுத்துக்கூருத இரவுகள் இல்லை'' என்று அடிகளாரே தன் நிலையை எடுத்துக் கூறியுள்ளார். இந்நிலையில் இவருக்கு ஆதரவு கொடுத்த குருமார்களுள் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபராக இருந்த வண. பிதா. 'லோங்', வண. பிதா. மத்தியூ அடிகளார் முக்கியம் வாய்ந்தவர்கள். செய்வதறியாது இருந்த இந்நிலையில் இறைவன் இவரைக் கைவிடவில்லை.

இந்தியாவிலுள்ள திருவாங்கூர் மேற்றிராசன ஆயர் வண. மாய்வானஸ் ஆண்டவர் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் கத்தோலிக்க சமயத்தில்சீரிய முறையைச் சேர்ந்தவர். இலங்கையில் இருந்து தகுந்தவர்களைத் தன் சபையில் சேர்க்கும்பொருட்டு இங்கு வந்திருந்தார். பேர்ணுட் செமினரிக்கு இம் மேற்றிராணியார் சென்றிருந்தபோது அடிகளாரின் திறமையையும், அவரது நிலையையும் அறிந்து இந்தியாவுக்குத் தன்னுடன் வரும்படி அழைத்தார். நீர்கொழும்பு மரிஸ்ரெலாக் கல்லூரியில் . ஆசிரியராக அப்போது கடமையாற்றிக் கொண்டு இருந்த அடிகளாரின் தந்தையையும் கண்டு இதுபற்றிக் கூறினுர். சிறிது காலத்தின் பின் அடிகளார் இந்தியா சென்று தன் நிலையை வண. மாய்வானஸ் ஆண்டவரிடம் எடுத்துக் கூறிவிட்டு இலங்கை வந்தார். 1934-ம் ஆண்டு இவர் அடிகளாரை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார். 1934-1939-ம் ஆண்டுவரை ரோமாபுரியில் உள்ள குருத்துவ மாணவர் பயிலும் சர்வகலாசாலையில் சமய சாஸ்திரங்களைப் பயின்று திருமறைக் கலாநிதியானுர். இங்கு பலநாட்டு, பலமொழி பேசும் இனத்தினருடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிட்டியது. இதனல் தன் மொழியின் பற்றும் வளர்ந்தது. அவர்கள் தம் மொழிக்கு விழா எடுப்பதைக் கண்டு அடிகளாரும் தமிழ் மொழிக்கும் விழா எடுக்க ஆவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இதனை 'ஒன்றே உலகம்' எனும் நூலில் காட்டி உள்ளார். 1939-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-ம் திகதி 'இலத்தீன் முறையின்படி குருப்பட்டம் பெற்றார் தன் முதற் திவ்விய பலிப்பூசையைத் தன் தாயின் நினைவாக அவவின் பெயர்கொண்ட பரி. சிசிலியம்மாளின் கல்லறையில் வைத்தார். 1939-ம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கை வந்த அடிகளாருக்கு அவரது தகப்பனுர் நெடுந்தீவில் பெருவிழாவினை நடாத்தினுர். திவ்விய பலிபூசையும் ஒப்புக் கொடுத்தார்.

1940-ம் ஆண்டு இலங்கை வந்திருந்த தூத்துக்குடி மேற்றிராணியார் வண. ரோச் ஆண்டவர் அடிகளாரை இந்தியாவுக்குக் கூட்டிச் சென்றார். உதவிக்குருவாக இங்கு கடமை ஆற்றினுர். எப்பகுதியிலாவது பங்கு மக்கள் அமைதியின்றி குழப்ப நிலையில் இருந்தால் அவர்களைச் சமாதானப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு இவ்வடிகளாரை அனுப்புவது வழக்கம். இவர் இப்பகுதி மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி இருந்தார். ரோச் ஆண்டவரின் தூண்டுதலினுல் தமிழ் படித்த அடிகளாரை ஓர் தமிழ்ப் பெயரும் வைக்குமாறு பணித்தார். இதற்கு ஏற்ப தன் தந்தையின் விருப்பின்படி நெடுந்தீவைச் சேர்ந்த தம் வம்சப் பெயரான ' தனிநாயகம் ' எனும் தனிநாயக முதலியின் பெயரை எடுத்துக் கொண்டார். இதன்படி 'சேவியர் தனிநாயகம்'' எனப்பட்டார். இவ்வாறு தனிநாயகம் அடிகளார் தமிழில் பாண்டித்தியம் பெற வழிகாட்டியவர் இம் மேற்றிராணியார் ஆவர். யப்பாணில் புனித சவேரியார் இறந்த 500 வருடவிழாக் கொண்டாடப்பட்டபோது அடிகளாரை மேற்றிராணியார் அனுப்பி வைத்தார்.

''என்னை இறைவன் நன்கு படைத்தனன்
தன்னை அறிந்து தமிழ் செய்யுமாறே''

என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த இத்துறவிக்கு இலங்கையில் இறுதி ஏழு ஆண்டுகளை இறைவன் கொடுத்து இருந்தார். ''தான் விட்ட தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோரி இறைவன் தன்னுடன் மிக நெருக்கமாகத் தன்னை இணைத்த காலம்'' இது என அடிகக்கடி சொல்வார். குருமகர் வீண்கதைகட்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது இவரது கொள்கையாக இருந்தது '' தான் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்து விட்டதாகவும், படுக்கையில் நோய் வாய்ப்பட்டு நடக்கமுடியாது இருக்காது இறைவனடி சேர வேண்டும்'' என விரும்பிய அடிகளாரை இறைவன் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். குருவாக வருமுன் இவர் பட்ட இன்னல்கள் யாவும் குருத்துவத்தை இறுதிவரை கடைப்பிடிக்க இறைவன் அளித்த கொடைகள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், புகழும், செல்வச் செழிப்பும் இவரை அணுகியபோதும், தான் ஓர் 'துறவி' என்பதை மறக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்த்தாயின் தனிப்பெருமை கண்ட தனயன் தனிநாயகம் அடிகளார்"

அருட்செல்வி. பெனடிக்ரா வஸ்தியாம்பிள்ளை தி. சி. க.
தலைவர் கிறீத்தவ தமிழ்ப்பண்பாட்டுப் பேரவை

மொழிகளில் தொன்மை கொண்டது தமிழ்மொழி. தனக்கு ஒரு அன்னை அற்றதும் அம் மொழியே. அம்மொழியைப் பாரெங்கும் பரவச் செய்யப்பாரதி கனவு கண்டான். அவன் கனவை நனவாக்கித் தமிழ் மொழியின் மாண்பை, அதன் தனிச் சிறப்பைத் தாரணியெங்கும் அறியவைத்த தனிமலை, தவத்திரு தனிநாயகம் அடிகளே யாகும்.

"மறைவாக நமக்குள்ளே-பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில்-வெளிநாட்டார்
அதை வணங்கச் செய்தல் வேண்டும்"

என்றதை மனதிற் கொண்டு,

"என்னை இறைவன் நன்ருகப் படைத்தனன்
தன்னை நன்கு தமிழ் செய்யுமாறே"

என்ற சிறப்புரைக்கு உருவும் உயிரும் அளித்தது; அதை உண்மையென நிருபித்து ஈழத்தமிழர் மத்தியில் இன உணர்வும், தமிழ் உணர்வும் ததும்பியவராய், கலாச் சார ரீதியில் கடுமுயற்சி செய்த புண்ணிய புத்திரன் சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் தனிநயகம் அடிகளேயாவர். இவர் யாழ்ப்பாணத்தின் தீவுக் கூட்டங்களில் ஒன்ருய், இந்து சமுத்திரத்தில் இயற்கை அழகு பெற்ற நெடுந்தீவிலே 1913-ம் ஆண்டு ஆவணித்திங்கள் 2-ம் நாளிலே அவதார மாஞர்.

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியிலும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வியைக் கவனமாய்க் கற்ருர். பணிகளிலெல்லாம் சிறந்த பணி இறை பணி என விளங்கித் தன் பதினெட்டாம் பருவத்தில் நிலையான உலக பேர்புகழ் வாழ்வை நீத்துக் குருவாகப் பயிற்சி பெறக் குருமடத்தினை நாடினூர். இவர் கலைத் திறனை ஊகித்தறிந்த இவரது அதிபர்கள் இலங்கையிற் கற்ற கல்வி இவருக்குப் போதாது என உணர்ந்து, மேலான மறைக் கல்வியைக் கற்க மேல்நாட்டிற்கே அனுப்பி விட்டனர். தனது 21-ம் வயதில் ரோமாபுரி சென்றவர் 25-ம் வயதில் மறைக்கல்வியில் கலாநிதிப்பட்டம் பெற்ருர்

பள்ளிப் பையனுக இருந்தபோது துள்ளி விளையாடித் திரிந்து மட்டும் பொழுதைப் போக்கினவரல்லர். பாடசாலைக் காலத்தில் முதலும் சிறப்புமாய் பல பரிசில்களையும், பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், கலாசாலைச் சஞ்சிகையின் ஆசிரிய பதவியையும் கையேற்று கவனத்துடன் செயலாற்றி ஆசிரியரதும், மாணவரதும் அபிமானத்தை அடைந்து கொண்டார்.

முற்றுந்துறந்த முனிவரான தனிநாயகம் அடிகளார் தமிழ்மொழிப் பற்றைத் தத்தம் செய்ய இயலாது தவித்தார். தமிழ் மொழிமீது தணியாத பற்றுக் கொண்டார் "உலகில் நான் ஒருமுறை மட்டுமே வாழ்வேன்; எனவே நான் இறக்குமுன் என்னுல் இயன்ற நன்மைகளைச் செய்ய வேண்டும்" என்ற வாக்கினை ஆங்கிலத்தில் படித்தவரானபடியால் ரோமாபுரியில் இருந்து திரும்பியதும் தமிழ் நாட்டில் வடக்கன் குளத்திலுள்ள புனித திரேசாள் கல்லூரி ஆசிரியப் பணியை ஆவலோடு ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். தன்னுல் இயன்றமட்டும் தமிழ்த்தாய்க்குத் தொண்டுபுரிய எண்ணினர். தமிழ் அன்னைக்குத் தனிச் சிறப்புக் கொடுத்து அரியாசனத்திருத்தி அழகு பார்த்தார். "ஈழத்தமிழனுக்குத் தனித்துவம் உண்டு. தனித்து நிற்கச் சக்தி படைத்தவன் தமிழன். ஒவ்வொரு தமிழனுக்கும் நாடு, மொழி, இனம், உலகப் பற்றுக்கள் இருக்க வேண்டும். தமிழன் என்று தலைநிமிர்ந்து சொல்லும் ஒவ்வொருவனுக்கும் குறைந்தது 10ஆயிரம் சொற்கள் எனினும் தமிழில் தெரிந்திருக்க வேண்டும்", என்றின்னோரன்ன ஊக்கமூட்டும் வாக்கு மொழிகளால் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டினர். இவ்வாறு தமிழில் இவர் கொண்ட தணியாத தாகத்தைத் தீர்க்கும் வழியை 1945-1949-ம் ஆண்டு கட்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் மொழிமுதுமாணி, இலக்கிய முதுமாணிப் பட்டங்களைப் பெற்று அறிந்து கொண்டார்

கத்தோலிக்க தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகப் பல நாடுகட்கும் சுற்றுலா சென்றார். சொற்பெருக்காற்றினர். தமிழ்ப் புலவர்கள் மகாநாடுகளிலும், தமிழ்க்கலைஞர்கள் மகாநாடுகளிலும் தயங்காமல் நின்று, தமிழ்மொழிப் பெருமையை எடுத்தியம்பினர். கம்பீரத்தோற்றம், பிறமொழிக்கலப்பற்ற கணீரென்ற சத்தம், மடைதிறந்தாற்போல மணிப்பிரவாள நடை, எவ்வளவு நேரந்தான் போனுலும் தான் எடுத்த கருமத்திற் கண்ணுயிருந்து தன் நோக்கை நிறைவேற்றும் தன்மை இவைகளே தனிநாயகத்தின் தனிச்சிறப்புகள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம்"

என்று தான்மட்டும் தமிழ்த்தேனைச் சுவைத்தல் போதாது. அதன் இனிமையை ஏனையோரும் சுவைத்தறிய வேண்டும் என்று இலங்கைப் பல்கலைக் கழகத்தில் "கல்விக் கொள்கை" விரிவுரையாளராக 1952-1961 வரை பணியாற்றினர். இவர் புகழ் இலங்கையில் மட்டும் நிற்காமல் மலேசியாவுக்கும் எட்டியது. எனவே அங்குள்ள பல்கலைக் கழகமொன்றில் 1961-1969வரை இந்தியத் துறைகள் கலைத் துறைப் பீடாதிபதியாகப் பணியாற்றினர். கிழக்குவானில் மட்டுமல்ல, ஆதவன் சுடர் மேற்கேயும் பரவுவது போல், ஐரோப்பிய நாடுகளும் அண்ணலை அழைக்கத் தொடங்கின. எனவே தமிழ் அன்னையின் தவப்புதல்வன் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் தாய் புகழ் விளங்க வைக்க, இந்தியக் கலைப் பேராசிரியராய்ப் புகழுடன் பணி புரிந்தார். 1970-1971-ல் இக்கடமையை முடித்ததும் நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்திலும் இதே பணியைத் தொடர்ந்து இருவருடங்களை மேலும் சேவையில் செலவழித்தார்.

இங்ஙனமாய் பாரில் பலதிக்கிலும் பணியாற்றியவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகள் இரண்டிலும் மட்டும் பட்டதாரியாக இருக்கவில்லை. லத்தீன், இத்தாலி பிரான்ஸ், ஸ்பனிஷ், ஜேர்மன் போன்ற மொழிகளில் விசேடதிறமையும், கீப்று, கிறீக், சமஸ்கிருதம், போர்த்துக்கேயம், றூசிய, மலேய, சிங்கள மொழிகளில் சமமான அறிவும் வேறும் பல மொழிகளில் பேச்சறிவும் கொண்டிருந்தார் என்பது உண்மை. இத்தகைய அறிவுகளையும் தன்னகத்தே அடக்கி வைக்காமல், தன் இலட்சியத்தை வெளியிட எழுதிய நூல்களும் உண்டு. ஆற்றிய சொற்பொழிவுகளும் உண்டு. "ஒன்றே உலகம்" (பிரயாணக் கட்டுரை) "தமிழ்த்தூது" (கட்டுரை தொகுப்பு) என்பன அவர் தமிழில் விரிந்த தமிழ் மலர்களாகும். தன் தாயைப் பலரும் அறிய வேண்டும்.

"திறமான புலமையெனில் அவள்
புகழை
வெளிநாட்டார் அறியச் செய்தல்
வேண்டும்"

என்ற பாரதியின் முரசறைவுக்கு எதிர் ஒலியாய் நின்று ஆங்கிலத்திலும் பலநூல்களை அவ்வப்போது எழுதினர். "தமிழ்ப் பண்பும் நாகரீகமும்" (லண்டன்) "வெளிநாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தமிழ் மொழி'' (மலாயா) ''தமிழ் கற்பதற்கான தமிழ் நூல்'' (மலாயா) ''இயற்கையும் புலமையும் தமிழ் இலக்கியங்களில்'' (பம்பாய்) ''கார்த்தூசியன் குருகுலம்'' (அமரிக்கா) என்பன இவரின் ஆங்கில அரும் மலர்களாகும்.

திருமறையின் திருத்தொண்டு, தெய்வீகக் குருத்துவத்தின் பணிகளின் மத்தியிலும், அவர் செய்த உலகச் சுற்றுப் பயணங்களினல் உலகும் கற்றும் வாலிபனய், தமிழ் நெஞ்சங்களின் தவிப்பை அறிந்து அவர்களின் சிறையை மீட்க விடுதலைக்காக உழைத்தார். இருபதுவருட நீண்டகால சுற்றுலாக்களின் விளைவால் எட்டுத்திக்கும் பதினறு கோணங்களிலும் பரவிவாழும் தமிழ் நெஞ்சங்களை ஒருங்கிணைத்த ஒரே பெருமகன், இட்ட வித்து விருட்சமாகி உலகத் தமிழ் ஆராய்ச்சி மகா நாடு என்ற மாண்புமிகு மரமாய் நிற்கின்றது.பன்மொழி கற்ற மாமேதை, தமிழ் இனத்தின் பெருமையைப் பாரெங்கும் பரப்பிய தமிழ்த் தூதர், அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் அந்தந்தை நம் தனிநாயகத்தின் வழிநின்று தமிழை வளர்த்துத் தமிழ் நாட்டைக் காக்கும் தனயர் எத்தனை பேரோ!

பலமொழிப் பண்புடையோர் மத்தியில் பரிவுடன் உறவுகொண்ட போதும் பெற்ற தாயிலும் மேலாகத் தமிழ்த்தாய்க்கு விழா எடுத்து வத்திக்கான் வானெலியில் தேமதுரத் தமிழோசையைப் பரப்பி தேசிய உணர்வுடன் வாழ்ந்த தவத்திரு தனிநாயகம் அடிகளார் தானும் தமிழ் இனத்தான்- ஓர் தனி இனத்தான் என்று தனிப் பெருமையுடன் தன் ''சேவியர் ஸ்ரனிஸ்லோஸ்' என்ற பெயரை மாற்றி தனிநாயகம் எனத் தாங்கி தாய்மொழியாம் தமிழ்மொழிக் கோர் தமிழ்நாயகமானுர். இங்ஙனமாய் தமிழ்ப்பாதையின் தனிவழியில் ஓர் மைல் கல்லானர். இக்கல்லே மூலைக்கு முதற்கல்லாகி தமிழாராய்ச்சி மகாநாட்டின் அடிக் கல்லாகியதை அனைவரும் ஆமோதிப்பர்.

தமிழ் ஈழத்தின் நேசபிதாவும், தமிழ் மக்களின் மோசேசும், தமிழ் இனத்தின் உரிமைவாழ்வை, அவர்தம் சுதந்திரவாழ்வையுரிய முறையில் தேடித்தருவதில் திட உள்ளம் கொண்டவருமான அமரர் செல்வாவுடன் தன் தோள் கொடுத்து நின்று, அரசியலில் புகுந்து விடாமல்அப்பால் அடிவைத்து நின்று, தமிழ்த் தேசியம் என்றேனும் ஓர் நாள் அடியெடுத்து முன்னேக்கிச் செல்வதற்காகப் பாடுபட்டுத் தன் பங்களிப்பை முழுமையாகச் செய்த துறவியான தனிநாயகம் அடிகள் 1956-ன் பின் சிங்கள மொழிச்சட்டம் பாராளுமன்றத்தில் அமுலாக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற எதிர்ப்புப் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ''சமஷ்டி அரசியல்'' என்ற தலைப்பில் தயங்காமல் விரிவுரை ஆற்றி திரண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்களின் உணர்ச்சியைத் தூண்டி விழிப்படையச் செய்தார். மட்டுமா?

பெற்றேர்பாசம், மற்றேர் பாசம் என்ற இரத்தபந்த பாசங்களை யெல்லாம் அறுத்தெறிந்த மாமுனிக்குத் தமிழ்பாப் சத்தை மட்டும் தளர்த்தி விடவே முடியவில்லை. தமிழ்ப்பற்று என்னும் பாசக்கயிற்றினல் இறுகப் பிணைக்கப்பட்டிருந்த பக்தனுக்கு தமிழ் படும்பாட்டைக் காணச் சகிக்கவில்லை. அவன் விடும் பெருமூச்சுகளைச் செவிமடுக்க முடியவில்லை. தன் தமிழ்ப் பற்றை, கலை அறிவை எண்பித்து அன்னைக்கோர் ஆறுதலாயும், அருமைச் சகோதரர்கட்கோர் வழிகாட்டியாகவும் விளங்கி அனைவருக்கும் தென்பூட்டவும் துணைசெய்யும் படியும் பதிப்பாசிரியராய் இருந்து ''தமிழ்க் கலாச்சாரம்'' என்ற ஓர் முத்திங்கள் வெளியீட்டை ஆங்கிலத்தில் பதிப்பித்து 1952-1967 வரை நடப்பித்து வந்தார் மட்டுமா? ''தமிழ் போர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேய அகராதி'' (1969) ''தமிழ்க் கலை வர்த்தமானி'' (1969) என்பனவற்றிற்கும் பிரதம பதிப்பாசிரியராய் இருந்தாரென்பதையும் நாம் அறிய இடமுண்டு.

இவ்வாறு நூல்களிலும் ஏட்டாராய்ச்சியிலும் மட்டும் நிறுத்தி வைக்காமல், தமிழ் வாழ வேண்டும், தமிழ் ஆள வேண்டும் அவள் கொடி வானிலே உயர்ந்து தெரிய வேண்டும் என்ற உணர்ச்சிகளால் உந்தப்பட்டவராய் மதகுரு என்பதையும் பொருட்டுத்தாது, தமிழ் இரத்தமோடும் மக்களோடு மக்களாய் தன் தமிழ்த்தாய் மட்டில் தனயனுக்குள்ள பற்றை பாசத்தைக் காட்ட 1956-ல் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டார். ஒரு முறை மட்டுமன்று, திரும்பவும் 1961-ல் சத்தியாக்கிரகம் நடந்தபோது தமிழ் பெற்றிருந்த உயர்நிலையை விளக்கிப் பிரசுரங்களை வெளியிட்டு பொய்ப் பிரசாரங்களை முறியடித்தார்.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் ரோமான் கத்தோலிக்க குரவராய் இருந்தும் அவர் பணி இன, மத வரம்புகளை மீறிப் பாய்ந்தது. ஈழநாட்டில் மட்டும் இடம் பெறுமல் அகில உலக ரீதியில் பெருக்கெடுத்துப் பிரவகித்து ஓடியது. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் செல்லத்தவறிய இடங்கட்குமெல்லாம் அடிகளார் சென்று தமிழ் மணம் பரப்பினுர்கள்.

அடிகளார் வாழ்நாட்களில் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகளை மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது. 1967-ம் ஆண்டு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் நினைவாகத் ''திருக்குறள்'' பற்றித் திவ்விய உரை ஆற்றினுர். 1972-ல் வட்டுக்கோட்டை யாழ். கல்லூரியில் பங்கர் நினைவுச் சொற்பொழிவுகளாக ''தமிழர் தம் மத இன நலக் கோட்பாடுகள்'' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் உணர்ச்சி ததும்ப உரை கொடுத்தார். 1980-ல் ''தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்'' என்ற தலைப்பில் தமிழிலும் ''தமிழியல் ஆய்வுகள் அன்றும் இன்றும்'' என ஆங்கிலத்திலும் தந்தை செல்வா நினைவு அர்ப்பண விழாவின்போது அழகாக எடுத்தறைந்தார். நோயும் நொடியும் எவரையும் விலகிச் செல்வதில்லை. அதன் பயனுய் பொதுநிகழ்ச்சிகளில் ஒதுங்கிநின்றுலும் ஒருசிலவற்றில் பங்கு கொண்டபடியால் 1980 வைகாசித்திங்கள் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் கலந்து கொண்டார். இதுவே அவரது கடைசியான வெளி நிகழ்ச்சிகளின் பங்கு பற்றலாகுமென எவர்தான் எண்ணினர்.

தீராத தமிழ் உணர்வும் தணியாத தமிழ்ப்பற்றும் கொண்டு தமிழுக்குத் தனிப் பெருந் தொண்டாற்றி அதன் நறுமணத்தை நாற்றிசையிலும் கமழச் செய்த சிவந்த ரோஜா 1980-ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 1-ம் நாள் தன் புதுப் பொலிவை இழந்து வாடிக் கிடந்தது. தமிழ் மலை எனத் தாரணி போற்றும் தனிநாயகம் அடிகளார், பாரெங்கும் தூது சென்ற வானம்பாடி பரமனடி சென்றுவிட்டது. பாரெங்கும் புலம்பல் ஒலி, பலதிசையும் இரங்கல் கூட்டங்கள். பாச மக்கள் நேசக்கண்ணீர் உகுத்தனர். நம் நாயகத்திற்கு நன்றிக்கடன் தீர்ப்பது எவ்வாறெனத் திகைத்தனர்.

மலர்போன்ற மனம்படைத்த தமிழ் மலைக்கு, மலர்மாலை அணிவதிலும் சிலை எழுப்புவதிலும் மட்டும் நன்றிக் கடன் தீராது. அடிகளின் தியாகம், அவரின் வீரம் பொறுப்புணர்ச்சி என்பவற்றை ஒவ்வொரு தமிழ் மகனும் கொண்டிருந்து மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசாமல் திறமான புலமையுடன் வெளி நாட்டார் அதை வணங்கச் செய்தல் வேண்டும். இதுவே அன்னுர்க்கு நாம் அளிக்கும் அரும் பெரும் நன்றிக்கடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீத்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை 1980-ம் ஆண்டில் நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசருக்கு எடுத்த 105-ம் ஆண்டு விழாவில் வெளியிட்ட சிறப்பு மலருக்கு அடிகளார் அளித்த ஆசியுரையில் தன் பேரவாக்களில் ஒன்றை வெளியிட்டார்.

''சுவாமி ஞானப்பிரகாசர் திருமறைக்காகவும், தமிழுக்காகவும் உழைத்த மனப்பான்மையை அறிஞரே நன்கு உணர்வார்கள். நம் இளைஞர்கள் அவர் நூல்களைப் படித்துப் பயன் பெறுதல் வேண்டும். பேராசிரியர் சேதுப்பிள்ளை இயற்றிய ''திருக்காவலூர்க் கோவில்'' என்னும் நூலுக்கு சுவாமி ஞானப்பிரகாசர் அழகிய முன்னுரை ஒன்றையெழுதியுள்ளார். இந்நூலை இலங்கையிற் பதிப்பித்துப் பரப்ப வேண்டும் என்பதே என் பேரவா''

எனவே இவரது பேரவாவைப் பூர்த்தி செய்ய யார்தான் முன் வருவார்களோ? அவர் தாகசாந்திக்கு யார்தான் குளிர்ந்த ஜலத்தை வார்ப்பார்களோ?

தமிழ்த்தாய் தழைத்துச் செழித்து, பூரித்துப் புகழ்பெற்று புதுப்பொலிவுடன் புன்னகை ததும்ப அன்னநடை போடும் நன்நாள் எந்நாளோ? இந்நாளை எதிர் பார்த்து ஏங்கும் உள்ளங்களின் ஆசைக் கனவு என்றுதான் நனவாகுமோ?

வாழ்க தமிழ்த் தனிநாயகம்!
வளர்க நம் தமிழ் அன்னை!!

---

இன்று இத்தமிழ்க் கோயிலில் நிகழும் தமிழ் விழா, உலகில் தமிழ் நாட்டின் பெருமையையும், தமிழ்மொழியின் பெருமையையும் நிலைநாட்டும் புதியதோர் இயக்கத்தை உண்டாக்க வல்லதாயின், அது தமிழ் மக்களுக்கே பெருமை தருதலால் நாம் அனைவரும் நமக்கே நன்மை பல பயக்கும் நற்றொண்டைச் செய்தோமாவோம்.

— தனிநாயக அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியில் தமிழ் பரப்பினர்

— ஏ. பி. வி. கோமஸ்

நெடுந்தீவில் பிறந்து, நீள்துயில்கொண்டு விட்டார்—தவத்திரு தனிநாயகம் அடிகளார். 1913ஆம் ஆண்டு, ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் அவதரித்தவர், 1980ஆம் ஆண்டு, புரட்டாதித் திங்கள் முதலாம்நாள் பரமபதம் அடைந்தார்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று' என்ற வள்ளுவரின் நல்வாக்குக்கிணங்க இவ்வவனியில் தோன்றி மறைந்தவர்.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்
டோர் அதை வணக்கஞ்
செய்தல்வேண்டும்' என்ற பாவலர்க்குச் சாரதியாம் பாரதியின் பாவடிகளுக்கு ஏற்ப, பாரினில் பண்போடு வாழ்ந்து காட்டியவர்.

நம்மெல்லாருக்கும் வாழ்வில் ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து சென்றவர். மனபாதையில் மனிதன் வாழவேண்டிய மகத்தான வழியை, மக்களுக்குக் குறிப்பாகத் 'தமிழர்களுக்கு' — உணர்த்தியவர், ஆம், வாழ்வாங்கு வாழ்தல் என்றால் என்ன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டித் திகழ்ந்தவர், திகழ்ந்து நம்நெஞ்சில் நீங்காத நினைவாய் நிலைத்துவிட்டவர்.

தமிழர் பண்பாடு என்றால் என்ன என்பதை மட்டுமல்ல, தனியொரு மனிதனும் எவ்வாறு வாழவேண்டும் என்பதை, இந்தத் தாரணிவாழ் மக்களுக்குக் காட்டிச் சென்ற தனியொரு தகைசால் பண்பாளன் என்று தயங்காமற் கூறலாம்.

ஆமாம்—

சொந்தத் தனி வாழ்வில், செம்மை சான்ற ஒரு சமயத்தின், உண்மை அடிப்படைக் கோட்பாடுகளைச் செம்மையாகக் கடைப்பிடித்து, நேரிய முறையில், உண்மை நெறிவழி தவறாது, நேர்மையாக வாழ்ந்து காட்டிய செம்மல்.

பொதுவாழ்வில்—இவ்வுலகில் பிறக்கும் ஒரு மனிதன் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்கவேண்டும் என்பதனைக் காட்டிச் சென்ற ஓர் அடலேறு போன்றவர்.

மனத்திற் கொண்ட இலட்சியத்துக்காக, மாறாத மனத்திடத்துடன் கோணாது பாடுபட்ட கோமான். ஆமாம்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் தணியாத இலட்சியம்தான் என்ன?

"தமிழ் மொழி, மிகத் தொன்மை சான்ற மொழி; தோன்றிய பல மொழிகள் மாண்டு மண்ணோடு மண்ணாகிவிட்டாலும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட கால முதல் தோன்றிய நிலையில் சற்று மாறினாலும், இளமைமாறாது, பழுதின்றிப் பயின்று வருவது செந்தமிழ் — எனவே, நம்மால் இயன்ற அளவு இம்மொழியின் செம்மை சான்ற பெருமைதனைச் செகமெல்லாம் பரப்பவேண்டும்" என்பதேயாம்.

"ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே" என்று
தமிழ் மொழியை வாழவைப்பதே.

இந்த நல்லிலட்சியத்தை, தனி மனிதனாய் நின்று சாதித்துக் காட்டிய தனிப் பெருமை தனிநாயக அடிகளாரைச் சாரும். "தனிநாயகத்துக்கு சபாநாயகம் தேவையில்லை" என்று பேராசான் ரா. பி. சேதுப்பிள்ளை புகழ்ந்ததுபோல், தனிநாயக அடிகளாருக்கு, தன்முன்னையின் உதவியன்றி ஒன்றுமே தேவைப்படவில்லை.

அவர் ஆற்றிய பணிகள் இன்றைக்கும் இதனைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற '' தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் '' பல பாரிய செயற்பாடுகளுக்கு ஓர் அடித்தளமாக அமைந்தது என்றே கூறவேண்டும்,

'' சங்கங்களால் நல்ல சங்கங்களால்—மக்கள்
சாதித்திடல்கூடும் பெரும்பெரும்காரியம்''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதுபோல் பெரும் பெருங் காரியங்களைச் சாதித்துக்காட்டிய கழகமிதுவாயமைந்தது.

அந்த நற்கவிஞனின் சொல்லோவியத் தின்படியே

'' அன்னைத் தமிழை அரியாசனத்தில்
அமர்த்தத் தோன்றிய அடலேறு
அனையான் '

என்று அழைக்கக்கூடிய தனிநாயகம் அடிகளார், தரணி புகழத் தமிழ்மொழியை உயர்த்தத், தனியொரு ஏணிப்படியாய் அமைந்தது இக்கழகமே.

இதுமட்டுமா ?

'' அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி
குறுகிய செயல்கள் தீர்ந்து
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண்ணே உன்
நலம் காணுர் ஞாலம் காணுர் ''

என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்து தமிழ்ப் பண்பாட்டைத் தரணிவாழ் அனைவரும் சரியான முறையில் உணர்ந்து கொள்ளச் செய்தது, தனிநாயக அடிகளார் நடத்திய ' தமிழ்ப் பண்பாடு ' என்ற காலாண்டு ஏடே !

மேலும்—

' கீழைத் தேயவியல் ' பற்றிய ஆய்வரங்குகளில் ' தமிழியல் ' ஆய்வுக்கு ஏற்ற விடம் கொடுக்கப்படவில்லை என்று நுண்ணிதில் அறிந்த அடிகளார், தமிழியல் ஆய்வுக்கென்றே ஒரு தனிக்களம் அவசியம்என்பதை அறிந்து — 1965ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட ' அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் ' இன்றுவரை தண்டமிழ் மொழிக்கு ஆற்றிவரும் பணியை உலகறியும். இம்மன்றத்தின் இணைச்செயலாளர்களில் ஒருவராய் இருந்து, தனிநாயகம் அடிகளார் ஆற்றிய நற்பணியை, உண்மையில் எந்தவோர் அருந்தமிழ் உள்ளமும் அரிதினில் மறக்க முடியாது,

இந்த மன்றம் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவதை எந்தத் தமிழ்மகன்தான் அறியமாட்டான். இதன் சேவைகள் என்னும்போது பொழுது, படாடோபமாக நடத்தப்படும் மாநாடுகளின் வெளியரங்கப் ' பகட்டுகளைக் ' குறிப்பிடவில்லை. ஆனல் இம்மாநாடுகள் அடிப்படையாக உணர்த்தும் ஆழ்ந்த தமிழ் உணர்ச்சியையும், உலகளாவிய நிலையில் வாழ்ந்தாலும் 'தமிழர்' மொழியால், இனத்தால் ஒன்று என்று உணர்த்தும் ஓர் எண்ணத்தைப் பரப்புவதையுமே குறிபபிடுகிறேம். ஆமாம் தண்டமிழ் மொழியின் தனித்துவத்தைத் தரணிக்கு எடுத்துக்காட்டுவதையுந்தான் கூறுகிறேம். எனவே இம்மாநாடுகள் அரசியல்வாதிகளின் அல்லது சுயநலவாதிகளின் சூதாட்டக் காய்களாக ஆகிவிடாமற் பாதுகாத்துக்கொள்வது தமிழ்மொழியின்மேல் தனிப்பற்றும், தனிநாயக அடிகளார்மீது தணியாத பாசமும் கொண்டவர்களின் தனியொரு கடமையாகும்.


எது எவ்வாறிருப்பினும், தமிழ்மொழியை வெளிநாட்டார் ' வணக்கஞ் ' செய்யச் செய்தவர் இவரே. ' தமிழ்ப் பண்பாடு ' என்ற காலாண்டு ஏடு, ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டது இதற்குப் பெரிதும் உதவிச்செய்தது. ஏன் ? ஓர் அமைப்பு முறையில் இது உருவாவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் இவர் என்றே கூறலாம். இன்று, உலகிலுள்ள பல பல்கலைக்கழகங்களிலும், ஏனைய அமைப்புகளிலும் தமிழ் மொழிபற்றி ஆராய்வுகள் நடத்தி விமரிசிக்கப்படுகிறது என்றல் அதற்கு அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவத்திரு. தனிநாயக அடிகளார்
## கொடித்தினம் 19-06-81



பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தில்



பருத்தித்துறை கலட்டி கனிட்ட உயர்தர வித்தியாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக் காரணம், 'Tamil Culrure' என்ற காலாண்டு ஏடே.

எனவே, இவையெல்லாம்பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது, உண்மையாகவே தமிழ்மொழியின் மேன்மைக்காக இந்தஅளவு பணியாற்றிய ஒருவர் உளரா என்ற எண்ணமே எழுகிறது. நமக்குள்ளே பழங்கதைகள் நலமே சொல்லிய நல்லவர் பலர் இருக்கலாம். ஏற்கிறேம். ஆனல் தமிழின் தனிப் பெருமையைத் தரணிக்கு எடுத்தோத தன்னலமற்ற ஒரு தூதுவனகத் தனிநாயகம் அடிகளார் விளங்கினர் என்றல் வீண் புகழ்ச்சியல்லவே. அறையில் ஆடிக்கொண்டிருந்த அழகு மங்கையை அம்பலத்தில் ஆடவைத்த பெருமை அவரைச் சாரும் என்றே நினைக்கின்றேம். ஆமாம். அவளின் அழகையும், நளினத்தையும், அபிநயத்தின் மேன்மையையும் அகிலமே கண்டு அநுபவிக்கும் வாய்ப்பை ஆக்கிக்கொடுத்தார் என்பதில் ஐயமேயில்லை. எனவே

தமிழ்மொழியின் மேன்மையை உலகறியச்செய்த, தனிநாயகம் அடிகளாரின் பணியைத் தொடர்ந்துசெய்து பணியாற்றுவதே படித்த பண்பட்டாரின் பாரிய கடமையாகும். எத்துன்பம் வரினும் அத்துன்பம் ஏற்று, முத்தமிழுக்கும் பணிசெய்வது நற்றமிழரின் தனிசார்ந்த கடமை என்பதை நினைவில் கொள்வோமாக.

தமிழ்த்தூது தனிநாயக அடிகளாரின் பெயர் வாழ, தரணிவாழ் தமிழர் அனைவரும் தமிழ்அன்னையின் பெயரால் இணைவோமாக.

'' மன்றமே ! பாலில் வளரும் நெய்யென  
வளருங் கருத்து வளர்ந்து பெருகிட  
ஆய்க ஆய்க அன்னை அருளுவாள்  
ஆய்வின் முடிவும் அன்னை தருவாள் ''

ஆம் முதல் உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இவ்வாறு பாடினர் கவியரசு கண்ணதாசன் எனில் நாம் கூற விரும்புகிறேம்

கன்னித் தமிழின் கவின்மிகு மன்றமே !  
அன்னைத் தமிழின் சென்னி தன்னில்  
மின்னித் திகழும் மகுடமாயுன்னை  
பண்ணிய பெரியோன் பெயர்வாழ-வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு. தனிநாயகரின்

# வாழ்வு வரலாறு

## ( பண்டிதர் ஆசிநாதர் )

எம் ஈழவள நாட்டில் எங்கோ ஒரு திக்கிலுள்ள தீவுத்தலமொன்றிலே பெரு மரபுக் கோத்திரத்திலே சுத்த சைவ வேளாண் குலத்திலே உதித்த ஆசிரியர் ஒருவருக்குப் புதல்வனுகப் பிறந்த ஒருவர், கலை பயின்று பட்டங்கள் பல பெற்று, துறவியாகி, பன்மொழிப் பண்டிதராகி, நல்லாசிரியராகி, பேரறிஞராகி, தமிழ்த்தூதுவராய்த் திகழ்வாரென்று யார்தான் எதிர்பார்த்தார்கள்?

நம் காலத்தவராய்ச் சென்ற ஆண்டு அமரரான சேவியர் தனிநாயக அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துணர்வது தமிழர் எமக்குப் பெரும் உந்துதலாக அமையும்.

## முன்னேர் மரபு :

பழமைப்போது 'பசுத்தீவு' எனஅறியப்பட்டுவந்த நெடுந்தீவுதான் தனிநாயகம் அடிகளாரின் குலமுன்னேரின் வாழ்விடமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் மக்கள் குடியேறுமுன்பே நெடுந்தீவில் மக்கள் சிறப்பாய் வாழ்ந்து வந்தனர். இது வரலாற்ருல் திடப்படுத்தப்பட்டுளது.

'இருமரபுந் தூயதனிநாயக முதலி' எனும் பெருங்குடிமகனின் நேர்வழித் தோன்றலாயிலங்கிய நாகநாதர் கணபதிப்பிள்ளை என்பவரே தனிநாயக அடிகளாரின் தந்தையாவர். இவர் சிறு பராயத்தில் கத்தோலிக்க மதத்தைத் தழுவி, யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியிற் பயின்று அக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினர். இவர் ஊர்காவற்றுறை கரம்பன் நல்லூரில் நற்குலமும், சற்குணமும் கத்தோலிக்கபண்பும் கதித்திலங்கிய குடும்பத்திற் பிறந்த செசி இராசம்மா எனும் மங்கை நல்லாளை மணம் புரிந்தார். இவர்களின் தலைமகனுக 1913-ம் ஆண்டு ஆவணித்திங்கள் இரண்டாம்நாள் பிறந்தவரே எம் தனிநாயக அடிகளார் ஆவர். இவருக்கு சேவியர் என்ற திருமறைப் பெயரிடப்பட்டது. தந்தைவழிக் குலமுறையை நினைவூட்டும்வகையில் வீட்டுப் பெயராக தனிநாயகம் எனும் பெயருமிடப்பட்டது.

## கல்விப் படிப்பு :

இளவல் சேவியர் தனிநாயகம் யாழ் நகர் புனித பத்திரிசியார் கல்லூரியிலேயே தமது கல்வியைப் பயின்ருர். படிப்பிலும் பண்பிலும் முதன்மை பெற்று விளங்கினர். வகுப்புப் பாடப் பரிசில்களைப் பெற்ருர். உயர் வகுப்புப் பொதுத் திறமை நிலையைத் தொடர்ந்து நிலைநாட்டி வந்தார். கல்லூரி ஆங்கில சொல்வன்மைப் போட்டிப் பரிசில்களையும், பொதுத் தகுதிப் பொன் பதக்கப் பரிசையும் பெற்ருர். கல்லூரி மாணவ வெளியீட்டு இதழின் ஆசிரியராகவும் இருந்தார். பதினைருவது வயதில் உயர் வகுப்புப் பரீட்சையில் விசேட திறமைகளுடன் சித்தியெய்தினர்.

## துறவு நிலைபெறல் :

இளவல் தனிநாயகம் தொடர்ந்து உயர்பட்டப் படிப்புப் பெறவும், உத்தியோகம் பெறவும் வாய்ப்புகள் பல இருந்தும் கூட இவற்றை இவர் மதிக்காது எதுவிதமும் துறவுபூணத் திடமனங் கொண்டது இறைவனின் அருள் எனவே கூறல் வேண்டும். பெற்ருேரின் வளர்ப்பும், கல்லூரிக் குருக்களின் தூண்டுதல்களுமே இவரைத் துறவு நிலை பெறச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநாயகம் தனது பதினேழாம் வயதில் துறவு மாணவ பயிற்சி பெறத்தொடங்கினர். கொழும்பிலுள்ள புனிதர் பேர்ணுட் திருமறைக் குருகுலப் பயிற்சி நிலையத்தையடைந்து துறவுப் பயிற்சியை ஆரம்பித்தார். சமய இறையியல், தத்துவ இயல், மனித உரிமை இயல் ஆகிய பாடநெறிகளை ஆர்வத்துடன் பயின்றுவந்தார். தமிழ்-சிங்கள-லத்தீன்-ஆங்கில மொழிகளை ஆய்வுமுறையிற் கற்றறிந்தார். துடிப்புடனும், துணிவுடனும் துறவுப் பயிற்சி பெற்றுவந்த இவருக்கு இடையில் ஒருசில மேலிடத் தடைகளும் இன்னல்களும் ஏற்பட்டன. தெய்வச் செயலால் எதிர்பாராத விதத்தில் தென் இந்திய ஆயர் ஒருவரின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இதனுல் இவர் றேமாபுரி சென்று பயிலுவதற்குகு வாய்ப்புக் கிடைத்தது. இளந்துறவி தனிநாயகம் தமது இருபதாம் வயதில் றேமாபுரி சென்று 'ஊர்பான்' குருத்துவப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து ஆறு ஆண்டுகளாகப் பயின்று சமய உயர் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவ்வேளை இவருடன் பல தேசங்களிலுமுள்ள பலமொழி பேசும் குருமாணவர் பலரும் பயின்று வந்தனர். தனிநாயகம் இத்தனை மாணவருடன் நெருங்கிப் பழகி, உறவாடி அன்னுரின் மொழிகள், பண்பாடுகள், பழக்கவழக்க முறைகளை அறிந்து அனுபவித்து வந்தார். மற்றேர்க்குத் தமிழ் மொழியின் பெருமையையும், தூய்மையையும், தமிழர் பண்பாட்டையும் நேர்முறையில் அறிமுகப்படுத்தி வைத்தார். வத்திக்கான் வானெலி நிலையத்தில் முதலில் தமிழில் ஒலிபரப்புச் செய்த பேறு இவருக்குக் கிடைத்தது. றேமாபுரியிலேயே 1938-ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் பத்தொன்பதாம் நாள் குருத்துவம் என்னும் திருப்பட்டத்தைப் பெற்றுத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின் சுவாமி சேவியர் தனிநாயகமாக எங்கும் அறியப்பட்டார்.

## வெளிக்களப் பணி :

சுவாமி தனிநாயகத்துக்கு மறைப்பணிபுரியும் முதற்களமாக தென் இந்திய தூத்துக்குடி மேற்றிராசனமே கிடைத்தது. அங்கு அவர் வடக்கன் குளத்திலுள்ள புனித தெரேசா உயர்நிலைப் பள்ளியின் அதிபராகவும், பங்குத் தந்தையாகவும் பதவிபெற்றுப் பணிபுரிந்தார். சமயத் துறையில் சலாநிதிப் பட்டம் பெற்றிருந்த சுவாமிக்கு, தமிழ்த்துறையிலும் உயர்பட்டம் பெறவேண்டுமென்ற அவா ஏற்பட்டது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உயர்கலை பயின்று முதுமாணி (எம். ஏப்) பட்டத்தையும் இலக்கிய முதுமாணிப்பட்டத்தையும் (எம்லிற்) பெற்றுக் கொண்டார். தமிழிலும், கல்வி முறையிலும் ஆய்வு நடத்தி ஆற்றல் பெற்று விளங்கினர். வெளிநாடுகளில் தமிழின் தனிப் பெருமைபற்றி விளக்கவுரை வழங்கும் வாய்ப்பு சுவாமிகளுக்குக் கிடைத்தது.

உலகத் தமிழ்த் தூதுப்பணியின் முதற்கட்டமாக 1950-51-ம் ஆண்டுகளில் வடதென் அமெரிக்க, யப்பானிய பல்கலைக் கழகங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றினர்.

1951-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் இலக்கியச் சிறப்பியல்புபற்றிய பேரான ஆய்வுரையை நிகழ்த்தி, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற பேரறிஞராலும், பிறராலும் பெரிதும் பாராட்டப்பட்டார்.

1952-ல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில், தத்துவஇயல், கல்விஇயல் இவற்றிற்கு உதவி விரிவுரையாளராகப் பதவி ஏற்றுப் பாங்கான பணிபுரிந்தார். முதுமாணிப் பட்டதாரி வகுப்புப் பேராசிரியராகவும் கடமை செய்தார். 1954-ல் மலாயாவிற்கும், இங்கிலாந்து முதலிய ஐரோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிய நாடுகளுக்கும் சென்று, தமிழ்மொழி கலாச்சாரம் பற்றிய சொற்பொழிவுகள் நடத்தினர். 1955-ல் மலாயா, இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியற்னும் முதலிய ஆசிய தென்கிழ் நாடுகளுக்குச் சென்று தமிழ்தூது விரிவுரைகளாற்றினர்.

1957-ல் இங்கிலாந்து சென்று ஆய்வு நடத்தி கலாநிதி (பி.எச்.டீ) பட்டத்தைப் பெற்ருர். 1961-ல் மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய கலைப்பீட விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், கலைப்பீடாதிபதியாகவும் கடமை புரிந்தார். மலாயாவில் உயர்வகுப்புகளின் தமிழ்பாடப் பிரதம பரீட்சகராகவும், சர்வ கலாசாலை மாணவர் ஒன்றிய முக்கிய உறுப்பினராகவும், நூற்கூடக்குழு அங்கத்தவராகவும், மலாய கல்வித்துறை மதியுரைக் குழு ஆலோசகராகவுமிருந்து ஏற்றமிகு பணி புரிந்தார். 1964-ல் யேர்மனி தேச கல்விப் பரிமாற்ற நிறுவன ஆதரவில் மீண்டும் ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, றஷ்ய நாடுகளில் தரிசக விரிவுரைகள் நிகழ்த்தினர்.

## இயக்கப் பணிகள் :

தனிநாயக அடிகளார் ஆக்கரீதியாகத் தமிழ் வளர்ப்பு இயக்கங்களையும், நிறுவனங்களையும் ஆக்கி இயக்கிச் சாதனைப் படுத்தி வந்தார். இவ்வியக்க நிலையங்களே அடிகளார்க்கு அழியாப் புகழை ஈட்டிக் கொடுத்தன.

1941-ல் அடிகளார் அமைத்த தமிழ் இலக்கியக் கழகம் இன்றும் பேரான தமிழ்ப் பணி புரிந்து வருகிறது.

1964-ல் இந்திய டெல்லி மாநகரில் அகில உலகக் கலைஞர் மன்ற 24வது பொது மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டுக்குச் சென்றிருந்த தனிநாயக அடிகளார், அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி **அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை** உருவாக்கினர். 15 நாடுகளைச் சேர்ந்த அறுபதின்மர் இம்மன்றத்தின் முதல்உறுப்பினர் ஆயினர். இந்தியா, மலாயா, இலங்கை நாடுகளில் இம்மன்றக் கிளைகள் நிறுவப்பட்டன. இம்மன்றத்தின் முதலாவது மகாநாடு கோலாலம்பூரில் நடை பெற்றது (1966-ல்). தொடர்ந்து இம் மன்ற மகாநாடுகள் பரீஸ், சென்னை, யாழ்ப்பாணம், மதுரை நகர்களில் நடைபெற்றன. அடிகளார் வேறு பல இடங்களிலும் தமிழ் விருத்திச் சங்கங்களையும், பண்பாட்டுக் கழகங்களையும் ஆக்கியும், ஆக்குவித்தும், ஊக்குவித்தும் வந்தார்.

திருமறை சார்பாக 1952-ல் **கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தை** ஏற்படுத்தி அதன் இயக்குநராயிருந்து எழிலான சமயத் தொண்டு புரிந்தார்.

## வெளியீட்டுப் பணி :

தனிநாயக அடிகளார் பிரசுரப்பிரச்சாரமூலம் பெரும் சாதனை புரிந்துள்ளார். மொழி, சமயம், வரலாறு, பண்பாடு சார்பான நூற்றுக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றுட் பல நூல் வடிவில் வெளிவந்துள்ளன. பெரும்பாலும் ஆங்கிலக் கட்டுரைகளே வெளியீடுகளாக வெளிவந்தன.

1952-ல் அடிகளார் ''**தமிழ்ப் பண்பாடு** எனும் ஆங்கில முத்திங்கள் வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். இதில் உலகப் பேரறிஞர் பலர் எழுதி வந்தனர். பதினைந்து ஆண்டுகளாக அடிகளாரே இப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராயிருந்து பெருந்தொண்டு புரிந்து வந்தார். அடிகளார் '**தமிழ்த் தூது**' என்ற நூலைத் தமிழில் வெளியிட்டார். இது ஒரு மொழி ஒப்பியல் நூலாகக் கணிக்கப்படுகிறது. இந் நூல் சென்னைப் பல்கலைக்கழகப் பாட நூலாகவுமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966-ல் அடிகளாார் 'ஒன்றே உலகம்' எனும் பேரான நூலை வெளியிட்டார். இஃது அடிகளாரின் உலகச் சுற்றுலாச்செய் திகளைத் தெரிவிக்கும் திப்பிய நூல். இது மறுபதிப்பாகவும் வெளிவந்தது.

அடிகளாார் சிறிதும் பெரிதுமான பல ஆராய்ச்சி, நினைவு உரைக் கட்டுரைகளை நூல்வடிவில் பதிப்பித்து வெளியிட்டமை அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத் தது. அடிகளாரின் உரைகளினதும், நூல் களினதும் நடை அழகைக் கற்றோரெல்லா ரும் மெச்சுவர்.

தமிழுலகத் தனிநாயகமாக - மொழி யுலகத் தனிநாயகமாக - சொற்பொழிவின் தனிநாயகமாக - நூற்பதிப்பின் தனிநாயக மாக-பண்பாட்டின் தனிநாயகமாக - சிந்த னையாளரின் தனிநாயகமாக - திருமறையின் தவநாயகமாக - தமிழ் மக்களின் பொது நாயகமாக - தமிழன்னையின் கலைநாயகமாக -தமிழுரிமைக்குழைத்த நிதி (செல்வ) நாய கமாகத் திகழ்ந்த தவத்திரு தனிநாயக அடிகளாார் சென்ற 1980-ம் ஆண்டு புரட் டாதித் திங்கள் முதலாம் நாள் அமரராகி அமலன் பதமடைந்தார்.

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கத் தமக்குள் சிலவேளைகளில் போரில் ஈடுபட் டிருந்த போதிலும் தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவ ரென்றும் தமிழ் இனைப்பாகவும் கருதிவந்தனர். பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும், பொதுமை சுட்டிய மூவருகலகமென்றும் அழைத்தனர். தமிழ் மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ் நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை ''மொழிபெயர் தேயம்'' என்று அழைத்தனர். புறநானூறும் சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்தகாலை.

''தென்தமிழாற்றல் அறிந்திலகராங்கு'' கூறிச் சேரர் வட நாட்டின்மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்குத் தம் சொந்த அரசின் பற்றோடு, தமிழ்நாட்டுப் பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடக்கிய பற்று இயல்பாக அமைந்திருந்தது. தமிழ்ப் பாணரும் புலவரும் குறுநில மன்ன ரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில் பெற்றனர்.

— அருட்திரு. தனிநாயகம் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் அடிகளார் சிரிக்கிறார் !

— அமுது —

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ச் சங்க விழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அன்று அதன் மாலை நிகழ்ச்சிகளைத் திறந்தவெளி அரங்கிலே வைக்க வேண்டுமென்று சங்கம் தீர்மானித்தது.

இயற்கையை நயப்பதில் ஈடிணையற்ற பேராசிரியர் சரத் சந்திரா அவர்கள் பல்கலைக்கழகப் பூங்காவில் ஒரு திறந்தவெளி அரங்கை அமைத்திருந்தார்கள். அதுவட்ட வடிவமானது. மக்கள் ஆயிரக்கணக்கில் அமர்ந்து பார்க்கக் கூடியதாகப் புல்தரையில் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. சிங்கள புராதன நாடக பாணியில் 'மனமே' என்ற நாடகமொன்று முன்னர் அங்கு நடைபெற்றது. எனவே தமிழ்ச்சங்கத்தின் கன்னி முயற்சி சிறப்புற வேண்டுமென ஆசித்தோம்.

மாலை நிகழ்ச்சியில் பங்குபற்றத் தவில் மன்னன் தட்சணாமூர்த்தியும், நாதசுர மேதை பத்மநாதனும் அங்கு வந்திருந்தார்கள். மட்டக்களப்பிலிருந்து வடமோடி நாட்டுக்கூத்து-அர்ச்சுனன் தவநிலைச்சருக்கம்-நடாத்தும் குழுவினரும், வெள்ளவத்தை இசைக்கலை மன்றத்தாரின் நடனக் குழுவினரும் ஏலவே வந்துவிட்டார்கள்.

காலை நிகழ்ச்சியில் பங்குபற்ற இருந்த பேராசிரியர் தே. பொ. மீனாட்சி சுந்தரனார் வரமுடியாமற் போகவே தனிநாயகம் அடிகளார் காலையில் பங்குபற்றியிருந்தார்.

மாலை நிகழ்ச்சிகளைப் பற்றி இலங்கை தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் குரல் கொடுத்திருந்தன.

விழாவுக்கு ஆயிரம் பேராவது சமூகமளிப்பார்களா என்று நாம் கொண்டிருந்த சந்தேகமான கேள்விக்குறி, ஆச்சரியக்குறியாக அரைமணி நேரத்தில் மாறிற்று.

பிற்பகல் 5-45 மணிக்குத் திறந்த வெளியரங்கு சனவெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்-அவர்கள் குடும்பங்கள்-பட்டப்படிப்பு மாணவர்கள், கண்டிப்பகுதித் தமிழர்-அபிமானமுள்ள சிங்கள மக்கள் என்று அவர்களை அடையாளம் கண்டோம்.

எவ்வாறாயினும் மூன்றில் இரண்டு பங்கினர் சிங்கள நண்பர்கள் என்பது நிச்சயமாயிற்று.

விழாவைப் பிற்பகல் 6 மணிக்கு மங்கல விளக்கேற்றி ஆரம்பிக்கும் போது கற்றோர் திரண்டிருக்கும் இந்தச் சமுகத்தில் -ஆங்கிலத்தில்-ஒரு சிற்றுரை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது.

வேகமாகப் பறந்து சென்றோம் 'மகாகந்தை'க்கு. அங்கு தமிழ் விழாவுக்கு வருகை தருவதற்காகத் தனிநாயகம் அடிகளார் ஆயத்தமாகிக் கதவு பூட்டுகிறார். அவரிடம் எங்களுடைய கோரிக்கையைக் கூறினோம். ''எவ்வளவு நேரம் பேசவேண்டும்?'' என்றார் அடிகளார். ''10 நிமிட நேரம்'' என்று சங்கத்தலைவர் திரு. இரத்தினம் பதில் கூறினார். அடிகளார் விழாவை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தினார். சங்க காலத்தில் தொடங்கிய அவர்பேச்சு பேராதனைத் தமிழ்ச் சங்கம் வரையும் படர்ந்து சென்று முடிவு பெற்றது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற மணியான பேச்சு. மறுநாள் அவரைக் கண்டபோது நாங்கள் அவருடைய பேச்சைப் பாராட்டினோம். ''அறிஞர்'' என்று உங்களைப் பாராட்டியவர்கள் உண்மையில் போற்றப்பட வேண்டியவர்கள்' என்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் ஒரு புன்னகை பூத்தார். இது நடந்த காலம் 22-2-58 ஆகும்.

புத்தகக் கண்காட்சி இலங்கைக்கே ஒரு புதிய நிகழ்ச்சியாகும். பல்கலைக்கழக கல்விப்பகுதி (Dip. in. Ed.) ஆசிரியர்கள் துணையுடன் ஆங்கோர் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியை நடாத்தினர்கள் அடிகளார்.

பேரிலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைநூல்கள், புவியியல், வரலாறு, விஞ்ஞானம் என்றிவ்வாறு நூல்கள் பகுக்கப்பெற்றுக் காட்சிக்கு வைக்கப்பெற்றன. மானிப்பாய் டாக்டர் ஜேம்சன் M. D. எழுதிய அங்காதிபாதம் என்ற அரியநூல்கூட அங்கே இடம் பெறுவதாயிற்று. ஒவ்வொரு நூலைப்பற்றியும் ஒரு சிறுகுறிப்பும் எழுதப் பெற்றிருந்தது.

ஈழநாட்டில் வெளியான நூல்கள், சஞ்சிகைகள், தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் என்பனவும் அங்கு ஒய்யாரமாக வீற்றிருந்தன.

கண்காட்சியைத் தொடக்கிவைத்து உரையாற்றிய உபவேந்தர், சேர். நீக்கிலாஸ் அற்றிக்கலே அவர்கள் சுவாமிகளுடைய அயராத உழைப்பையும், அறிவு முதிர்ச்சியையும் பாராட்டி பல்கலைக்கழகம் செய்யும் பயனுள்ள ஒரு பணி இதுவெனவும் குறிப்பிட்டார்.

மத்திய மாகாணத்தில் இருந்து பல தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், கலைப்பிரியர்கள் பலநூற்றுக்கணக்கில் வந்து புத்தகக் கண்காட்சியைப் பார்த்து நயந்தனர். வெளி மாகாணங்களில் இருந்தும் பலர் சமுகமளித்தனர்.

மூச்சுவிட நேரமில்லாமல் பல அலுவல்களில் மூழ்கிக்கிடந்த அடிகளார் அம்பிற்றிய குருமட மாணவர்கள் 50 பேர் வரையில் வந்ததைக் கண்டதும் என்னை அழைத்து, 100 ரூபாய் தந்து, ''புத்தகக் கண்காட்சியை இவர்கள் பார்வையிட்டு முடிந்ததும் சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துச் சென்று நன்முக உபசரித்து அனுப்பிவையும்'' என்முர். புத்தகக் கண்காட்சிக்கு வந்த சனவெள்ளத்தைச் சிற்றுண்டிச்சாலையால் ஈடுகொடுக்க முடியுமா?

பல்கலைக் கழகச் சிற்றுண்டிச் சாலையில் அவ்வேளை வெறுந் தேநீரைத் தவிர வேறெதுவும் பெறக்கூடியதாய் இருக்கவில்லை. சிலுவையின் நிழலில் வாழவிரும்பிய குருமடமாணவர்கள் திருப்தியடைந்து சென்முர்கள். அவர் குருத்துவத்துக்குக் கொடுத்த ஒரு மகிமை இது என்று என் மனம் ஏதோ சொல்லிற்று.

யான் அந்நாட்களில் வீரகேசரி வார இதழில் ''பேராதனையில் புத்தகப் பூஞ்சோலை'' என்றெரு கட்டுரை எழுதியிருந்தேன்.

புத்தகக் கண்காட்சி முடிவுற்ற அன்று அதில் முக்கிய பங்கெடுத்த சிலருக்குச் சுவாமியார் ஒரு சிறந்த விருந்தை அளித்தார். அவ்வேளை, ''புத்தகக் கண்காட்சி ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைக்க வேண்டும் என்ற எண்ணம், எப்படி உங்களுக்குத் தோன்றியது?'' என்று கேட்டேன்.

''புத்தகங்களை நாங்கள் வாசிக்காவிட்டாலும், புத்தகங்களின் மட்டைகளையாவது பார்த்திருக்க வேண்டும்'' என்முர் அடிகளார். அரசியல் மேதை ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள், ஒரு அரசியல் மேடையில் கூறியதை விபரித்தேன் நான்.

''திருக்குறளில் அரசியல் என்றபகுதியை மாத்திரம் படித்த திரு.....அவர்கள் எனக்கு (ஜீ. ஜீக்கு) அரசியல் தெரியாதென்று தமிழ் அரசுக்கட்சி மேடைகளில் பேசிவருகிமுர். நான் அவரை ஒன்று கேட்க விரும்புகிறேன், நான் படித்த அரசியல் நூல்களின் மட்டைகளையாவது அவர் கண்டிருக்கிமுரா? என்று இன்று பகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கமாக அவரைக் கேட்க ஆசைப்படுகி றேன்'' இதை நான் கூறியதும் அடிகளார் ஹ..ஹ..ஹ..என்று சிரித்தார்.

பேராதனை, கத்தோலிக்க கோயிலைச் சார்ந்த அறை ஒன்றில் வசித்து வந்த அடி களார், 'மகா கந்த' என்னும் இடத்தில் அவருக்கு அளிக்கப்பெற்ற பேரில்லத்துக்கு இடம்மாற நேரிட்டபோது அவர் வைத் திருந்த நூல்களின் மட்டைகளையாவது பார்க்க எனக்கொரு சந்தர்ப்பம் வாய்த் தது.

அந்த நூல் குவியல்களை ஒருவர் தம் வாழ்நாளில் வாசித்து முடிக்கலாமா என் பது சந்தேகமே!

நூல்களை வாசிக்கும்போது அவற்றி லுள்ள சிறந்த பகுதிகளைக் குறித்து எடுத்து அக்குறிப்புகளை ஒரு பெட்டியில் இட்டு வசதி வாய்க்கும்போது மீளவும் அவற்றை எடுத்து வாசிப்பது அடிகளாரின் வழக்கம்.

மகா கந்தையில் அடிக்கடி நான் அவரைச் சந்திப்பதுண்டு. ஒருநாள் வேர் ஜில், தாந்தே முதலிய இத்தாலிய கவிஞர் கள் இயற்றிய பாடல்களை இத்தாலிய மொழியில் கூறி அவற்றைத் தமிழில் எனக்கு மொழி பெயர்த்தார். தாந்தே யுடைய கவியுள்ளத்தோடு அவருடைய ஆணவத்தையும் நான் அளந்து கொண்டி ருந்த வேளை இக்கால ஈழத்துப் பாடல்க ளைப்பற்றி எங்கள் உரையாடல் திசை திரும்பியது.

அடிகளார் தாம் வைத்திருந்த ஒரு ஒட்டுப்புத்தகத்தை எடுத்து வந்தார். அதில் ஈழத்துப் பத்திரிகைகளில் வெளி வந்த பாடல்கள் பல இடம் பெற்றிருந் தன. காவலனில் வெளிவந்த சிலகவிதை களும் அங்கு காணப்பெற்றன.

''இவற்றில் மிகச்சிலவற்றையே நான் வாசித்திருக்கிறேன். ஏனைய பெரும்பான் மையான பாடல்களை வாசிக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில் '' என்றார் அடி களார்.

அந்த ஒட்டுப்புத்தகத்தை நான் தட் டிப்பார்த்த வேளையில் சில சில்லறைப் புல வர்களின் பாடல்களும் இடம் பெற்றிருப் பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அவற் றில் சிலவற்றை நான் வாசித்துக் காட்டி னேன். வெறுஞ் சொற்கள், ஒருவகை யான சந்தத்துக்கு எழுதப்பட்டு சாரமற்ற காவோலைப் பாடல்களாக இருப்பதை நான் சுட்டிக் காட்டினேன்.

''இவற்றை வசனத்திலேயே எழுதியி ருக்கலாமே!'' என்றார் அறிஞர். ''இவர் களுடைய வசனத்துக்கு மதிப்புக் கிடை யாது; கவிதை என்ற போர்வையில் அச்சு மையையும் இடத்தையும் வீணாக்கும் சதி காரக் கும்பல்'' என்றேன் நான்.

சில செய்யுள்கள் பண்டிதர் பட்டம் பெற்ற சிலரால் இயற்றப் பெற்றவை என் பதையும் நான் புலப்படுத்தினேன்.

''பண்டிதர்களும் வித்துவான்களும் செய்யுள் இலக்கணத்தை ஓரளவு அறிந்தி ருக்கலாம். ஆனால் கவிஞனுக்குரிய நெஞ் சம் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் சித்திக் கும். சங்ககாலப் புலவர் சிலர், நாலே நாலுவரி மாத்திரம் பாடியிருக்கிறார்கள்; புகழையும் தேடிக் கொண்டார்கள். நீர் என்ன சொல்கிறீர்?' என்றார் புலமை யறிந்த அடிகளார்.

''சரியாய்ச் சொன்னீர்கள். இந்த ஒசட்டுப் பண்டிதர் சிலர், பரமாஸ்வேட்டி சால்வை வேண்டிக் கொடுத்து சாயமிழந்த பண்டித பட்டத்தைப் பிற்கதவால் தட் டிக் கொண்டவர்கள். கருத்தற்ற கவி களை எழுதித் தமிழ்த்தாயின் கழுத்திலே கைவைக்கிறார்கள். பாரதிக்குமண்டபம் கட்டியவர்கள், இவர்களுக்குக் கிடங்கா வது வெட்டிவிட வேண்டும்'' என்றேன் நான்.

சுவாமிகள் எழுந்து நின்று சிரித்தார். அவர் சிரிப்பு அடங்கச் சில நிமிடங்களா யின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடிகளார்க்கு

## கவிஞர்களின் கீதாஞ்சலி

1. பண்டிதர் க. த. ஞானப்பிரகாசம்
2. பண்டிதர் ஆசிநாதர்
3. அமுதகவிப்புலவர் 'யாழ். ஜெயம்'
4. புலவர் மொத்தம் போல்
5. செ. தம்பிராசா (குழந்தை)
6. ஏ. வி. பி, கோமஸ் (ஜெயம்)
7. நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நல்லுலக நாயகம்"

(பண்டிதஞானி — நெடுநகர்)

அன்புமலர் தூவிவிழா ஆனந்தமாய் எடுப்போம்!
அடிகள்தனி நாயகத்தின் ஆன்றபுகழ் படிப்போம்!
பொன்மடியில் வளர்த்தெடுத்தாள் புவிமாதுக் கணியாய்ப்
போற்றுநெடுந் திவகமாம் புனிதத்தாய் மணியாள்.

கனிமதுரத் 'தேம்பாவணி'க் காவியமோர் துறவி;
கற்றுவல்லார் போற்றும்'ஒப்பு — லக்கண'மோர் துறவி;
இனிய'' தமிழ் ஆதிமொழி '' என்றவனோர் துறவி;
'இறைவன் பக்தி மொழி'யென்றே ஏற்றினனுந் துறவி.

ஆக்கியக ராதிதர அரும்பாடு பட்டார்;
அரியவுரை ஆய்வுகட்கும் அன்னநடை யிட்டார்;
தேக்கிவரு பன்மொழியாந் திரைகடலைத் தேடித்
திரவியங்கள் சேர்த்தளித்த துறவிகளோ கோடி.

இம்மரபின் மாலையிலே இலங்குமொரு மணியே!
எங்கள்தனி நாயகமாந் தங்கக்குரு முனியே!
செம்மையறங் கிடந்தொளிருந் தெய்வீக நெஞ்சம்:
திருமகளுந் தேடிவந்து சேரும்முக கஞ்சம்.

மண்ணுடனே விண்ணையுமே வளைத்துழுது விட்டான்;
மதம்மொழியின் புதுவிதையாம் மணிகள்பல நட்டான்
எண்ணுடனே ஏட்டடங்கா இசைமழையைப் பெய்தான்;
ஈழமணித் தாயவளும் என்னதவஞ் செய்தாள்.

பொன்னும் மண்ணும் போகமெல்லாம் மிஞ்சிமிட்டாய்க் கண்டான்;
புனிதமனத் துறவதனைப் பூண்டுநிலை கொண்டான்;
முன்னும் பின்னும் உள்ளத்திலும் இறைவனையே பற்றி
முத்திநெறி காட்டுவதில் முனைந்து கண்டான் வெற்றி.

வத்திக்கான் திருச்சபைக்கோர் வயிரமணித் தூணே!
மறைவாக்கைத் திருவாக்கில் வடித்துரைக்குந் தேனே!
தித்திக்கும் எஞ்ஞான்றுந் திரித்துவத்தின் ஞானம்;
சிந்தனையை யருட்டிவிடுந் தெய்வீக கானம்.

சங்கந்தரு தீந்தமிழின் சாகரத்தில் தோய்ந்தான்;
தாவியெடு முத்துக்களைத் தனித்தனியே யாய்ந்தான்;
தங்கமணி மாலையெனச் சரஞ்சரமாய்க் கோத்தான்;
தமிழ்த்தாய்க்கு முடிசூடிட்டித் தனிமகிழ்வு பூத்தான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இருந்தேனே யிவ்வுலகிற் தமிழினுக்காய்' என்ருன் ;
எண்ணியெண்ணிக் கொட்டிவிட்டான் ஏதேதோ வெல்லாம் ;
அருந்தினவர் விண்ணவர்தம் விருந்தமிழ்தம் என்ருர் ;
அனைத்துலகும் வரவேற்கும் அறிஞனென நின்ருர்.

உலகதமிழ் ஆராய்ச்சிக் கழகமென ஓங்கும்
ஒப்பில்லா மகவினுக்கோர் உயர்தந்தை யாருன் ;
இலகுதமிழ்த் தூதுவனுய் ஏழுலகுங் கண்டான் ;
இவனெட்டாங் கடலென்ருல் எவர்மறுப்பா ரீங்கே,

தங்கமணித் தூவியெங்கே ! தசவிரலுஞ் சேர்ந்து
தமிழுழுத பூங்கரங்கள் தாள்களுந்தான் எங்கே !
சங்கத்தமிழ்த் தேன்வடிந்து தவழுமிதழ் எங்கே !
தலையசைக்கும் பண்மெங்கே ! தவவடிவு மெங்கே !

தவத்துக்கு நாயகம்நீ ! சான்றவர்கள் கூடுஞ்
சற்சபைக்கு தாயகம்நீ ! தமிழுக்கும் நீயே !
எவற்றுக்கும் நிகர்நீயே என்றுமனம் ஆற
இன்றும்பர் நாயகமாம் இடத்தினுக்கோ அழைத்தார்.

கஞ்சாவின் உறக்கத்திலே கிடப்பவரைக் கண்டாற்
கண்ணயரா தெழுப்பிடுவான் ; கவரிமான் என்ன
அஞ்சாமற் கொழும்புநகர்க் காலிமுகத் திடலில்
ஆவியிலும் மேலான தமிழ்மானங் காத்தான்.

'' நன்றின்பா லுய்ப்பதுதான் அறி ''வென்னும் நல்ல
ஞானத்தைத் தந்துபர மானந்தத் தேனை
என்றும்நீ துய்ப்பதற்காய்ச் சென்றிட்ட போதும்
எழின்மதுரைச் சிலையோதும் இனியவர லாறே.

'' எடுத்தாள நாடிலையே என்ருலுந் தமிழர்
எழுத்தாலே யுலகாள்வர் '' என்றகுறிக் கோளைத்
தடுத்தாள ஒருவரின்றிச் சாதனைகள் தந்த
தமிழ்கூறும் நல்லுகல நாயகமே ! வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி வளர்த்தார்-மறை வளர்த்தார்

— ஆசி —

மொழிக்கும் மறைக்கும் முழுமையுற
முற்றிய பணிகள் செய்திட்ட
முழுமைத் தமிழ்நா யகமான
மெய்த்தனி நாயக சுவாமிகளின்
விழுமிய பணிகளின் பான்மையினை
விருப்புடன் அறிந்து ஆராய்ந்து
பொழுதும் மகிழ்ந்து பாராட்டல்
பொற்புத் தமிழர் கடனாகும்.

இறைவன் இவர்க்கு ஈந்திட்ட
ஈகைகள் ஆற்றல்கள் இவைமூலம்
துறைபல தேர்ந்து துல்லியமாய்த்
தொடர்பணி செய்யக் குருவானார்
மறையொடு மொழியும் வளமைபெற
மாண்புச் சேவை செய்திட்டார்
நிறைவாய் முறையாய் நிர்ப்பயமாய்
நிலையுள சாதனை செய்திட்டார்.

பன்னிரு மொழிகளிற் புலமைபெற்றார்
பாருள மொழிகளைப் புரிந்துகொண்டார்
ஒன்றிய இணைப்பினை ஓர்ந்தறிந்தார்
ஒப்புமை நியதியை உற்றறிந்தார்
எண்ணரும் ஒலிமுறைத் தொடர்புகளை
இசைவை உறவை உய்த்தறிந்தார்
நுண்ணிய தமிழின் பெருமிதத்தை
மறுமொழி அமைப்பில் கண்டறிந்தார்.

உரையால் எழுத்தால் நூல்களினால்
உரித்துள தொடர்புச் சாதனத்தால்
தரைகடல் வானப் பயணத்தால்
தனித்துவ ஆளுமைப் பண்பதனால்
குறையே யில்லாக் குணத்திறத்தால்
குருவுக் குரிய ஒழுக்கமதால்
மறைமொழி வளர்ப்புச் சாதனையை
மாநில மெங்கும் நாட்டினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை தொகை யான கட்டுரைகள்
    தோலாப் புகழுறு கைந்நூல்கள்
வகைவகை யான வழிநூல்கள்
    வகுத்துத் தொகுத்த பிரசுரங்கள்
சுவை சுவை யான நினைவுரைகள்
    சூசனமாக வெளியிட்டார்
மிகைபுகழ் என்றே கொளல்வேண்டா
    மேன்மைத் தமிழ்ப்பணி இதுவன்றோ !

'ஒன்றே உலகம்' எனும் அரிய
    உயர்தமிழ் நூலின் தனித்திறனும்
நன்றாம் 'தமிழ்த்தூ தெ'னுமினிய
    நல்லா ராய்ச்சி நன்நூலும்
நின்றே நிலைக்கும் சஞ்சிகையும்
    நேர்ந்தே நிறுவிய நிறுவனமும்
பொன்றுப் புகழைத் தமிழுக்கு
    பூரணமாகக் கொடுப்பனவே.

பேச்சில் எழுத்தில் சேவையினில்
    படிப்பில் உழைப்பில் சுவாமியைப்போல்
மூச்சுக் கொண்டே முயன்றிடுவோம்
    முனைப்பாய்த் தமிழை வளர்த்திடுவோம்
பேச்சை விடுத்துச் செயல் புரிவோம்
    பேறுகள் பெறவே பயின்றிடுவோம்
காய்ச்சிய பாலெனச் சுவைகொடுப்போம்
    நாயக அடிகளை நாம்நினைப்போம்.

மொழியால் மதத்தை வளர்த்திடுவோம்
    மதத்தால் மொழியை வளர்த்திடுவோம்
விழியாய் இவற்றைப் பேணிடுவோம்
    வேண்டிய இன்பந் துய்த்திடுவோம்
வழிவழி வருவோர் பின்னோர்க்கும்
    வாய்ப்புத் துறைகள் வகுத்திடுவோம்
அழியாப் புகழும் வந்தெய்தும்
    ஆண்டவன் அருளும் கைகூடும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை நன்றாய் தமிழ் செய்த தனிநாயகம்

தாராடப் போராடிப் பரணி பாடத்
தரணியிலே புகழ்பொறித்தார் தரளந் தொங்கும்
தேரோடு கரிதுரகம் திரவி யங்கள்
திஞ்சுனைசேர் வளநாடும் பரிச ளித்தார்
சீரோடு நிறுத்துரைத்தால் மலையைத் தாவும்
சீர்த்தியொடு செந்தமிழன் மாட்சி வாழ்வைப்
பாரூடு விதைத்ததனி நாய கத்தைப்
பறிகொடுத்த பேரிழப்புக் கீடு முண்டோ ?

தேமதுரத் தமிழ்ச்சோலை வனப்பே தேங்கத்
திசையனைத்தும் அமுதத்தேன் பொழிந்த மேகம்
பூமுகத்தை அரவணைத்தே உறவு பூண்டு
புதுவாழ்வை இணைத்துய ந்த அன்புப் பாலம்
நாவலத்தால் தமிழ்த்தூதை ஞாலம் போற்ற
நயந்துலங்க முழங்கிநின்ற வெண்பொற் சங்கம்
மாதவத்தின் மகிமையொடு குளிர்ந்த திங்கள்
மறைந்ததுயர் நெஞ்சகத்தில் மறக்க லாமோ ?

பிறந்ததினம் அறிந்திடற்கே அரிதா மென்னும்
பெற்றியுறும் தமிழினிமை இளமை ஆழம்
திறம்பலவும் உலகறியத் தமிழ்மா நாட்டைத்
திரமுடன் செப்பனிட்ட தியாகச் சிற்பி
அறங்கடவா நெறியினில்மு வாசை தம்மை
அர்ப்பணித்தும் பைந்தமித்தாய் உதிரப் பாசம்
துறந்தறியாப் பேராசான் தூய ஞானி
துணையிழந்தே நாம்துடித்த துயரம் போமோ ?

என்னைநன்றாய் இறையவனார் கருணைகூர்ந்து
இருநிலத்துப் படைத்தளித்துப் புரந்தா ரீண்டு
தன்னைநன்றாய்த் தமிழ்செய்யு மாறும் என்றே
தமிழுளங்கொண் டமலனிணைத் தமிழ்த்தாள் போற்றி
பொன்னனைய தமிழ் தமிழர் பண்பா டோதும்
புகழ்க்கலைகள் அகம்புறத்துட் பொதிந்த காட்சி
மன்னுலகில் நிலைநிறுத்தி மணங் கமழ்ந்த
மலருதிர்ந்த நினைவுதனை மறப்பார் யாரோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகலையின் துறைபுகுந்து படிந்த போதும்
பண்புடையார் பாராட்டில் நனைந்த போதும்
தலைநிமிராப் பழமரம்போல் தாழ்ந்து வாழ்ந்த
தனியுருவைத் தன்னடக்கப் பெட்ட கத்தை
இலைமறைகாய் என்பதற்கோர் எடுத்துக் காட்டாய்
எம்மகத்தே மிளிர்ந்தகலை இரத்தி னத்தை
உலகனைத்தும் கண்ணீராற் கழுவி யேங்க
ஓராண்டு கணப்பொழுதிற் பறந்த தம்மா.

யாழ் — 'ஜெயம்'

---

# "சிந்தனையோன் தனிநாயகம்"

1. வித்தகனாய் உலகறியத் தமிழின் தூதாய்
விளங்குமலைத் திடமெனு விதந்து கூறச்
சித்தமுந்தன் திடமதனால் உலகா ராய்ச்சிச்
சிறப்புதமிழ் மாநாடு நடத்திக் கண்டாய்
"முத்திநெறி பெற்றதனி நாயகத்தார்
முன்னவைக்கு நாயகமும் வேண்டு மாமோ?"
இத்தனையும் சொல்லறிஞன் சொன்னு னென்றால்
"இனியதமிழ் ஈழமகன் பெருமை யன்றோ"

2. செந்தமிழின் சிந்தனையே சிறப்புற் றோங்கத்
தேசமெங்கும் சங்கமொழி ஒலிக்க வைக்கச்
சிந்தனையோன் தனிநாயகத்தின் கீர்த்தி
சென்றஇட மெங்கணுமே கமழ்ந்து நிற்கச்
சொந்தவுந்தன் முயற்சியினால் கலைக்கியானச்
சுதந்தரமே பெற்றதவப் பேறால் நற்றாய்
தந்ததமிழ்ச் சான்றோனாய் அழைப்பை யேற்றே
சர்வபரன் யேசுபணி தலைக்கொண்டாயே.

3. "உலகரங்கில் உன்னறிவைப் போற்று ருண்டோ
உத்தமர்கள் பட்டியலில் உகப்புற் றோங்கப்
பலகலையும் கற்றறிந்த தமிழர் பண்பாய்ப்
பண்பாடு மிக்கதிருக் குருவா யேற்றே
உலகெங்கும் நற்செய்தி உரைத்து நின்றே
உன்னருந்தாய் மொழியினுக்காய் உடலையீந்தே
கலங்காத துணிவுற்ற கலைஞரேறே!
காணுகின்ற காலமினி எமக்குண்டாமோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. "ஈன்றுபுறந் தந்தாளின் பெருமையன்றோ !
இதயங்கள் பேசவைத்தார் தந்தையன்றோ !
சான்றுபுகழ் பெருகதிருச் சபையுமன்றோ !
சான்றோனாய் ஆக்கியவர் ஆயரன்றோ !
மூன்றாசை துறந்தநெஞ்ச அடிகளன்றோ !
முத்தமிழின் முதுகலைஞர் அறிஞ ரன்றோ !
ஊன்றுதற்குன் காரணமே இறைவனன்றோ !
உணர்ந்தாலே தமிழ்த்தாயின் பேருமன்றோ !"

5. "ஊர்காவற் துறைநகரில் தோன்றிறோமை
உயர்கல்வி கற்றதிபர் பதவியேற்றே
பேர்புகழுஞ் சர்வகலா சாலை யோர்க்கே
பெருமையுறும் விரிவுரைகள் நிகழ்த்தல் கேட்டே
நேர்மையுடன் பிறநாட்டார் அழைப்பை யேற்றே
நேசதமிழ்த் தொன்மைதனை விளக்கிக் கூறி
பேர்கொண்ட பெரியோனாய்ச் சேவையாற்றிப்
பேரின்ப விருந்துற்றாய் அழைப்பை யேற்றே.

**புலவர் செ. மொத்தம்போல்.**

---

# இன்முகத் தனிநாயகமே

1. அன்பொளிவீசி மண்ணில் அருள்நிறை ஞானியானீர்
இன்பமாய் விளங்கிப்பூவில் இனிதுறத் தொண்டு செய்தீர்
கன்னலாம் தமிழ்மொழிக்குக் களிப்புறப்பணிகள் ஆற்றி
துன்பமே எமைச்சூழத் தூயனாய் மறைந்தாய் நீயே.

2. உலகெலாம் சென்று மொழியின் உயர்வினை எடுத்துக்கூறி
தலைவனாய்நின்று தமிழின் ஆராய்ச்சி மகாநாடு
திலகம் போல் விளக்கிநின்று திவிரதிட்டம் தீட்டி
மலையெனப் புகழ்குவித்து மறைந்தாயே மனம்கலங்க.

3. இறையவன் சேவைமட்டும் இனிதுறப் புரிந்தால் போதா
குறையிலாப் பணிகள் செய்து கொஞ்சிடும் தமிழைக்காத்து
மறையொடு கல்விஞானம் மலர்ந்திட்ட தனிநாயகமே
இறையவன் அழைக்க நீயும் இன்புடன் சென்றிட்டாயோ

உன்பணி தொடரவேண்டும் உலகினில் அதுதான் உந்தன்
நன்மைகள் மலரவேண்டும் நாடெங்கும் பரவவேண்டும்
தின்மைகள் மறையஇங்கு தீந்தமிழ் வளரவேண்டும்
இன்பமே எழிலேஞான இன்முகத் தனிநாயகமே.

**செ. தம்பிராசா** (குழந்தை)
**முருங்கன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியிலே தமிழ் பொறித்தோன்

— ( ஏ. பி. வி. கோமஸ் — " ஜெயம் ") —

இமயத்தின் உச்சியன்றி
இவ்வுலகின் தலையினிலே
தமிழினத்தின் பெருமைதனை
தரணிகாண கொடிபொறிதோன்
சமயத்தின் துறவியாகி
சால்புடனே வாழ்ந்திருந்து
தமிழினத்தின் பண்பாட்டை
தரணியெங்கும் விதைத்திருந்தோன்

கண்போலக் காத்து, காண்போர்
கருத்தோடு ஏற்க, தமிழ்ப்
பண்பாட்டின் தொன்மையையும்
பன்முகநற் சிறப்பினையும்
மண்மீது மலர்ந்திடவே
மகத்தான ஏடுகண்டு
மன்னுபுகழ் ஆராய்ச்சி
மாநாடு தானும்தந்தோன்

பாரதியின் வாக்கை-ஏற்று
பாரெங்கும் தமிழ்மணக்க
சாரதியாய்ப் பவனிவந்தோன்,
சார்ந்தபல நாடுகளும்
ஆராய்ச்சி செய்யதமிழ்
அன்னையினை அரியணையில்
பேராக்கிய நற்பெரியோன்
பண்பாட்டின் தனித்தலைவன்

'தமிழியல்' நற்றுறைகண்டு,
தரணியெங்கும் ஆங்கிலத்தின்
வழியாக வழிந்தோட
வழிவகுத்த வியன்சிற்பி
தமிழினத்தின் மத்தியிலே
தகைசான்ற ஒற்றுமையின்
தனியுணர்வை மூட்டிவிட்ட
தனி-நாயக (யாத) பெருநெருப்பு

நிலையாக அவர்புகழே
நிலைத்திடவே வேண்டுமெனில்
உலகத்தமிழியல் ஆய்வுக்(கு)
உற்றதொரு நிலையம்கண்டும்
புகழ்சேர் தமிழ்ப்பண்பாட்டின்
பழ(மை)பெருமை தமைவிண்டும்
செகம்புகழத் தமிழ்ப்பெரியோர்
செயற்பட்டிட வேண்டுமம்மா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தரின் சாட்சியாய் வீற்றிருந்தார்

ஐம்பத்து ஆறு ஜூன் ஐந்தினிலே — தமிழர்
அணி ஒன்று நின்றது கொழும்பிலே
நம்பிக்கை ஒன்றையே ஆயுதமாய் — கொண்டு
நடாத்தின அறப்போர் ஒன்றதனை.

காலிமுகத்திடல் புற்றரையில் — இவர்
கத்தியில்லா யுத்தம் செய்து நிற்க
காலிப்படை யொன்று சூழ்ந்துவந்து — கொடும்
கல்லடி, பொல்லடித் தாக்கம் செய்தார்.

கேலிக்குரியவர் ஆக்கிக்கொண்டு — தீய
கெட்ட வார்த்தை சொல்லித் திட்டிக்கொண்டும்
கோலிக்குண்டு விளையாடுதல்போல் — அந்த
குண்டர் உருட்டியே நிந்தை செய்தார்.

வேலிக்கு ஓணான் தான் சாட்சிபோல — காவல்
வீரப்படைகளும் வீற்றிருந்தார்
சோலி நமக்கெதற் கென்றுசொல்லி — வெறும்
சோற்றுப் பிண்டமெனப் பார்த்துநின்றார்.

மேலிருக்க வேதம் சொல்லுகின்ற — பக்தி
மேன்மைமிக்க மறைப் போதகரும்
போலிக் கவுரவம் பார்ப்பவராய் — குளம்
பொந்துள் வாழ் நண்டெனப் பதுங்கிவிட்டார்.

— ஆனால்

நாளிதில் நாம் விழாக் கொள்ளுகின்ற — தனி
நாயகன் மட்டுமே ஒரு துறவி
தோளில் சிலுவையை தாங்கிநின்று — பிறர்
துன்பம் துடைக்கின்ற யேசுபோல.

காலிமுகத்திடல் போர்க்களத்தில் — வந்து
கர்த்தரின் சாட்சியாய் வீற்றிருந்தார்
கூலிப்படை போட்ட கும்பலுள்ளும் — தன்
கும்பிட்டகைகளால் ஆசிதந்தார்.

இத்தனைக்கும் என்ன காரணமாம் — அவர்
இன்பத்தமிழ்ப் பற்று ஒன்று அன்றோ
வந்தனைக்குரிய எம்மொழியை — வாழ
வைப்பதில் இருந்த தாகமன்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை செய்திட வேண்டுகிறேன் — இந்
செய்யுளைப் படிக்கும் அன்பர்களை
எந்தனைப் பிள்ளையாய் பெற்றதமிழ் — புவி
ஏற்றமடைய நான் என்ன செய்தேன்.

இந்தவினவுக்கு என்னபதில் — என்னால்
இங்கு கொடுத்திடக் கூடுமப்பா ?

— ஆனால் இவர்

பன்மொழி வித்தகர் ஆனபின்னும் — தமிழ்
பற்றினை விற்றிட வில்லையப்பா
தன்மொழி மறந்து இன்னுமொரு — மொழித்
தாயின் புகழினைப் பாடவில்லை,

இன்மொழி தன்னைப் இப்பூமியிலே — திக்கு
எட்டு மொலித்திடச் சேவை செய்தான்
கண்விழி இரண்டில் ஒன்றுஎன — எம்
கன்னித்தமிழ் தன்னைப் போற்றி நின்றான்.

ஆராய்ச்சி மாநாடு கூட்டுதற்கு — முதல்
அத்திபாரக் கல்லாய் ஆனவன்யார்
பேராய் நடந்தது ஐந்தாவது — தமிழ்
ஆராய்ச்சி மாநாடு மதுரையிலே

வேராய் திகழ்ந்த இவரை அவர் — அங்கு
வேறாய் கருதியே புறக்கணித்தார்
ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்பத்தில் — ஒரு
அஞ்சலி செய்திட எண்ணினரா ?

இத்தனைக்கும் அங்கே போகவேண்டாம் — ஏன்
இங்கு நடந்ததே இவ்வறிஞன்
செத்து அடங்கிய துர்ச்சடங்கு — அங்கு
சென்று குவிந்தவர் எத்தனைபேர் ?

பள்ளிக்கூடச்சிறார் இல்லையென்றால் — அந்த
பரிசுகேட்டைச் சொல்லத் தேவையில்லை
எள்ளி நகைசெய்வோர் எம்மையே நாம் — அட
எச்சிலைத் துப்பிடு கண்ணாடியில்

மேதையை ஈன்ற இவ்வீழநாடு — தீரா
மெத்தப்பிழை செய்து விட்டது காண்
பேதமைப் போட்டிகள் காரணத்தால் — அன்றுஇப்
பேரறிஞனையே துரத்திவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாவென்றழைத்தது மற்றை நாடு — அவை
வாங்கி உயர்ந்தது இவனறிவால்
போவென்று போக்கிய எங்கள்நாடு — அரும்
புதையலை ஈந்தது அந்நியர்க்கு

அட்சய பாத்திரம் தன்னையல்லோ — நாம்
அந்நிய நாட்டிலே வீசிவிட்டோம்
நிச்சயம் எங்களுக்கோர் இழப்பாம் — இன்று
நினைந்து அழுகின்றோம் என்னபயன் ?

சத்தைப் பிழிந்து விற்றுவிட்டு — வெறும்
சக்கையை எம்மண்ணில் புதைத்து உள்ளோம்
சத்தமாய் புகழ் இன்று பாடுகின்றோம் — இது
சர்வசாதாரணம் எங்களுக்கு.

எட்டி உதைத்தது இந்தநாடு — இதனால்
எந்த இழப்பும் அவர்க்கு இல்லை
எட்டுத்திக்கு இவர் சென்றதனால் — தன்னை
ஈன்ற இந்நாட்டுக்குப் புகழ்குவித்தார்.

அகிலமெல்லாம் ஒளிபரப்பிவிட்டு — தான்
அணைந்திடும் வேளையில் இந்தத்தீபம்
அன்னை மண்மடிக்கு வந்ததனால் — இங்கு
அனுபவித்த துயர் யார் அறிவார் ?

தமிழுக்குத் தூதாக விளங்கினவர் — இங்கு
தனிமைத் துயரிலே தான் தவித்தார்
அருமை தெரியாதநாம் அருகிருந்தும் — அந்த
அறிவுச் சுடரினைப் புறக்கணித்தோம்.

மாண்டபின்னர் ஓங்கி மாரடித்து — இந்த
மானிலம் கண்டிட ஒப்புவைக்கும்
பூண்டகுணமதை எங்கள்சாதி — இதை
பூண்டோடழித்திடும் நாளெதுவோ ?

— நாவண்ணன்

# யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## 30-05-81 இல் நடைபெற்ற

# தவத்திரு தனிநாயக அடிகளார்

## நினைவு விழாக்

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

## மாவட்டத் தெரிவு

### 1ஆம் பிரிவு : 4ஆம் 5ஆம் வகுப்புகள்

1ஆம் இடம் : 717 செல்வி ம. கி. வனிதா ஞானப்பிரகாசம்
ஏழாலை புனித இசிதோர் றோ. க. வித்தியாலயம், சுன்னாகம் கிளை இல. 14

2ஆம் இடம் : 562 செல்வி பி. மரியமெலானி பார்பரா
ஊர்காவற்றுறை சென்மேரிஸ் மகளிர் வித்தியாலயம்
ஊர்காவற்றுறை கிளை இல. 5

3ஆம் இடம் : 5 செல்வி காமலிற்று ஜெயந்தி
மன்னார் புனித சவேரியார் கல்லூரி, மன்னார் கிளை இல. 11

### 2ஆம் பிரிவு : 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகள்

1ஆம் இடம் : 707 செல்வி றெசற்று மெலானு இராசேந்திரம்
அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயம்,
அச்சுவேலி, வசாவிளான், ஒட்டகப்புலம் கிளை இல. 12

2ஆம் இடம் : 510 செல்வி நன்சி ரூபானந்தி
யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணக் கிளை இல. 1

3ஆம் இடம் : 105 செல்வி சுசித்திரா ஜீவரட்ணம்
மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி, மன்னார்க் கிளை இல. 11

### 3ஆம் பிரிவு : 9ஆம், 10ஆம் வகுப்புகள்

1ஆம் இடம் : 638 செல்வி மேளின் வேர்ஜினி சவிரிப்பிள்ளை
இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம், இளவாலைக் கிளை இல. 8

2ஆம் இடம் : 595 செல்வன் ம. அல்போன்ஸ் ஜெறுட்
கலட்டி றோமன் கத்தோலிக்க கனிட்ட உயர் வித்தியாலயம்
வடமராட்சிக் கிளை இல. 6

3ஆம் இடம் ; 533 செல்வி பி. பிலிப் சேலின் சுபத்திரா
பாஷையூர் புனித அந்தோனியார் றோ. க. வித்தியாலயம்,பாஷையூர்க்கிளை இல.2

### 4ஆம் பிரிவு : 11ஆம், 12ஆம் வகுப்புகள்

1ஆம் இடம் : 576 செல்வி அற்லின் ஜசிந்தா பெனடிக்ற்
கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம்
ஊர்காவற்றுறைக் கிளை இல. 5

2ஆம் இடம் : 525 செல்வி றீற்று சிறில்
யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணக் கிளை இல. 1

3ஆம் இடம் ; 627 செல்வி சி. க. ஜீவராணி புனிதா
புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு
புதுக்குடியிருப்புக் கிளை இல. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடிகளார்க்கு

பிரமுகர்கள் அறிஞர்களின்

# புகழாரம்

இத்தொகுப்புக்குக் கைகொடுத்த கீழ்க்காணும் ஏடுகள், இதழ்கள், நூல்கட்கு எமது மனமார்ந்த நன்றி.

—ஆசிரியர்

1. *ஆயர் இல்ல அனுதாப ஏடு*
2. *தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார்*
3. *சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் மலர்*
4. *'தொண்டன்' சிறப்பிதழ்*
5. *'மக்கள் குரல்'*
6. *'அணையா விளக்கு'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி முதல்வர்
# மாண்புமிகு அ. அமிர்தலிங்கம், பா. உ. அவர்கள்

தனிநாயகம் அடிகள் எட்டுத்திக்கும் சென்றார். அங்குள்ள செல்வங்களை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்குத்தான். ஆனால் இன்று நடப்பதென்ன? அடிகளாரின் திக்விஜயத்தின் பயனாக எட்டுத் திக்குகளிலுமிருந்து வந்த அறிஞர்கள் நமது தமிழிலுள்ள, தமிழனிடமுள்ள செல்வங்களையன்றோ அள்ளிச் செல்கின்றனர். ஆமாம் இப்போதுதான் தமிழுக்குப் புதிய வீச்சையும், வீறையும் ஊட்டிய சுப்பிரமணிய பாரதியின் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்ற அடிகளின் தெய்வீகத் தன்மையை உணரக் கூடியதாயிருக்கிறது.

ஆமாம் உண்மையான கவிஞனின் விரல்களில் சரஸ்வதிதேவியே நடம்புரிகிறாள் என்பது உண்மைதான்.

தனிநாயகம் அடிகள் மாபெரும்அறிஞர். அவருக்காக உலகின் எத்தனையோ பல்கலைக் கழகங்கள் கதவுதிறந்து காத்திருந்தன. ஆனால் அவர் வெறும் அறிவு ஜீயாக மட்டும் வாழ விரும்பவில்லை. தமது பட்டம் பதவிகளைக்காட்டி வானத்தில் மிதக்கவும் விழையவில்லை. புகழைத் தேடிக்கொள்வதற்காகவும் எக்கருமத்தையும் புரிந்ததில்லை.

எத்தனை அந்தஸ்துகள் வந்தபோதும் அவர் இந்தமண்ணில் கால்பதித்து வாழ்ந்தார். மண்ணின் மக்களை நேசித்தார். அந்த மக்களும், அவர்தம் நாடும், அவர்களின்கலை கலாச்சாரம், பண்பாடுகளும்வாழ மொழி காக்கப்படவேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். அதனால்த்தான் சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து ஈழத்தில் தமிழ் மக்களின் தலைவர்கள் 1956-ல் காலிமுகக் கடற்கரைத்திடலில் அறப்போராட்டத்தை நடத்திய வேளையில் அருட்திரு தனிநாயக அடிகளாரும் அப்போராட்டத்தில் மக்களோடு கலந்து தமது எதிர்ப்பையும் பகிரங்கமாகக் காட்டினார்.

பன்மொழிப் புலமை பெற்றிருந்த அவர் உலக அறிஞர்கள் போற்றும் ஒருவர். எங்கெங்கும் சமாதானம் நிலவிவதாக என உச்சரிக்கும் பிதா, புருவின் வண்ணத்தில் துறவு அங்கி தரித்த அடிகள் அன்று அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டாரென்றால் மொழிப் போராட்டம் என்பதும் அர்த்தம் செறிந்ததுதான்.

# உயர்திரு கா. பொ. இரத்தினம், பா. உ. அவர்கள்
## B. A. Hons (Lond) M. A., ப. O. L. (Madras)

**த**மிழ் மக்களின் தனி நாகரிகத்தையும், நல்வாழ்வு நெறியையும், பழம் பெருமையையும், தமிழ்மொழியின் தனிச் சிறப்பையும், ஆற்றலையும், ஏற்றத்தையும் உலகமெங்கும் பரப்பிய ஒப்புயர்வற்ற பெருமை தமிழ் நூல்களிலே திருக்குறளுக்கே உரியது. இதனைப்போலத் தமிழ் மக்களின் பெரும் வரலாற்றையும், தமிழின் தனிச் சிறப்புக்களையும் அனைத்துலகும் நன்கு அறியச் செய்த அளப்பரிய பெருமை தமிழ் மக்களிலே தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளாருக்கே உரியது.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தமிழை நன்றாகத்தரணியில் பரப்புதற்கே''

என்ற குறிக்கோளுடன் அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றி கண்டவர் அவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் காலந் தொடக்கம் அடிக ளார் காலம்வரையும் தமிழ்த் தாய்க்கு நிலைத்த தொண்டுசெய்த பெரும் புலவர் களும் ஆராய்ச்சிப் பேரறிஞர்களும் பலரா வர். இவர்களுடைய தொண்டுகள் அடி களாரின் தொண்டுகளைப்போல உலகளா வியனவாக அமையவில்லை.

மொழி ஆராய்ச்சித்துறை அண்மைக் காலத்திலே வளர்ச்சி அடைந்துள்ளதொரு துறையாகும். அனைத்திந்திய கீழைத்தேய மொழி மாநாடுகள், கீழை நாட்டியப் புல வர்களின் உலக மா நா டு க ள் முதலிய ஆராய்ச்சி மாநாடுகளிலே வடமொழி முதன்மை பெறத் தமிழ்மொழி தலைகுனிந்து மூலையிலே கிடந்தது. இந்த நிலைமையை மாற்றித் தமிழ்த்தாய் தனி இடத்தைப் பெறச்செய்த பெருமை தனிநாயக அடிகளா ருக்குரியது. ' தமிழியல் ' எனும் ஆராய்ச் சித் துறையையுருவாக்கி வளர்த்து, அனைத் துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத் தித் தமிழாராய்ச்சியினை உலகளாவியதாக் கியவர் அவர், தமிழ் நாட்டரசோ, தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களோ, முன்னர் செய்ய எண்ணாத, செய்ய முயலாத பெருந் தொண்டு இதுவாகும்.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன் றத்தின் தந்தையும் தாயும் அவரேயாவர். இந்த ஆராய்ச்சி மன்றம் 1964இல் தெல்லி மாநகரிலே நிறுவப்பட்டது. இதை நிறுவிய பொழுது அவருக்குதவியாகவிருந்த ஈழத் தமிழர் இருவரில் இப்பொழுது நான் மட் டுமே இருக்கிறேன். இந்த மன்றத்தை நிறு வும் தீர்மானத்தை முன் மொழிந்தவன் என்ற முறையில் இதனை நிறுவுவதற்கு அடிகளார் செய்த அளப்பரிய முயற்சிகளை நான் நன்கறிவேன், இம்மன்றம் உலக மெங்குமுள்ள தமிழியல் ஆராய்ச்சியாளரை ஒன்றுபடுத்தித் தமிழியல் ஆராய்ச்சியினை ஊக்கியது. பல நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழியல் ஆராய்ச்சியையும் தமிழ்த்துறைக் கல்வியையும் இடம்பெறச் செய்தது. ' தமிழ்ப் பண்பாடு ' எனும் ஆங்கில முத்திங்கள் ஏட்டினையும் வெளி யிட்டு அடிகளார் தமிழ் ஆராச்சியாளர் களிடையே புத்துணர்ச்சியையும் நல் எழுச்சி யையும் உண்டாக்கினர்.

தமிழ் வாழும் காலம்முழுவதும் தாம் வாழும் தனிப்பெருமையைப் பெற்ற தனி நாயக அடிகளார் மறைந்தும் மறையாப் புகழ்பெற்ற மாண்பினர்,

## பேராசிரியர் கலாநிதி ப. சந்திரசேகரம்

யாழ். பல்கலைக் கழகம்

**பா**ருலகமெங்கிலும் தமிழ் ஒலிபரப்பிய அடிகளார் இறைவனடி எய்திவிட் டார். எனினும் அவர் ஊட்டிய தமிழ்ச்சக்தி என்றென்றும் நிலைத்துநிற் கும். இந்த நூற்றுண்டில் சமய வாழ்க்கையோடு தமிழ் உணர்வினையும், கல்விப்பணியையும், இணைத்து மக்களுள் முதல்வராய் விளங்கிய அடிக ளார் அவர்களின் வாழ்க்கை இலட்சியத்தைப் பேணிக்காப்பது நமது கடமையாகும். அடிகளார் எனது பெருமதிப்புக்குரிய பேராசான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் நீதியரசர்
## கலாநிதி H. W. தம்பையா, Q. C, PH D, L.L.D (Lond)

அடிகளாரின் மிக நேர்த்தியான ஆளுமையும், அறிவும், தகமையும் கீழைத்தேய ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட அறிஞர்கள் ஒன்று கூடி, நவீன நுட்ப நுணுக்கங்களையெல்லாம் பிரயோகிக்கும் தமிழர்களின் மூலம் வரலாறு, இலக்கியம், நுண்கலைகள் என்பன பற்றி தமது ஆய்வுகளையும், கருத்துகளையும் பரிமாறிக்கொள்ள வழிசமைத்துள்ளது.

அவர் கீழைத்தேய, மேலைத்தேய இசையிலும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். இசையால் கவரப்பட்டு, அதை ஆழ்ந்து ரசித்து அனுபவித்த அவர் கீழைத்தேய இசைத்துறை ஆய்வுகளுக்கும் தூண்டுதலளித்தார்.

தனிநாயகம் அடிகளாரின் அகாலமறைவு அனைத்துலகிலுமுள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, அவரின் முயற்சியாலும் பணிகளாலும் பெரும் நன்மைகளையெல்லாம் பெற்ற மேற்குலக கிழக்குலக அறிஞர்களுக்கும் ஒரு பேரிழைப்பாகும். எம்மை விட்டுப் பிரிந்து விட்ட அவர் நிரப்பமுடியாததோர் வெற்றிடத்தையே விட்டுச்சென்றுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை பல்லாண்டுகளாகவே அவர் என்னுடன் நெருங்கிய தோழமை பூண்டிருந்தவரென்பதால் தனிப்பட்ட முறையிலும் அவரின் இழப்பு எனக்கும் ஈடிணையற்றதேயாகும். துயர்சூழும் இவ்வேளையில் தனிநாயகம் அடிகளாரும், அவர்தம் நண்பர்களும் எனது இல்லத்துக்கு வந்து அங்கேயே அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்திற்கு அடித்தளமிட்ட அந்தநாள் நினைவு இன்னமும் எனது நெஞ்சத்தில் பசுமையாக இருக்கிறது.

மலேசியாவில் நடந்த முதலாவது மாநாட்டிற்கும் சென்னையில் நடந்த இரண்டாவது மாநாட்டிற்கும் ஈழத்துப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லுமாறு என்னைப் பணித்தார். அதற்காகவெல்லாம் நான் என்றென்றும் கடமைப்பட்டவனுகவே யிருக்கிறேன்.

அவரின் நினைவு என்றென்றும் நம் அனைவரின் இதயத்திலிருந்தும் அகலாது.

## அருள்மொழிச் செல்வர்
## பேராசிரியர் பா. வளன்அரசு M. A. B. ed
### மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

உலகின் தமிழ்த்தூதராக ஓயாது உரிய பணியாற்றிய அறிஞர் தனிநாயகம் அடிகளார் எண்ணத்தாலும், எழுத்தாலும், பேச்சாலும், வாழ்வாலும் தமிழ் தழைக்க விழைந்து உழைத்தார்.

அடிகளாரின் விழுமிய எழுத்தோவியங்களுக்குச் சான்று கூறும்வகையில் அமைந்துள்ள நூல்களுள் குறிப்பிடத்தக்கவை ஐந்து. 1. தமிழ்த் தூது 2. Nature in Ancient Tamil Poety 3. The Carthucian Clergy 4. ஒன்றே உலகம் 5. திருவள்ளுவர். வேற்று மொழிகளுடனும் நாடுகளுடனும் மக்களுடனும் தொடர்புடைய அடிகளார் தமிழ்மொழி, நாடு, இனம் ஆகிய மூன்றின் மாண்பை ஒப்புநோக்கி அறிந்து பிறர்க்குக்கூறிய பெரியார் ஆவார். பன்னிரண்டு மொழி கற்ற பன்மொழிப் புலவராய் தனிநாயகம் அடிகளார், தமிழ் மொழி, உலகின் உயர் தனிச் செம்மொழியாகப் பீடுநடை போடத் திட்டமிட்டுச் செயலாற்றிய செய்தியை மேற்கண்ட நூல்

கள் எடுத்தோதுகின்றன. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பெற்ற இடம் வேறு எந்த மொழியிலும் இல்லாத ஏற்றம் மிக்கது என்பார். "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்" தமிழகம் என்பதை நானிலப் பாகுபாட்டாலும் ஐந்திணை அமைப்பாலும் நிறுவியுள்ளார். உலகளாவிய தமிழ் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கணியன் பூங்குன்றன் மொழி வழியே புகழ்மிக்கதாகத் திகழ்ந்திட வழிமுறைகள் மொழிந்துள்ளார்.

தமிழ்மொழிக்கு ஒரு பொது நிலை ஒலிப்பு முறைவேண்டும் எனவும், திரைப்பட நடிகரும் வானொலி உரையாளரும் ஆவன செய்யவேண்டும் எனவும் தூண்டியுள்ளார். ஆங்கிலம் வாணிகத்தின் மொழி, இலத்தீன் சட்டத்தின் மொழி, கிரேக்கம் இசையின் மொழி. ஜெர்மன் தத்துவத்தின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி, இத்தாலியம் காதலின் மொழி என எடுத்துக்கூறி, தமிழ் இரக்கத்தின் மொழி — பத்தியின் மொழி என விளம்பியுள்ளார். திருவள்ளுவர் அருளிய திருக்குறள் உலக ஒழுக்க நூல்களுக்கு எல்லாம் மேம்பட்டது எனச் சான்றுகள் தந்து நிறுவியுள்ளார்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம்செய்திட"ச் செயலாற்றிய செம்மல் சேவியர் தனிநாயகம் அடிகளார் உலக நாடுகளில் தமிழ்த் தூதுவராகவே புகழுடன் திகழ்ந்தார். "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவுவகை செய்த" அறிஞர் தனிநாயகம் அடிகளார். ஈழநாட்டுத் தமிழ்ச் சான்றோர் ஆறுமுகநாவலர், விபுலானந்தர், நல்லூர் ஞானப்பிரகாசர் நிரலில் சிறப்பிடம் பெறுகிறார். பாவேந்தர் பாரதிதாசன் கூறுவது போன்று, இறந்தொழிந்த பண்டைநலம், புதுப்புலமை அனைத்தும் படைத்துத் தமிழுக்குத் துறைதோறும் தொண்டுசெய்த தனிநாயகம் அடிகளார் அறிவியல் தமிழ் ஆராய்ச்சிக்குரியதாக வளரும் தமிழ் நாளும் நிவந்தோங்க உளமுவந்து உழைத்து வந்தார். தனிநாயகம் அடிகளார் தமிழ்த் தொண்டர் திலகமாகவும், இலகு புகழ்த் தூதருள் உலகின் மணியாகவும் மிளிர்கின்றார். சேவியர் தனிநாயகம் அடிகளார் போன்று செந்தமிழும் செம்மாந்த திருமறையும் தழைத்தோங்கிட விழைந்து உழைத்திடுவோம்.

மலேசிய முதலமைச்சர்

## மாண்புமிகு துங்கு அப்துல் ரகுமான்

எமது பல்கலைக்கழக இந்தியக் கலைத்துறை அதிஷ்ட வசமாக பரந்த மனப்பாங்குடைய, பன்மொழி விற்பன்னர் ஒருவரைத் தலைவராகப் பெற்றுள்ளது. பேராசிரியர் தனிநாயக அடிகளையே யான் இங்கு குறிப்பிடுகிறேன். இப்பல்கலைக் கழகத்தை தமிழாராய்ச்சி மாநாட்டின் தளமாக நீங்கள் தெரிந்துகொண்டதற்கு அவரது தலைமையிலான நிர்வாகமே காரணமென் பதிலையமில்லை.

(1-ந் தமிழாராய்ச்சி மாநாட்டு உரையிலிருந்து)

# பேராசிரியர் கலாநிதி சாலை இளந்திரையன்

(எம். ஏ., எம். லிட், பி. எச். டி)
டில்லிப் பல்கலைக் கழகம்

ஈழத்திலே பிறந்த தனிநாயகம் ஒரு மத போதகராக வளர்ந்து, தமிழ் அறிஞராக மலர்ந்து, தமிழ்ப்பண்பாடு என்னும் நறு மணத்தை உலகெங்கும் கமழச்செய்த வர லாறு மிகமிகச் சுவையானது. மதம் என் னும் எல்லைக்குள் நிற்போரையும், தனது மாண்பார்ந்த சிந்தனைகளால் கவர்ந்து, தனது அருமைத் தொண்டர்களாக்கிக் கொள்ளும் தமிழனின் அரிய சாதனை வர லாறு அது !

தனிநாயக அடிகள் மலேசிய இந்திய இயல் (தமிழ்) பகுதியின் தலைவராக இருந்த போதுதான், 1964-ல் இந்தியத் தலைநகரில் கலை பண்பாட்டியல் ஆய்வாளர்களின் 22 ஆவது மாநாடு நடைபெற்றது. உலகின் பல பகுதிகளில் இருந்து தமிழ் ஆர்வலர் களும் தமிழ்ப் பயிற்சி உடையவர்களுமான பிறமொழி அறிஞர் பலர் அங்கே கூடினர் கள். தமிழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் களும், இந்தியாவின் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த தமிழறிஞர் சிலரும் இலங்கை நாட் டுத் தமிழறிஞர்களும் வந்திருந்தார்கள்.

இந்த மாநாட்டில் பங்குகொள்வதற் காக தில்லிக்குவந்து எங்கள் இல்லத்தில் தங்கியிருந்த ஈழத்து அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள், "பலபேர் வந்திருக் கிறார்கள்; இங்கேயே உலகு தழுவிய தமிழ் அமைப்பு ஒன்றை நிறுவிவிடலாமே" என் றார். (ஏற்கனவே இதுபற்றி அவரும் தனி நாயக அடிகளாரும் பேசியிருந்தார்களோ என்னவோ தெரியாது.) நாங்களும் (நானும் சாலினியாரும்), "ஆமாம்; நல்ல யோசனை" என்றோம். மூவரும் ஒன்றாகச் சென்று பலநாட்டு அறிஞர்களிடமும் இந் தக் கருத்தைத் தெரிவித்தோம். அடிகளார் மிகச் சுறுசுறுப்பாக இப்பணியில் ஈடுபட் டார். ஒரேநாளில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் (International Association for Tamil Research) உருவாயிற்று. அடிகளார் தனி நாயகமே அதன் செயலாளர் நாயகமாகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று எல்லோ ரும் கேட்டுக்கொண்டார்கள்...

இந்த மன்றத்தை உருவாக்கியதும் அதன் பொறுப்பை அவரிடம் ஒப்படைத் ததும் எவ்வளவு பொருத்தம் என்பது விரைவிலேயே தெரியலாயிற்று. 1966 இலேயே உலகு தழுவிய ஒருதமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தமிழகத்துக்கு வெளியே (கோலாலம்பூரில்) நடத்த முடிந்தது என் றால், அது சாதாரணமான சாதனை யல்லவே...?

1-9-80இல் தமது 67ஆம் வயதில இயற்கை எய்திய தனிநாயக அடிகளாரின் வரலாறு தமிழர் ஒவ்வொருவருக்கும் புதிய நம்பிக்கையைத் தரும் வரலாறு: தமிழைப் பற்றிய நேரரன மதிப்பீடுகள் தோன்றுவ தற்கு அடிப்படையான நீரப் பணிகள் பல வற்றைப் புரிந்த ஒரு தமிழ் வீரரின் வர லாறு. "தமிழர்கள் குண்டு சட்டிக்குள்ளே தான் குதிரை ஓட்டிக்கொண்டு இருப்பார் கள்" என்று பழிச்சொல்லை மாற்றித் துடைத்து, "தமிழனும் தனது பெரு மையை உலக அரங்கில் உயர்த்திவைக்க வல்லவனே" என்னும் புதிய வரலாறு படைத்த வரலாறு அது. ஆகையால்தான், தனிநாயக அடிகளின் நினைவு மெல்லிய பூங்காற்றாக நமது நெஞ்சுக்கும் நினைவுக் கும் இதம் தருகிறது; அதிலேயிருந்து கமழும் ஒரு புத்தெழுச்சி என்னும் நறு மணத்தையும் நம் நெஞ்சிலே பாய்ச்சுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா

## வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக் கழகம்

தனிநாயக அடிகளார் பொதுவாக மக்கள் எண்ணுகின்ற தமிழ்ப்பெரியார்அல்லர். மேடைகளில் தமிழறிவைப் பயன்படுத்தி, எல்லா விஷயங்களைப்பற்றியும் பேசிவந்த ஒருவல்லவர். ஆழமான அறிவின் விளைவாக, அமைதியான தோற்றத்துடன், ஆறுதலாகச் சிந்தித்துப் பேசும் அறிஞர் அவர். எந்த விஷயத்தையிட்டும் ஆழமாக ஆராய்ந்து பேசும் பண்புள்ள அறிஞர். தமிழ்மொழி அறிவு மட்டுமல்லாது, பல வளர்ச்சியடைந்த மொழிகளின் அறிவைப் பெற்றிருந்ததினால் நிதானமுடனும், பிற பண்பாடுகளை மதித்தும் பேசும் தன்மை கொண்டிருந்தார்.

அடிகளார் இரண்டு முக்கிய தொண்டுகளை ஆற்றினர். அந்த இரண்டையும் பொறுத்து, அவரைவிடப் பிறர் கூடுதலாகத் தொண்டாற்றியுள்ளனர் என்று கூற முடியாது.

ஒன்று தமிழியல் என்னும் துறை உருவாகவும் அதுபற்றிய அறிவு ஆங்கிலம் வழியாகச் சர்வதேச அறிஞர்களை அடையவும் தொண்டாற்றினர். வேறொரு வார்த்தையிற் கூறுவதாயின், தமிழியலைச் சர்வதேச அறிவுத்துறையாக உயர்த்தினர். இதற்கு, முதன்முறையாக ஆங்கிலத்திலே தமிழ்ப் பண்பாடு பற்றிய சஞ்சிகையை (Tamil Culture) தொடக்கி நடத்தினர். பலநாடுகளுக்குச் சென்று தமிழ்பற்றி விரிவுரைகள் நடத்தினர். தமிழாராய்ச்சிக்கென்று உலக நிறுவனம் ஒன்றை அமைத்து, சர்வதேச மாநாடுகள் நடைபெற உதவினர். இத்தகைய தொண்டு பிறரால் ஆற்றப்படவில்லை.

இரண்டாவதாக, சர்வதேசத் தமிழர் மத்தியில் ஓர் ஒற்றுமையுணர்வை முதல் முறையாக வளர்க்க உதவினர். தமிழ்நாடு இலங்கை, மலேஜியா ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்த தமிழரிடையேதான் முன்பு இத்தகைய உணர்வு காணப்பட்டது' ஆனல், தனிநாயக அடிகளார் உலகின் மூலைமுடுக்குகளில் வாழும் தமிழரைப்பற்றி ஆய்வு நடத்தி அங்கெல்லாம் சென்று தமிழுணர்வைப் பரப்பி உலகத் தமிழர் பற்றிய அறிவை வளர்த்து, ஓர் ஒற்றுமையுணர்வையும் ஏற்படுத்தினர். இவையே இவரை ஒருதனித்துவமான தமிழ்ப் பெரியாராக மாற்றிவைத்துள்ளன.

# கலாநிதி அன்ரனி ஜான் அழகரசன்

## ஆசிரியர் தொண்டன்

தனிநாயக அடிகள் தமிழ் உலகத்துக்குள் காலடி எடுத்து வைத்தபோது தமிழ்உலகம் சிறியதாய் இருந்தது. ஒரு குறுகிய வட்டத்துக்குள் அது சுழன்றுகொண்டிருந்தது. தமிழ் அறிஞர்களும், பண்டிதர்களும், பாவலர்களும், புலவர்களும் தமிழின் சிறப்பை தமிழ் இலக்கியத்தின் இனிமையை தங்களுக்குள் பாடிக்கொண்டும், கட்சிகளாக போட்டி போட்டுக்கொண்டும் இருந்தார்கள். ''தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவ யார் வருவார்?'' என ஏங்கியும், நலிந்தும், கனவு கண்டும் கற்பனையில் மிதந்துகொண்டிருந்தார் பாரதியார். இவ்வேளையில் துயில் கொண்டிருந்த தமிழ்மக்களைத் தட்டி எழுப்பினர் தனிநாயக அடிகள், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாக அவர் வந்தார். தமிழ் மணம் உலகெங்கும் மணக்க காடு கமழும் கற்பூரச் சொற்காக அவர் வந்தார். முகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேக் கிழித்துவரும் பகலவனைப்போன்று தமிழர்களின் துயிலைக் கலைத்துவரும் பகலவனாக தனிநாயகம் வந்தார். தமிழ் அன்னையே! உன் பண்பாட்டின் மேம்பாட்டின் புகழைப் பாடிவரும் வண்டாக நான் பறப்பேனென்று சொல்லிக்கொண்டு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தமிழ்ப் பண்பாட்டின் தூதுவராகப் பறந்துசென்று தமிழ்மொழியின் மாண்பையும், தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் எடுத்து இயம்பினார். இராச இராச சோழன், இராஜேந்திரச் சோழன் செல்லத்தவறிய இடங்களுக்கெல்லாம் தனிநாயக அடிகள் சென்று தமிழ்மணம் பரப்பினார். தனிநாயக அடிகள் இல்லாதிருந்தால் தமிழ்மொழி ஏங்கேயோ ஒரு மூலையில் தென் இந்தியாவிலும், இலங்கையிலும், இன்னும் ஒரு சில நாடுகளில் பேசப்பட்ட மொழியாக — பேசப்பட்டு வருகின்ற மொழியாக மட்டுமே இருந்திருக்கும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக யாருமே செய்திராத தமிழ்ப் பணியைத் தனிநாயக அடிகள் செய்தார். உலக அரங்கிலே, உலகப் பூகோளத்திலே தமிழ்மொழிக்குரிய இடத்தைக் கொடுக்கப் பாடுபட்டு வெற்றியும் கண்டார். எனவே, தனிநாயக அடிகள் ஒரு தனி மனிதர் அல்லர். அவர் ஓர் இயக்கம்.

# அருள்மிகு பி. சின்னராசா அடிகள்

## B. Phd. (Poona)

எம் இனத்தின் பண்பாட்டை, பாரம்பரியங்களை ஐயந்திரிபற கற்றதோடு மட்டுமல்ல " கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக " என்ற வள்ளுவரின் வாக்குக் கொப்ப வாழவும் முனைந்தவர் தனிநாயக அடிகள்.

அவர் தனது திருமறைப்பணியைத் தமிழர் பண்பாட்டின் அடித்தளத்திலிருந்தே ஆரம்பிக்க முயன்றவர். தமிழர் பண்பாட்டின் தலைசிறந்த களஞ்சியங்களாக விளங்கும் நூல்களான தொல்காப்பிய பொருளாதாரம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பவற்றிலிருந்தே அடிகள் கைக்கொண்ட பண்பாட்டின் கொள்கைகள் விளக்கம் பெறுகின்றது.

கிறிஸ்து இவ்வுலகுக்குக் கொண்டு வந்த நற்செய்தி அனைத்துலக மக்களுக்கும் உரியது என்பதை உணர்த்தவே புறநானூற்றில் வரும் " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற பரந்த உலக பண்பாட்டையுடைய கொள்கையை எடுத்தியம்பினார். உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றபோது வரவேற்புரையை ஆற்ற எழுந்த அடிகளின் உதடுகளில் இருந்து முதன்மையாக வெளிவந்த பொன்மொழிகள் இவையாகும்.

கிறிஸ்து தோன்றியது ஒரு இன மக்களுக்காகவோ ஒரு மொழி பேசுபவர்களுக்காகவோ ஒரு நாட்டினுக்காகவோ அல்ல. அவர் வாழ்ந்துகாட்டிய நெறி அனைவர்க்கும் இனியது—ஏற்றது. தன்னலத்தை மறந்து பிறர்நலம் பேணுபவர்களாக வாழவேண்டும் என்று கிறிஸ்து போதித்தவற்றை தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். என் கடன் பணிசெய்து கிடப்பதே போன்ற தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளின் மூலம் விளக்குகிறார்,

ஆண்டவரின் அழைப்பை எவ்வேளையிலும் உணர்ந்தவராகவும் வாழ்வில் உயர்வு வந்தபோதும் உயரிய பண்புகளை இழக்காதவராகவும் இறைவன் படைத்த இயற்கையை என்றுமே ரசித்து இறைவனுக்கு எந்த வேளையிலும் நன்றிகூறி வாழ்ந்தவர் தவத்திரு தனிநாயகம் அடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்திரு சா. ம. செல்வரத்தினம், அ. ம. தி.

(கரவையூர்ச் செல்வம்)

உளஇயல்துறை, லொயலாக் கல்லூரி மேரிலண்ட்--வாஷிங்டன் D. C.

தனிநாயக அடிகளின் வாழ்க்கையின் பிற்பகுதியில்தான் அதுவும் அவர் அனைத்துப் பணிகளிலுமிருந்து ஓய்வெடுத்த பின்னரேயே அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது, முன்னரேயே அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று நான் ஏங்கியதும் உண்டு.

தமிழன் சிறப்பை, தமிழவின் உயர் பண்பாட்டை அயல்நாடுகளுக்கு, அதுவும் சிறப்பாக மேல்நாடுகளுக்கு எடுத்துச் சென்ற தனிப்பெருமை அவருடையது.

உலகத்தமிழாராய்ச்சி மாநாடுஎன்ற அனைத்துலகத் தமிழ் இலக்கியத்துடன் அடிகளாரின் பெயர் பிரிக்கமுடியாது ஒன்றி இணைந்து விட்டது. அவரின் தமிழ்ப்பணியின் இன்னோர் சிகரம், அறிவும் ஆழமும் உயர்ந்த தரமுங் கொண்ட ஆங்கிலச் சஞ்சிகையான **TAMIL CULTURE** அடிகளாரின் தீர்க்க தரிசனப் பார்வைகொண்ட பணிகளில் பிறிதோர் ஒன்று. இவை அழிக்கமுடியாத பணிகள். தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழ்க் கலாச்சார வரலாற்றில் அடிகளாருக்கு தனியான ஒரு இடம் உண்டு.

# ஜனாப் அ. ஸ. அப்துல்ஸமது பீ. ஏ. (ஆனர்ஸ்)

பொதுவாக சிலநூல்களை எழுதிவிடும் ஒருவரைத் தமிழ்த்தொண்டு செய்தவர் என்று போற்றும் மரபு நம்மிடையேஉண்டு. தமிழ்த் தென்றல் வி. கல்யாண சுந்தரமுதலியாரைப் போல் ஆய்வறிவும், அரும்பணியும் நாட்டுப்பற்றும் கொண்டு பன்முகப் பணியாற்றும் அறிஞர்கள் மிகக்குறைவு. இந்தவகையில் ஈழம் பாக்கியம்செய்த பூமி. ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், வண. தனிநாயகம் அடிகள் என்போர் அறிவுப்பணி மட்டுமின்றி அறிவுசார்ந்த தமிழ்ப் பணியும், சமயப்பணியும், தேசப்பணியும் ஒருங்கே செய்து நற்புகழ் பெற்றவர்களவர். இலங்கை சுதந்திரம் பெற்றதும், தமிழர் நிலையும், தமிழ்மொழியின் அந்தஸ்தும், பெரும் போராட்டங்களுக்கு இலக்காகிவிட்டன. இந்தப்போராட்டங்கட்கு முகம்கொடுத்து நின்ற ஒரு அறிஞர் வண. தனிநாயகம் அடிகளே ஆவர், என்பது ஒப்புவமைக் கூற்றல்ல.

'' மெல்ல மெல்ல தமிழ் இனிச்சாகும் '' என்ற பாரதிவாக்கை உற்றுணர்ந்தவராக அடிகளார் செயற்பட்டார். இதற்கெல்லாம் அவருக்குத் தமிழ்ப் பாரம்பரியத்தின் மீதும், அதன் கலாச்சாரத்தின்மீதும் இருந்து வந்த ஆழ்ந்த அறிவும் உணர்வும், ஈடுபாடுமே காரணங்களாகும். இதன்விளைவாக தமிழ்கூறும் நல்லுலகத்தை ஒன்றுபடுத்தி அதன்மூலம் தமிழர்க்குத் தம் பெருமையையும் பாரம்பரியத்தையும் உணர்த்தி, அவர்கள் விழிப்புணர்ச்சிபெறுமாறு செய்ய எண்ணினர்.

ஒருநாள் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களை அவருடைய வீட்டில் நான் சந்திக்கச் சென்றேன். அப்போது அவர் சாய்மனையில் படுத்தவாறு ''திருவாசகம்' படித்துக்கொண்டிருந்தார். '' என்னசேர் திருவாசகத்தில் உருகிவிட்டீர்களா''? என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஓம் மாஸ்டர், தனிநாயக அடிகள் அவ்வாறு உருகச்செய்துவிட்டார் '' என்றுகூறி அதற்கான காரணத்தையும் எனக்கு விளக்கினுர். கலாநிதி அஸீஸ் அவர்கள் திருவாசகம் படிக்கக் காரணமாயிருந்தது தனிநாயக அடிகளின் ஒரு ஆய்வுப் பொன்மொழியாகும். அது தமிழின் சிறப்பம்சம் ஒன்றைப் பின்வருமாறு எடுத்துக்கூறுகின்றது. வர்த்தகத்திற் ஆங்கிலமும், அரசியலுக்குப் பிரான்சும், காதலுக்கு இத்தாலியும், தத்துவத்திற்கு ஜேர்மனியும், எப்படிப் பிரபல்யமோ, பக்திக்குத் தமிழ்மொழி அப்படிச் சிறப்பாகும்.'' இப் பொன்உரையின் மூலம் தமிழ் மொழியை எவ்வளவு தூரம் ஆழ்ந்து, ஆய்ந்து ஏனைய மொழிகளுடன் ஒப்புநோக்கிக் கூறியுள்ளார் என்பதை, நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது.

# பண்டிதர் வீ. சி. கந்தையா

**வ**ண. சேவியர் தனிநாயக அடிகளார் தன் காலம் முற்றும் கற்றோர் மத்தியில் ஒரு தனித்துவம் பெற்றுத் தனிநாயகமாகவே திகழ்ந்தார். தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரான்சு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தமிழில் ஏதாவது ஒன்றைப்பற்றி அவர் பேசினுல் அழுத பிள்ளையும் வாய்மூடி அவர் பேச்சைக் கேட்கும், அவ்வளவுதூரம் இனிமை நிறைந்து, தமிழின் சாயல் இனிமை நிறைந்ததுதான் என்பதையெவரும் உணரச்செய்யும் பேச்சாற்றல் நிறைந்து காணப்படும், அவரது சொற் பெருக்கும், அதன் உயிர்த்துடிப்பும்.

ஆங்கிலச் சொல் நூலாசிரியராக ஜோன்கிரகர்ம் என்பவரும் பின்வருமாறு குறிப்பிடுகிருர் :

'' பழங்காலத்துச் சமூகநிலை, அரசியல் நிலை என்பவற்றைக் கண்டு அவற்றைப் பற்றிய தம் கருத்தை மற்றோரும் நமக்கு அறிவிக்குமாறு, அந்நிலைகளைக் காட்டுவனவாய் இன்றைய சொல்வடிவில் வழங்கும் நினைவுச் சின்னங்களை ஓர் ஆசிரியன் குறித்து வைத்தல் வேண்டும், ஒவ்வொரு நாட்டவரினதும் அகவாழ்வானது, அவரது மொழியிலகா எழுத்திற் பேச்சு வழக்குப்படி பொறிக்கப்பட்டு வரலாறு, பழக்கவழக்கங்கள் ஒழுக்கவிதிகள் என்பவற்றைப் பொருள் வழக்கொழிந்த சொற்களினின்றும் வெளிக்கொணராத ஆசிரியர், தமது வரலாற்று ஆராய்ச்சியில் மிகுதியும் தவறியவராவர்.''

இப்பெரியாருடைய கூற்றுக்கமைய தமிழ்ச் சொற்களின் ஆட்சிமுறை, இடத்துக்கிடம் வழங்கும் தன்மை முதலியவற்றை ஆராய்வதில், ஈடுபட்டுழைத்த பெருமையும் தனிநாயக அடிகளாரைச் சாரும். பல்வேறு மொழிகளிற் திறமையுடையவராய் இருப்பினும், தமிழ் மொழிமீது அவருக்கு இருந்த பற்றும் பாசமும் சொல்ல முடியாதவைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாடு

## தனிநாயகம் அடிகளின் கருத்துக்கள்

*1. தமிழர் பண்பாடு என்னும் பொழுது எத்தகைய பொருளைக் குறிக்கும்?*

பண்பாடு என்பது பண்டைத்தமிழ்ச் சொல்லாகிய பண்பிலிருந்து பிறந்தது. திருவள்ளுவர் பல குறட் பாக்களில் பண்பு எனும் பொருளின் விளக்கத்தைத் தருகின்றார். அச்சொல்லிற்கும் பண்பாடு (Culture) எனும் சொல்லிற்கும் இத்துறையில் வேறுபாடு இல்லை. ஆனல் பண்பாடு என்னும் சொல்லை முதலில் கையாண்டவர் இரசிகமணி ரி. கே. சிதம்பரநாத முதலியார் என்றே நம்புகின்றேன். பண்பாடு என்பது ஒரு இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைகள், சமயங்கள், சமூகச் சடங்குகள், ஆடை அணிகலன்கள் இவற்றையெல்லாம் குறிக்கும். நாகரிகம் என்பதும் தமிழ்ச் சொல்தான். அது வடமொழிச் சொல் அன்று. நாகரிகம் பெரும்பாலும் மக்கள் அறிவியலைப் பயன்படுத்தும் முறைகளையும் நகர வாழ்க்கையில் கூட்டு முன்னேற்றங்களையும் குறிக்கும். நாகரிகம் (நகர வாழ்கையிலிருந்து பிறந்தது. நகர் நகர நம்பியர், நாகரிகம் ) ஆரியர், திராவிட மக்களிடமிருந்தே நகர்கள் அமைப்பதையும் கற்றுக் கொண்டனர்.

நாகரிகம் எனும் சொல் திருக்குறளிலும், நாற்றிணையிலும் தோன்றுகின்றது. உழவுத் தொழில் நிலத்தைப் பண்படுத்துவது போல் மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு (பண்பாடு).

*2. தமிழர் பண்பாட்டை உணர்த்தும் நூல்கள் யாவை?*

தமிழ் மக்களின் பண்பாட்டை உணர்த்தும் நூல்கள் பல. அந்தப் பண்பாடு இலக்கண இலக்கிய நூல்களில் மட்டும் அடங்காது. நம் பண்பாட்டினை கட்டிடக் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசை நாட்டிய நாடகக் கலைகளிலும் நம்வரலாற்றிலும் காணலாம். கால அடைவில் பண்பாடு சிறிது மாற்றமடைந்து வருவதே இயல்பு. ஆயினும் அடிப்படைக் கொள்கைகள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள் மாருமல் இருக்கும். தமிழர் பண்பாட்டில் தலைசிறந்த களஞ்சியங்களாக விளங்கும் நூல்கள் தொல்காப்பிய பொருளதிகாரம், புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் என்று கூறலாம்.

பிற சங்க இலக்கியங்களும் பிற்காலத்தில் தோன்றிய நூல்களும் பண்பாட்டை விளக்குகின்றன. ஆயினும் இந்நான்கு நூல்களும் ஏனைய நூல்களிலும் பண்பாட்டைப் புலப்படுத்தும் நிகரற்ற நூல்கள். திருவள்ளுவர் எத்துணை அழகாகக் கூறியுள்ளார்: ''பண்புடையார் பட்டுண்டு உலகம்''

தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல் வேறெந்த மொழியிலும் நூல்களைக் காண்பது அரிது. பக்தியும் தமிழ்ப் பண்பாட்டில் சிறந்த அறிகுறியென்பது ஒருதலை.

*3. தமிழர் பண்பாட்டின் முக்கிய கொள்கைகள் எவை?*

பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. ஆதலால்தான் புறநானூற்றில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும், திருவள்ளுவத்தில் ''யாதானும் நாடாமால் ஊராமால்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. விருந்தோம்பல், ஒரு

தொடர்ச்சி 66-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடிகளார் கட்டுரைப்போட்டியில்

முதற்பரிசு பெற்ற

## கட்டுரைகள்

1-ம் பிரிவு — செல்வி ம. இ. வனிதா ஞானப்பிரகாசம்

2-ம் பிரிவு — செல்வி றெசெற்று மெலானி இராசேந்திரம்

3-ம் பிரிவு — செல்வி மேளின் வேர்ஜினி சவிரிப்பிள்ளை

4-ம் பிரிவு — செல்வி அற்லின் ஜசிந்தா பெனடிக்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1-ம் பிரிவு முதற்பரிசுக் கட்டுரை

# தனிநாயக அடிகளின் வாழ்க்கை வரலாறு

**செல்வி ம. கி. வனிதா ஞானப்பிரகாசம்**
*(ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்)*

*''பசுந்தீவு'' என்னும் பழம் பெயர் வாய்ந்தது நெடுந்தீவு. இத்தீவைச் சேர்ந்த பெற்றோருக்கு அடிகளார் 2-8-1913ல் ஊர்காவற்றுறையிற் குழந்தையாய் அவதரித்தார். இவர் தந்தையார் இஸ்ரனிஸ்லாஸ் என்னும் கணபதிப்பிள்ளையாவர். சிசில் இராசம்மா அம்மையார் இவரின் அருமை அன்னையர் ஆவர். நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்ந்த இவர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தமது ஆரம்பக்கல்வியை பயின்றபின்னர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது உயர் கல்வியைத் திறமையுடன் கற்றுத் தேர்ந்தார்,*

*தொடர்ந்து கொழும்பு புனித பேனர்ட் குருக்கள் கல்லூரியில் நான்கு ஆண்டுகளும் உரோமைஊர்பான் போந்திபிக்கல் பல்கலைக் கழகத்திலும் பயின்று 1938ல் தனது மறை அறிவை நிறைவு செய்து கத்தோலிக்க குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கொப்ப இவரது வியத்தகு விவேகம் எல்லாத்துறையிலும் அறிவொளிரும் தினகரனைச் சுடர்விட்டுப் பிரகாசித்தது.*

*அங்கிருந்து இந்தியாவுக்கு வந்த அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இலக்கிய முதுமானிப் பட்டங்கள் பெற்ருர். நூத்துக்குடியில் முத்தமிழ் வித்தகனைப் பணிபுரிந்தார், தமிழ் வளர்க்கத் துணிந்த இவர் அதனை உலகமெலாம் பரவும் வகை செய்வதற்காக ''தமிழ்க்கலாச்சாரம் என்னும் முத்திங்கள் ஏட்டினை அச்சிட்டு வெளியிட்டார். இதனுல் தமிழர் கலாச்சாரத்தை உலகெலாம் பரப்பிய பெருமை தனிநாயகம் அடிகளாரின் உரிமை.*

*என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை தன்ருக தமிழ்செய்யுமாறே என்பதே தனிநாயகத்தின் தமிழ் பெருமையாகும். சேக்கிழாரின் செய்யுள் நடையிற் செந்தமிழ் பேசும் தமிழ்த்தலைவன், தமிழ்த் தூதாக, உலகைச் சுற்றி உலாவிய இவர் 53- 61ல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் 61—69ல் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.*

*பின்னர் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை 1966ல் மலேசியாவில் முதலாவதாகவும் 1968ல் சென்னையில் இரண்டாவதாகவும்' 1970ல் பாரிசில் மூன்ருவதாகவும் நடாத்திஞர். 1971ல் பல்கலைப்பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் நாலாவதாகத் தான் பிறந்த தாய்நாடாம் யாழ் நகரில் 1974ல் நடாத்தி உலகப் புகழ் பெற்ருர். தமிழ்த்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயின் தனிமகனும் தனிநாயகத்தின் உயிர் உலகெங்கும் ஓடித் தமிழுக்கு ஊட்டமளித்ததில் வியப்பொன்றுமில்லை.

ஈற்றில் 1974ல் யாழ் வளலாய் ஆயர் இல்லத்தில் நிரந்தர ஓய்வு பெற்ற பின்னரும் 1980-ம் ஆண்டு சித்திரையில் யாழ் வீரசிங்கம் அரங்கில் தந்தை செல்வாவின் நினைவுச் சொற்பொழிவையும் வைகாசியில் திருக்குறள் மகாநாட்டுச் சொற்பொழிவையும் ஆற்றி தமிழ்த்தாய்க்கு தன் எஞ்சிய சக்திகளை எல்லாம் தானம் செய்தார்.

'அன்புடையார் என்புமுரியார் பிறர்க்கு' என்ற வள்ளுவரின் வாக்கிற்கொப்ப உடல் பொருள் ஆவியனைத்தையும் திருமறைக்கும் தமிழ் மொழிக்கும் அர்ப்பணித்த அடிகளார் 1980 செப்டம்பரில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார். ஆசிய ஜோதி அணைந்தது. அகிலம் போற்றும் தமிழ் ஞானி மறைந்தார். நெடுந்தீவின் தனி நாயகம் எம்மவர்க்கும் உலகவர்க்கும் நித்திய ஜோதியாய் ஒளிரட்டும். நம் நம் தாய்த்தமிழ் மொழி வாழ்க! வளர்க!!.

கவின்கலைகள் பண்பாட்டில் சிறந்த இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் எழுப்பிய கோயில்கள், அமைத்த கோபுரங்கள் செதுக்கிய சிலைகள், வளர்த்த இசையும் நாட்டியமும் அவர்களுடைய அழகுக்கலையின் ஈடுபாட்டுக்குச் சான்றுகளாக மிளிர்கின்றன. ரொட்டான் (Rodin) என்னும் பிரான்சிய நாட்டுச் சிற்பி ஆடவல்லாரின் சிலையை வியந்து போற்றியுள்ளார். இவ்வரறு நம்மெல்லாக் கலைகளும் உலகின் மதிப்பையைப் பெற்றுள்ளன. நம் மக்களின் கலையீடுபாடு குறைந்து வருதற்கு நாம் ஒருபோதும் இடமளித்தல் ஆகாது. ஈழ நாட்டில் எத்தனையோ கட்டிடச்செல்வங்களை அந்நியராட்சிக் காலத்தில் நாம் இழந்துள்ளோம். மீண்டும் அழகுச் சின்னங்களை நிறுவுவது ஒரு பெரும் தொண்டாகும். அத்தகைய ஒரு சின்னத்தைத் தந்தை செல்வாவின் நினைவுக்கு நம் தலைநகரில் நிறுவியது போற்றத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2-ம் பிரிவுப் பரிசுக் கட்டுரை

# தனிநாயகம் அடிகளாரின் கல்வித்தொண்டு

செல்வி. றுசெற்று மெலானி இராசேந்திரம்
அச்சுவேலி புனித திரேசா மகா வித்தியாலயம்

தமிழன்னை செய்த அருந்தவப் பேறாய் ஈழவளநாட்டின் பசுந்தீவு எனப் புகழ் வாய்ந்த நெடுந்தீவிலே அவதரித்தவர் சுவாமி தனிநாயகம் அடிகளார். ''யாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்'' என்னும் நல்லியல்போடு வாழ்ந்த உத்தமர். ஈழமணித் திருநாட்டின் இணையில்லா ஒளி விளக்கு. ''தேமதுரத் தமிழோசை'' உலகமெல்லாம் பரவும் வகை செய்த பெருந்தகை. செந்தமிழ், இன்றமிழ், தண்டமிழ், வண்டமிழ், தீந்தமிழ், அருந்தமிழ், உயர்தமிழ், செழுந்தமிழ், கோதில்தமிழ், தேன்றமிழ் என்றெல்லாம் இனிதிசைத்து தமிழன்னையை அரியணையேற்றிய வல்லாளர். அவரது சமயத் தொண்டை மெச்சுவதா? தமிழ்த் தொண்டைப் போற்றுவதா? கல்வித் தொண்டை ஏற்றுவதா? முன்னையவற்றிற்கெல்லாம் அவரது கல்விப் பணியே உறுதுணையாகின்றது. ''கல்வியே கருந்தனமாகக் கொண்டு'' கல்விக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டு அர்ப்பணித்த கல்விமான்.

ஓரிடத்தில் அவர் நிலையாக நின்றதாகத் தெரியவில்லை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று எங்கெல்லாம் கல்வித் தொண்டு செய்யவேண்டுமோ எங்கெல்லாம் அவர் சேவை தேவைப்பட்டதோ? அங்கெல்லாம் சென்று அறிவொளி புகட்டத் தவறவில்லை. புனித பூமியாம் றோமா புரியில் குருத்துவப் படிப்பை முடித்துக், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரநாதர் தோன்றிய தூத்துக்குடியில் புனித தெரேசாள் கல்லூரியில் நல்லாசிரியனாகவும், அதிபராயும் இருந்து 1940-1945 வரை ஆங்கிலம், தமிழ், வரலாறு போதித்துக் கல்வித் தொண்டாற்றினர். 1950-1951ல் வட, தென் அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றிய முதல் இலங்கையர் என்ற பெருமையைத் தமதாக்கிக் கொண்டார். இவரின் பெருமையை அறிந்த மலாயா அடிகளாரை வருந்தியழைத்ததால் அங்கும் சென்று கல்வித் தொண்டாற்றினர். இவரின் கருத்தாழம் மிக்க சொற்பொழிவுகள் அனைவரையும் கவர்ந்தது. அடிகளாரின் பேச்சு, நடை, சேக்கிழார் நடையைத் தழுவியதால் 20ம் நூற்றுண்டின் சேக்கிழார் என்றே அன்பொழுக அழைக்கப்பட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்விப் பீடம் சுவாமிகளை கல்விக் கொள்கை, தமிழ் கற்பிக்கும் முறைகள், என்பனபற்றி விரிவுரையாற்றும்படி விரும்பி அழைத்தது. அவ்வழைப்பை ஏற்று 1955 முதல் 1961 வரை விரிவுரையாளராய் கல்வித் தொண்டாற்றினர். மலாயப் பல்கலைக்கழகம் இந்தியக் கலைப்பீட விரிவுரையாளராய் இவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் தகைமையை அறிந்து மீண்டும் நியமித்தது. 1965 முதல் 1969 வரை அருஞ் சேவையாற்றினர். அக்கால, மலாயப் பொதுக் கல்வித் தராதரப் பத்திர பிரதம பரீட்சகர், இந்தியக் கலைப்பேராசிரியர், கல்வித்துறைக் குழு சிரேட்ட அதிபர், இஸ்லாமியக் கலைக் குழு அங்கத்தவர், மலாயப் பல்கலைக்கழக மாணவர் நலன்புரிக் கழகக் காப்பாளர், நூற்கூடக்குழு உறுப்பினர் எனப் பல பதவிகளையும் வகித்து, தன்னுலான கல்வித் தொண்டாற்றி மக்கள் மனதில் நீங்கா இடத்தைத் தட்டிக் கொண்டார்.

யேமன், பிரான்ஸ், நேப்பிள்ஸ் போஸ்ற நகரங்களிலுள்ள சர்வகலாசாலைகளில் தரிசக பேராசிரியராய்க் கடமையாற்றி அருஞ் சேவை யாற்றினர். இவையெல்லாம் செய்தும் அவர் மனம் நிறைவுபெற்று விடவில்லை. மக்கள் அறியாமையைப் போக்கி, அறிவொளி புகட்டப் பல சொற்பொழிவுகளையாற்றியும், மாத ஏடுகளை வெளியிட்டும், நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், மக்கள் பயன் பெற உதவினர்.

தமிழில், "இயற்கைக் காவியங்கள்" "தமிழ்த் தூது" எனும் கட்டுரைக்கொத்து, "ஒன்றே உலகம்", "நிலத் தோற்றமும் காவியமும்", "தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்", "அகில உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுப் பேருரைகள்" என்பன இவரது நூற்றொகுப்புக்களும், சொற்பொழிவுகளுமாகும். இவற்றால் பயனடையாதார் யாருமிலர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவன் வாக்கு இவரிடம் நிறைவேறியது. அடிகளார், புகழையும், பெருமையையும் நாடிச் செல்லவில்லை. இவர் ஓர் உத்தம குருவாய், பண்புமிக்க நல்லாசானாய், இறைவனின் உத்தம சீடனாய், வாழ்ந்ததனால் பேரும், புகழும் இவரை நாடி வந்தன. "எவனும் தன் சொந்த நாட்டில் மகிமைப் படுத்தப்படான்" என்ற யேசு பெருமானின் பொன்மொழி இவரிடம் பொய்த்துவிட்டது போலும்! மறைவாக தமக்குள் பழங்கதைகள் பேசிப் பயன் என்ன? நமது திறமையான புலமையைப் பிறநாட்டார் அறியும் வகை செய்தல் வேண்டுமென்பதே அடிகளாரின் தணியாத ஆசை. உலகக் கல்வியைப் போதிப்பதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. "கற்றதனாலாய பயன் என்கொல்?" என்ற வினாவிற்குத் தானே இலக்கணமாய் அமைந்து "வாலறிவன் நற்றாள் தொழுதார்". கற்றபடி ஒழுகினர். இறைபக்தியின் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும், எடுத்தியம்பத் தவறவில்லை.

இறைவனின் பேரருளின்றிக் கல்வியின் பயனை அனுபவிக்க முடியாதென்பதே அவரின் அசைக்கமுடியாத கொள்கை. தான் கண்ட இயற்கை, செயற்கை யாவற்றையும் தேவனின் திருநூலாம் "விவிலியத்துடன்" இணைத்து இன்பம் துய்த்தார். தான் பெற்ற இன்பத்தைத் தம்முடன் சேர்ந்தாருடன் பகிர்ந்து கொண்டார். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் "மேலைநாட்டார்கள் தத்தம் தாய்மொழிகளை ஏற்றிப் போற்றுகிறார்களே! அப்படியானால் நம் தாய் மொழியாம் கன்னித்தமிழ் அவர்கள் மொழிகளுக்குக் குறைந்ததல்ல" என்பதை ஆணித்தரமாகக் கூறிவைத்த உத்தமர். "வணிகத்துக்கு ஆங்கிலமென்றும், காதலுக்கு இத்தாலியென்றும், தத்துவத்திற்குக் கிரேக்கமென்றும், சட்டத்திற்கு டச் மொழியென்றும் கூறுகிறார்களே! நான் கூறுவேன் தமிழ் பக்தியின் மொழி என்று!" இது ஒன்று போதுமே அவரின் திறமைக்குச் சான்று பகர.

இவர் ஆற்றிய கல்வித் தொண்டிற்கு இவர் இயற்றிய நூல்களே சான்று பகர்வன. நான்கு மகாநாடுகளையும் முன்னின்று நடத்தி நமக்கும், தமிழிற்கும், தமிழ்க் கல்விக்கும் பெருமையையும், புகழையும், தேடித் தந்த அடிகளார் கடைசியாக மதுரைக் கூடல் மாநகரில் நடந்த விழாவினைக் காணவில்லையே என ஏங்கினாலும்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்
படும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கொபப இறைவனோடு சங்கமமாகி வான்வீட்டில் இருந்து கண்டு களித்திருப்பர் என்பது திண்ணம். அவர் இவ்வுலகை விட்டு நீங்குவதற்கு சில வாரங்களுக்கு முன் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் பேருரை நிகழ்த்தும்போது ''என் கண்பார்வை குறைந்து வருகிறது. உடல் நலம் குன்றி வருகிறது, ஆனால் என் தமிழ்ப் பற்றோ குறையவில்லை என்று கூறியதிலிருந்து, தமிழ்ப்பற்றிலும், கல்விப் பற்றிலும், அவருக்கிருந்த தணியாத ஆசை தெளிவாகிறது.

அவரது பூதவுடம்புதான் மண்ணோடு மண்ணாய் அழிந்தொழிந்தாலும், அவரது புகழ் தமிழ் உள்ளளவும், கல்வி உள்ளளவும், உலகுள்ளளவும் நிலைத்திருக்குமென்பது திண்ணம்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு''

என்பதற்கொப்ப அடிகளார் தமிழிற்கும், கல்விக்கும் செய்த சேவை என்றும் நிலைத்து அடிகளார் புகழ் வளரத், தமிழ் வாழ, கல்வி ஆர்வம் எம்மிடையே பெருகித் தமிழன்னையை ஏற்றி மகிழ்வோமாக.

## யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

### தாய்ச்சங்க நிருவாகிகள்

### 1980 — 1981

| | |
|---|---|
| **பரிபாலகர்:** | அருட்டிரு. யே. நீக்கிலஸ் அடிகளார் |
| **தலைவர்:** | திரு. ஆர். யோசெவ் |
| **பொதுச்செயலாளர்:** | திரு. சி. வின்சென்ற் |
| **பொதுப்பொருளாளர்:** | திரு. அ. யோசெவ் |
| **துணைத்தலைவர்:** | திரு. தே. தொம்மையப்பு |
| **துணைத்தலைவர்:** | திரு. எஸ். பி. அலோசியஸ் |
| **துணைப்பொதுச் செயலாளர்:** | திரு. அ. அந்தோனிமுத்து |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-ம் பிரிவு முதற் பரிசுக் கட்டுரை



# தனிநாயக அடிகளின்
# தமிழ்த் தொண்டு

செல்வி மேரின் வேர்ஜினி சவிரிப்பிள்ளை
இளவாலை மடம்.

மாசறு மனத்தனாய், வேண்டுதல் வேண்டாமையிலான் பணிசெய்யப் புகுந்த துறவியாய், ஏழைகள் தோழனாய், தொண்டே துறவறமாய் தனக்குவமையில்லாதான் தனக்கே பணிசெய்து தனக்குவமையில்லாத் தவவாழ்வை மேற்கொண்ட தவத்திரு தனிநாயக அடிகள் 1913ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 2ஆம் நாள் ஊர்காவற்றுறையில் கென்றிஸ்ரனிஸ்லோஸ் சிசிலியா தம்பதிகளின் தவப் புதல்வனாகத் தோன்றினார்.

தற்றமிழ் என்னும் நல்லதொரு தூணிலே சிற்றுளி வேலைசெய்திட்ட சிற்பியவர்; தெய்வப் புகழ்பரப்பித் திகழ்ந்த தமிழின் ஒளி; சத்திய நெறிகண்டு சன்மார்க்க வித்திட்டு முத்திநகரின் முடி கண்ட மெய்ஞ்ஞானி; பாரினிற் பயிலும் பன்மொழிகளையும் ஆராய்ந்து வேரை அகழ்ந்து விதை கண்ட மாமேதை; ஈழத்திருநகரின் உயர் கலைப்புலமையை ஞாலத்தில் பரப்ப வந்த நறுமணத்தின் பூங்காற்று; கலைவாழ்வின் பெருங்கலைஞன்; இலக்கியத்தேன்; வரலாற்றை வடித்து வைத்த வல்லாளன்; மாதுறவு வேண்டாமல் மண் பொன்னைத் தீண்டாமல் மாதுறவுபூண்ட மனிதப் புனித குரு; வாழுந் தலைமுறைக்கு வாய்த்தவொரு நூல்நிலையம்; நாளும் நடமாடும் பல்கலைச்சேரி நற்கழகம்; வியர்வை உடல் தோய்ந்த தொழிலாளி; நெறியிற்பிறழாது நிமிர்ந்துயர்ந்த மேருமலை; அறிஞர்குழாம் திரண்டு ஆராயும் பொன்னேடு: வாழ்வில் தனி ஒரு நாயகமாக விளங்கிய தனிநாயக அடிகள் திருநாடலங்கரிக்கக் காலமாகிவிட்டார் என்பது கற்பனையே. காலமதாய் மாறிவிட்டார் என்பதுதான் பேருண்மை.

பல்கலையில் சிறந்து விளங்கியபோதும் நல்கலையாம் துறவறத்தில் 1931ஆம் ஆண்டு தன்னை அர்ப்பணித்தார். கல்வி ஆர்வமும் புத்தி சாதுரியமும் மிக்க தனிநாயக அடிகள் ரோமாபுரிப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும்போதே 1938ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆந் திகதி பேரருட் தந்தை றுகிலியா ஆயர் அவர்களால் இனிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதன் மூலம் கர்த்தர் யேசுவின் கருணைப் படையின் தளபதியானார்.

இனியநாயகமான தனிநாயகம் தமிழிற்குச் செய்த தொண்டுகள் ஒன்று இரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டல்ல; எண்ணிக்கைக்கடங்காதவை. 1939ஆம் ஆண்டு குருத்துவக் கல்வியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு தமிழகம் சென்று தூத்துக்குடியில் அமைந்திருக்கும் புனித திரேசாள் உயர்கல்விப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினர். 1941ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகம் ஒன்றை நிறுவினர். தொடவுமஞ்சிய கருத்துக்களைத் தனக்கேயுரிய எளிமையொடும், திறமையொடும் மெல்லிதழ்கள் நோகாது, லாவகத்திற் தொடுத்து நளினமான மாலையாகத்தான் தொடுத்த நாளும் மணக்க நாண் மலர் மாலையாய் இற்றைவரை விளங்க வைத்ததையா? வடமொழிக்கே வணக்கம்செய்து, வாழ்த்துரைத்து வாழ்ந்த வறியோர்க்கு வடமொழியோ தலைமொழி? நம் தாய்த் தமிழே வழிமொழி என வடதென் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் ஜப்பானியப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த் தூதுவராகத் தனிநாயகமாக நின்று எடுப்புடன் எடுத்தியம்பியதையா? எதைக் கூறலாம்.

அகிலமெலாம் சுற்றித்திரிந்து தமிழ் மொழியின் இயல்பு, சிறப்புப்பற்றி ஆங்கிலத்தில் பேருரைகளை நிகழ்த்தி பிறமொழி வல்லுநர்களையும் கவர்ந்த காந்தநாயகமவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1952—61 வரை பல்கலைக்கழகக் கொள்கை விரிவுரையாளராகக் கடமையாற்றியபோது தமிழ் மாணவர்ன் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் உயர்ச்சிக்காகவும் அவர் ஆற்றிய சேவை அளவிடற்கரியது.

உலகிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கவேண்டுமென்ற அவாவினுல் உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கென உலகத் தமிழ் அறிஞர் நிறுவனம் ஒன்றை 1953இல் நிறுவினர். இதன்மூலம் சர்வதேச தமிழர் மத்தியில் ஓர் ஒற்றுமை உணர்வை வளர்க்க உதவினர். உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் வாழ்ந்த தமிழர்களின் நிலையறிந்து அவர்களின் உயர்வுக்கு வழி கோலினர்.

இதன் பயனுக மலேசியப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிய காலகட்டத்தில் 1966 இல் முதலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்தி வைத்தார். இதனைத் தொடர்ந்து 2-வது தமிழாராய்ச்சி மாநாடு சென்னையிலும், 3-வது தமிழாராய்ச்சி மாநாடு பாரிஸிலும், 4-வது தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையிலும் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்த பெருமை இவரையேசாரும்.

கருணையெனும் கனியமுதைப் பரிசளிக்கும் பண்புக்குன்றம் நூல்கள் பல ஆக்கி அளித்து அறிவுலகு புகழ்பொழிய அறிஞரானர். பன்மொழிகளையும் கற்று ஞானக் களஞ்சியமாய்த் திகழ்ந்தார்; ஊருறங்கும் வேளையிலும் உறக்கமின்றி விழித்திருந்து மற்றவர்களுக்காய் வாழ்வதில் மகிழ்ந்தார். தமிழ்அன்னை மனம் மகிழப் பல தமிழ்ச் சங்கங்களை நிறுவினர். "சிங்களமொழியை மட்டும் ஈழ மொழியாக்காதீர்கள், தமிழ் மொழியையும் தாய் மொழியாக்குங்கள்" என்று "தமிழ்மொழி உரிமைகள்" என்ற நூலின்மூலம் உரிமைக்குரல் எழுப்பினர்.

இத்தனை ஆராய்ச்சிகளையும் இற்றை நாளிற் பலஇயக்கங்கள் இணைந்து செய்தும், நலங்காணல் சாலுமோ என நாம் நினைக்கத் தோன்றும்போது பல்லாண்டுகளுக்கு முன்னர் அடிகளவர்கள் தனிமனிதனுக இயங்கிப் பெற்ற வெற்றியினை எண்ணி இறுமாப்பெய்தாதிருத்தல் எங்ஙனம்? தமிழின் தனிச் சிறப்பென்ன? அதன் நுண்மையென்ன? தமிழ் அமைந்த வண்ணமென்ன? அப்பப்பா! இப்படி எத்தனை எத்தனை ஆராய்ச்சிகள்.

தமிழ்ப் பணிபுரிவதற்குச் சமயம் ஒரு தடைக்கல்லாக அமையமுடியாது. மாறுக அது ஆன்ம வளர்ச்சியுடன் மொழி வளர்ச்சிக்கும் உதவும் என்ற உண்மையினை உலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமகன் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநாயக அடிகளின் தமிழ்த் தொண்டால் தமிழீழம்மட்டும் தலைநிமிர்ந்து நிற்கவில்லை. அகில உலகிலுமுள்ள தமிழ் மக்கள் அனை வருமே பெருமையடைகின்றனர். அவர் ஒரு துறவியென்ற காரணத்தினால் உலகி லுள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் பெருமையடைகின்றனர். அவர் ஒருஞானி, சமதர்மவாதி என்ற காரணத்தினால் உலக மக்கள் அனைவருமே பெருமையடைகின்ற னர்.

இயற்கை எழில் யாவும் ஒருங்குசேர்ந்த அந்த மாலைப்பொழுதின் இனிய மயக்கம் தன்னை நினைக்கும்தோறும் தனிநலம் விளை விக்கும் தனிநாயக அடிகளாரையே நினைவு படுத்தும். இவ்வேளையில் தமிழனெனத் தலைநிமிர்ந்தும் '' யாதும் ஊரே யாவரும் கேளிர் '' என்ற பொதுநலத்திற்குடன்பட் டும் வாழ்ந்த அவர் வாழ்க்கையினை முன் வைத்து தமிழ் அறிஞர்கள் அன்னாரது அரும் பெரும் நூல்களை எவரும் இலகுவில் பெற் றுப் பயனடைய வழிசெய்தலும் சாலச் சிறந்ததன்றோ!

தமிழனாகப் பிறந்து, தமிழனாகவாழ்ந்து தமிழுக்கே தொண்டுகள் பலபுரிந்து, தனது கடைசி இரத்தத்தையும் தமிழுக்காகவே சிந்திய தமிழ்த்தொண்டன் தனிநாயக அடி கள் 19 0ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ஆம் தேதி தமிழன்னையின் மடியில் மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.

அன்னார் பூதவுடல் அழிந்தாலும்
அவர் புகழுடல் அழியாது.

நம்மிலக்கியம், நம் கலைகள், நம் வாழ்க்கை வாழவேண்டு மாயின் – வளரவேண்டுமாயின், பண்பாட்டிற்கு ஏற்ற அமைதி யான சூழ்நிலைவேண்டும். நம் அன்றாட வாழ்க்கைக்கும் உரிமை கட்கும் இடையறாது போராடிக்கொண்டிருக்கும் வேளையில் நம் பண்பாட்டைப் பேண உரிய வாய்ப்புகள் கிடையாது.

தனிநாயக அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-ம் பிரிவு முதற் பரிசுக் கட்டுரை



# உலகத் தமிழாராய்ச்சியின் தந்தை

செல்வி அட்லின் ஜசிந்தா பெனடிக்ற்.
யா/கரம்பன் சிறிய புஷ்ப, ம. வி.

மண்ணிலே கிடந்த மாணிக்கம் மானிலம் எங்கும் ஒளிவீசியது. மறைந்து கிடந்த மங்கலவிளக்கு மக்கள் அறிவினைத் துலக்கியது. தன் இனத்திற்குள் தன் எல்லைக்குள் தன் பாரம்பரியத்திற்குள் கட்டுண்டுகிடந்த கனிமொழி ஒன்று தன் கலைபரப்பி, தன் நிலை உயர்த்தி மற்றையோர் கண்ணிலும் பட்டொளிவீசியது. ஆம்! கன்னித்தமிழ் மணம் பல்வேறு நாடுகளிலும் கமழ அதன் அழகு பரிமளிக்க வழிவகுத்துக் கொடுத்த பலர் இவ்வரலாற்றில் வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள். இவர்களுள் தனித்துவ பண்புகளுடன் தனிநாயகனாக விளங்குபவர்தான் உலகத் தமிழாராய்ச்சித் தந்தையாம் நம் தனிநாயக அடிகள்.

இவர் சிறுவயதிலிருந்தே நுண்மாண் நுழைபுலம் மிகுதியாகக் கொண்டவர். இவர் யாக்கை நிலையாமையை உணர்ந்து துறவறம்பூண்டார். தனது பதினேழாவது அகவையில் கொழும்பிலுள்ள புனித பேர்ணார்ட் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தனது இருபத்தோராவது வயதில் உரோமாபுரி சென்று அங்கு தனது மறைக்கல்வியைத் தொடர்ந்தார். தனது இருபத்தைந்தாவது வயதில் மறைக் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இவர் வத்திக்கான் பல்கலைக்கழகத்தில் இருந்தபொழுதும் கீழைத்தேய துறவிகளுக்குத் தனிப்பிரிவு வேண்டும் என்று வாதிட்டார். அத்துடன் வத்திக்கான் பல்கலைக்கழகத்திற்குக் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் "சிவநடனம்" என்ற ஆய்வுநூலைத் துணிந்து அன்பளிப்புச் செய்துவிட்டுத் திரும்பினார். வத்திக்கான் பல்கலைக்கழகத்தில் இருந்தபொழுதும் பின்பும் பிறநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்ற தனிநாயக அடிகள் தமிழ் ஆய்வுகளில் ஈடுபட்டார். தனிநாயக அடிகள் தமிழ் உலகத்துள் காலடி எடுத்து வைத்தபோது தமிழ்உலகம்சிறியதாய் இருந்தது. அது குறுகிய வட்டத்துக்குள் சுழன்று கொண்டிருந்தது. தமிழ் அறிஞர்களும் பண்டிதர்களும் பாவலர்களும் புலவர்களும் தமிழின் சிறப்பைத் தமிழ் இலக்கியத்தின் இனிமையைத் தங்களுக்குள் பாடிக்கொண்டும் கட்சிகளாகப் போட்டி போட்டுக் கொண்டும் இருந்தார்கள். "தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரப்ப யார் வருவார்" என ஏங்கியும் தவித்தும் கனவு கண்டும் கற்பனையில் மிதந்துகொண்டிருந்தார் பாரதியார். அவ்வேளையில் துயில் கொண்டு இருந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார் தனிநாயக அடிகள். நீடுதுயில் நீக்கி நிறைமுயற்சியில் ஊக்குவித்தார் 'தமிழ் அன்னையே! உன் பண்பாட்டின் மேம்பாட்டின் புகழைப் பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்' என்று சொல்லிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தூதுவாகப் பறந்துசென்று தமிழ் மொழியின் மாண்பையும் தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் எடுத்து இயம்பினுர்.

தனிநாயக அடிகள் தனது ஒப்பியல் அறிவுகொண்டு தமிழின் பெருமையைத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பைத் தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டை உலகெங்கும் பரப்பினுர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கிய பெருமை அடிகளாரைச் சாரும். அரசுகள், அரசியல்வாதிகள் பல்கலைக்கழகங்கள் செய்யமுடியாததை தனியே தனிநாயகமாகநின்று செயற்கரிய சேவையைக் காலத்தால் அழியாத சேவையைச் செய்து சிறந்தார் உயர்ந்தார் தனிநாயக அடிகள். இவர் இத்தாலிநாட்டில் இருந்தபொழுது தன்னுட்டுக் கலைகளையும் பண்பாட்டையும் நன்கு அறியவேண்டுமென்றும் தாயகம் திரும்பியதும் தென்னிந்தியா சென்று பண்டிதரிடம் ஆரம்பத் தமிழ்பயின்று அண்ணுமலைப் பல்கலைக்கழகம் புகுந்து தமிழ்படித்து தமிழாராய்ந்து ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பதில் தமிழாராய்ச்சிப் பட்டங்களைப் பெற்ருர். அன்றிலிருந்து தனிநாயக அடிகளின் தமிழாராய்ச்சிப் பணியும் தமிழ்த் தூதும் ஆரம்பமாயின எனலாம். அவர் சென்ற நாடுகளில் தமிழ் மொழியின் பண்பாட்டினுடைய தொடர்புகளை ஆராய்ந்து பெருமகிழ்வும், பேருவகையும் கொண்டார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்பத் தான் பெற்ற அநுபவங்களையெல்லாம் தமிழ்த்தூது, ஒன்றே உலகம் என்னும் நூல்களில் அழகுற விளக்கியுள்ளார்.

தமது தமிழ்த்தூதின் முதற்படியாக ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதாம், ஐம்பத்தோராம் ஆண்டுகளில் தனிநாயக அடிகள் வடதென் அமெரிக்கா நாடுகளிலும் ஜப்பானிலும் சொற்பொழிவுச் சுற்றுலாவை மேற்கொண்டார், ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திநாலாம் ஆண்டு முதன்முதலாக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகட்குத் தமிழ்த்தூதை மேற்கொண்டார். ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திரண்டில் "தமிழர் பண்பாடு" என்ற ஆராய்ச்சி முத்திங்கள் ஆங்கில சஞ்சிகையைத் தோற்றுவித்தார். பதினைந்து ஆண்டுகளாக அதன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றித் தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவை புரிந்தார். 1951ஆம் 55ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்னும் ஆகிய நாடுகளுக்குக் கல்விச் சுற்றுலாக்களையும் தமிழ்த்தூதையும் மேற்கொண்டார். 1955ஆம், 57ஆம் ஆண்டுகளில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் ஆராய்ச்சிசெய்து தனது இரண்டாவது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பண்டைய ஐரோப்பிய இந்திய சிறப்பாகத் தமிழ்க் கல்வி முறைகளின் ஒப்பீடு என்பதே அவரது இலண்டன் பட்டத்திற்கான ஆராய்ச்சிப் படைப்பாகும். 1960ஆம் ஆண்டு வளர்ந்தோர் கல்விமுறைகளைப்பற்றி ஆராய்வதற்காக ஐக்கியஅமெரிக்கா, கனடா, ஜேர்மனி, இத்தாலி, ஸ்கண்டிநேவிய, ரஷிய நாடுகளுக்குக் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டார். 1964ஆம் ஆண்டு ஜேர்மனிக்குச் சென்று சொற்பொழிவுச் சுற்றுலாவை மேற்கொண்டார். 1967ஆம் ஆண்டுகளில் கடல்கடந்து வாழும் தமிழ் இனத்தாரைப் பற்றி ஆராவதற்காக ஆபிரிக்க மேற்கிந்திய மொரிசியஸ் நாடுகளுக்குச் சென்ருர்.

1964ஆம் ஆண்டு அனைத்துலக தமிழ் அறிஞர்கள் மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டின் பின் ஏழாம் நாள் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் அடிகளாரின் முயற்சியால் நிறுவப்பட்டது: எனவே அதன் செயலாளராக அடிகளாரே பணியாற்றினுர். 1966ஆம் ஆண்டில் மலேசியாவிலும் 68ஆம் ஆண்டில் சென்னையிலும் 70ஆம் ஆண்டில் பாரிசிலும் 74ஆம் ஆண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் யாழ்ப்பாணத்திலுமாக ஒன்றன்பின் ஒன்றுக நான்கு தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தினர். இவற்றை நடத்துவதிலும் அடிகளாருக்குப் பெரும்பங்கு இருந்தது. எனவே அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் அடிகளாரின் குழந்தையாகும்.

1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு தொடங்குவதன் முன்னர் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக்குப் பெரிய சோதனை ஏற்பட்டது. அரசாங்கத்தின் பலத்த தடைகளுக்கும் பலபெரிய புள்ளிகளின் எதிர்ப்புக்கும் மத்தியிலும் தமிழாராய்ச்சியை நடத்தி வைத்தார் அடிகள். ஆனால் இத்தகைய தடைகளில் நடுவே குழந்தையைத் தவிக்க வைத்துவிட்டுச் சென்றுவிட்டாரென அடிகளார்மீது பலர் பழிசுமத்த முயன்றனர். அக்குழந்தையை ஆபத்திலிருந்து தப்ப வைக்க அடிகளார் அயராது உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நாலாவது உலக மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசியபோது உலகறியச் செய்தார்:

தனிநாயக அடிகள் தனியாகத் தமிழை மட்டும் ஆராயவில்லை. தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிடும் ஆராய்ச்சித்துறையில் ஒப்பற்ற பணிபுரிந்தார். வேற்றுநாடுகளில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித்துறையைத் தோற்றுவிப்பதற்காக அயராது உழைத்து அளப்பரிய வெற்றியும் ஈட்டினர். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி இந்தியத்துறையாராய்ச்சியிலும் தமிழாராய்ச்சியிலும் ஈடுபடுகின்ற பண்பாட்டு ஆராய்ச்சி அறிஞர் அனைவரையும் உலகளாவிய தமிழாராய்ச்சி இயக்கமொன்றில் இணைப்பித்த பெரும் இயக்குநர் தனிநாயக அடிகள். இவர் இதுவரை நடாத்திய மாநாடுகள்மூலம் சாதித்தவைகளோ அநந்தம். முதலாவதாகத் தமிழ் இலக்கியம் பற்றி ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கே உரியதென்ற கொள்கையைத் தகர்த்தெறிந்து விட்டார்.

தமிழாராய்ச்சி குறுகிய எல்லைக்குட்கட்டுப்பட்டிராது பரந்துவிரிந்து பல துறைகளிலும் விருத்தியடைகின்றது. தமிழ் இலக்கியம்பற்றியும் தமிழ் இலக்கணம்பற்றியுள்ள ஆராய்ச்சி மட்டுமே தமிழாராய்ச்சி என்ற நிலைமாறித் தமிழ்மக்கள் வரலாறு, தமிழ்மக்கள் மனிதவியல், தமிழ்மக்கள் சமயங்கள் தத்துவங்கள் தமிழ்த் தொல்பொருளியல் தமிழ் நாட்டவர் பிறநாட்டவரோடு கொண்ட தொடர்புகள் தமிழ்க்கலை தமிழ் மொழியில் இன்னோரன்ன பலதுறைகளிலும் ஆராய்ச்சி பரந்து சென்றிருக்கின்றது. இவரின் முயற்சியின் பயனுகத் தமிழாராய்ச்சி வெகு வேகமாக விரைந்து சென்றது. 1965ஆம் ஆண்டில் மலேசியாவில் நடைபெற்ற தமிழாரய்ச்சி மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் றகுமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'எமது பல்கலைக்கழகம் இந்திய கலாச்சார இயல்பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விரிந்த மனப்பான்மையுடைய ஓர் அறிஞரைத் தலைவராகப் பெற்றமை எமது பல்கலைக்கழகத்தின் பெரும் பேருகும். நான் இங்கு குறிப்பிடுவது பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே ஆகும்.'' என்று கூறினர்.

வரலாறு இந்த நாயகத்தை, இந்தத் தந்தையை இழந்துவிட்டது. ஆயினும் தமிழ்வாழும் உலகெங்கும் தனிநாயகம் வாழும் என்பது உறுதி. இத்தமிழாராய்ச்சி தொடர்ந்து நடக்க, கற்ருேரும் மற்ருேரும் முன்வரவேண்டும். இம்முயற்சியின் பயனை தமிழ்மொழியின் முதன்மையை முழுஉலகமும் அறியச்செய்யவேண்டும்.

வாழ்க தனிநாயகம்! வளர்க நம் தமிழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(54-ம் பக்கத் தொர்ச்சி)

தமிழர் பண்பாடு.........

சிறந்த கொள்கை. பிறரன்பு, நமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற உயரிய பண்பு, என் கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக்காப்பாற்றும் வேட்கை, மனத் தூய்மை, விடாது முயலல் என்னும் கொள்கை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம். இவ் விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கின்றோம். புறநானூற்றில் உண்டாலம்ம இவ்வுலகம் என்ற செய்யுளும், இம்மைக்காவது மறுமைக்காமென என்ற செய்யுளும் குறிப்பிடத்தக்கவை. (புறம் 134, 182)

## 4. தமிழர் பண்பாடுக் காலத்துக்குக் காலம் மாற்றம் அடைந்திருக்கிறதா?

மாற்றம் அடைந்திருக்கிறதுதான். ஆனால் சிறிய அளவில்தான். அடிப்படைக் கொள்கைகளில் தமிழர் பண்பாடு மாற்றம் அடையவில்லை. தமிழ் நாட்டிற்கு பிற நாட்டுத் தொடர்பும், பிற மக்கள் தொடர்பும் எப்பொழுதும் இருந்துள்ளன. சங்க காலத் தொடக்கத்தில் குடியேறிய சமணர் புத்தர், பார்ப்பனர், ஐரோப்பியர் அதனை மாற்ற முடியவில்லை. அவர்களும் தமிழ் மரபினைத் தழுவியே தம் சமயங்களைப் பரப்ப முயன்றனர். சிலப்பதிகாரம் சமணரால் இயற்றப்பெற்ற நூல். திருவள்ளுவரும் சமணராக இருந்திருக்கலாமென்று பலர் கருதுகின்றனர். தொல்காப்பியர் சமணரென்பது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கருத்து. ஆனால் அதற்குப் போதிய சான்றில்லை.

மணிமேகலை என்னும் புத்த காப்பியத்தில் தமிழ் பத்திச்சுவை மிளிர்கின்றது. கம்பர் வடமொழி இலக்கியத்தைத் தழுவித் தம் காப்பியத்தைப் பாடினாராயினும் தமிழ் மரபைக் காத்துள்ளார். வீரமாமுனிவர் கூட, தேம்பாவணியிலும் திருக்காவலூர்க் கலம்பகத்திலும் தமிழ்ப் புலவரைப் போலவே பாடியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்கள் கூட (எ. டு. பாரதி பாரதிதாசன்) இந்த மரபைக் கைவிடவில்லை. தமிழ் மக்கள் தொன்மை மரபுகளை என்றுமே காத்து வருகின்றனர். பிறநாட்டார் ஆட்சி செலுத்திய காலத்திலும், பிற மொழிகளையும் இலக்கியங்களையும் பயின்ற காலத்திலும் தமிழ் மக்கள் வாழையடி வாழையாக வந்த தம் மரபுகளைத் தழுவிக் கொண்டே வந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த நூலாசிரியர் பலர் ஆங்கிலத்தை நன்கு கற்றவர்கள் சுப்பிரமணிய பாரதி, மறைமலையடிகள், விபுலானந்தர், வையாபுரிப்பிள்ளை, ரா. பி சேதுப்பிள்ளை போன்றவர்கள் ஆங்கில இலக்கியத்தையும் நன்கறிந்தவர்கள். அவர்களுடைய தமிழ் நூல்கள் பிறமொழிப் பயிற்சியால் வளம் பெற்றன. ஆனால் அவர்கள் தமிழ் மரபைக் காத்துள்ளனரேயன்றி இழக்கவில்லை. இன்று தமிழ் மக்கள் சிலருடைய ஆடை, போக்குவரத்துமுறைகள், இல்லங்கள், அறிவியல் வாய்ப்புகளைக் கடைப்பிடித்தாலும் தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் அழிக்க முயல்வதாகத் தோன்றவில்லை. நாகரிகம் மாறும், ஆனால்பண்பாடு எளிதில் மாறாது.

## 5. தமிழர் பண்பாடு வேறெந்த நாடுகளில் பரவியுள்ளது?

இவ்வினாவுக்கு விடையளிக்கு முன் வேறொரு வரலாற்று உண்மையைக் கூற விரும்புகின்றேன். தமிழர் பண்பாட்டை நாம் சிந்துவெளி, மொகஞ்சதாரோ, ஹாரப்பா நாகரிகத்துடன் இணைக்கலாம். அந்த நாகரிகத்தின் சின்னங்கள் பிற்காலத்

தில் தமிழ்நாட்டில் தோன்றிய கலைகளை ஒருவாறு விளக்குகின்றன. தமிழர் பண்பாடும் நாகரிகமும் பல்லவர் சோழர்காலத்தில் கீழ்த்திசை நாடுகள் போன்று சாவகம், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகட்குப் பரவியுள்ளது. தாய்லாந்து நாட்டில் திருப்பாவை, திருவெம்பாவை விழாக்களைக் கொண்டாடி வந்தனர். தேவாரம், திருவாசகங்களிலிருந்து செய்யுள்களை தாய் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடினர். இன்றும் பாங்கொக் நகரிலும் தக்குவப்பா என்னும் இடத்திலும் பார்ப்பனர் சிலர் குடியிருக்கின்றனர். இவர்கள் தமிழை அறியாததால் இப்பாக்களை தாய் எழுத்தில் எழுதிப் படிக்கின்றனர்.

கம்போடிய நாட்டில் உள்ள மாபெரும் அரண்மனைகளாகிய அங்கோர்வாட், அங்கோர்தொம் என்பன பல்லவ கட்டட முறையைத் தழுவி எழுப்பப் பெற்றன. சாவகத்திலும் உள்ள கோயில்கள் சில சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைக்கூறுவதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நம் காலத்தில் தமிழருடைய செல்வாக்கு பிறநாடுகளில் குன்றி இருப்பதால் இவ்வரலாற்றுச் சின்னங்கள் அருகிப் போகின்றன. தமிழ் பேசும் இனத்தார் மொரிஷியஸ், றியூனியன், தென்னாபிரிக்கா விலுங் கரிபியன் தீவுகளிலுங் குடியேறியிருந்தாலும், அவர்களுடைய செல்வாக்கு குறைந்து வருகின்றது. மலேசியா, சிங்கப்பூரிலும் மேலே குறிப்பிட்ட இதர நாடுகளிலும் இக்காலத் தமிழ் இளைஞர்கள் சில சமயக் கோட்பாடுகளைத் தழுவினாலும் வருங்காலத்தில் இவர்களின் வழித்தோன்றல்கள் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுவார்களா என்பது ஐயத்க்துகே இடமானது. தமிழர் பண்பாடு தொடர்ந்து வளர வேண்டுமாயின் அது ஈழத்திலும் தமிழ் நாட்டிலும்தான் இயலும்.

**6. கிரேக்க நாகரிகமும் பண்பாடும், உரோம நாகரிகமும் பண்பாடும் என்ற வரிசையில் தமிழர் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் எத்தகைய இடமுண்டு?**

தமிழர் பண்பாட்டைப் பிற இனத்தார் பண்பாட்டோடு ஒப்பிடுவது எளிதன்று. மேலும் தமிழருடைய எத்தனையோ வரலாற்றுச் சின்னங்களும், இலக்கியங்களும் அழிந்துபோயின. ஆயினும் ஒழுக்கத்துறையில் தமிழர் பண்பு தனி இடம் வகிக்கின்றது என்று சிலர் கூறியிருக்கின்றனர். மேலும் தமிழ்ப் பக்தி இலக்கியம் இணையற்ற செல்வம்.

உலகின் ஒழுக்க இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து நூல்கள் யாத்த மகான் அல்பேட் சுவைட்சர் இவ்வுலகில் திருக்குறளைப் போன்ற நீதி நூலொன்றைக் காண்பது அரிதென்று குறிப்பிட்டுள்ளார். கிரேக்கருடைய நாடக இலக்கியங்களைப் போல் நமக்கு நாடகங்கள் கிடைக்கவில்லை. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்ற அரசியல் ஞானிகள் தமிழ் நாட்டில் பிறக்கவில்லையென்றே சொல்லலாம். ஆயினும் சோழருடைய ஆட்சியைப் போற்றுதவரில்லை. கட்டிடக் கலையில் நம்மைப்போல் கிரேக்கரும் உரோமரும் சிறந்து விளங்குகிறர்கள். குடியாட்சியை வளர்த்த பெருமை கிரேக்கருக்கும், சட்டத்தை வளர்த்த பெருமை உரோமருக்கும் உண்டு.

நாகரிகங்களை ஒப்பிடுவது பண்பாட்டை ஒப்பிடுவதிலும்எளிது. உலகில் சிறந்த நாகரிகங்கள் சில தோன்றி மறைந்துள்ளன. எகிப்தியருடைய நாகரிகம், அசிரியா, மொசப்பத்தேமியா முதலிய மாநிலங்களில் தோன்றிய நாகரிகம் மறைந்து போயின. ஆனல் தமிழருடைய தொன்மைவாய்ந்த நாகரிகமும் பண்பாடும் சீன நாகரிகமும் பண்பாடும் போல இன்றும் நிலைத்துள்ளன.

இக்காலத்தில் விஞ்ஞானத்தின் பயனை மேலைநாட்டார் நாகரிகத்தில் முன்னேறி உள்ளனர். நாகரிகம் பண்பாட்டிலும் கால அடைவில் மாற்றமடைவது இயல்பு. விஞ்ஞானப் பயனைத் தமிழ் மக்களும் கையாண்டு வருவதால் அவர்களுடைய நாகரிகமும் மாற்றமடைந்துவரும்.


நன்றி :

**'புதிய உலகம்' 'நம்வாழ்வு'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றேன்

தரணியெங்கும் தமிழ்செய்த தனிநாயகன் தாளிணையை
தரமான மலரொன்றால் அர்ச்சிக்க உன்னியநாள்
ஆதரவு தந்திட்ட ஆசிரியப் பெருந்தகைகள்,
ஆர்வமுடன் ஒத்துழைத்த ஆட்சிமன்ற அலுவலர்கள்,
வாழ்த்துரைகள் வழங்கிய ஆயர்கள், பிரமுகர்கள்,
வளமான கட்டுரைகள் சமைத்திட்ட சான்றோர்கள்,
கவினுறும் கவிதைகள் படைத்திட்ட கவிஞர்கள்,
கட்டுரைப் போட்டிதனில் முன்வந்த மாணவர்கள்,
ஆலோசனை வேண்டியபோ தன்பும் ஆதரவும்
அளித்தெம்மை ஆதரித்த நாயகனின் நண்பர்கள்,
நிழற்படங்கள் தம்மை எழிலுருவ மாக்கி
பொலிவுறச் செய்திட்ட ஞானம்ஸ் நிறுவனத்தார்,
குறுகிய காலத்துள் சிறப்புடன் செயலாற்றி,
குறிப்பிட்ட தேதிக்குள் மலராக்கித் தந்திட்ட
உத்தமனார் சூசைமுனி அச்சக மேலாளர்
உவகையுடன் பணியாற்றும் தொழிலாள தோழர்கள்,
அத்தனை பேருக்கும் நினைவுமலர் வெளியீட்டு
ஆசானென் மனமார்ந்த நன்றிகள் நவில்கின்றேன்.
மலரில் மணமிருப்பின் மற்றவர்க்கும் கூறிடுக
மன்னித்து விடுக தவறுகள் கண்டுவிடில்
எளியனென் பணிவான வேண்டுதலு மிதுவே
என்றென்றும் என்னுடைய வணக்கமும் நன்றியும்.



புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறை மாவட்டக் கத்தோ

## கிளைச் சங்கங்களின

## 1980 —

| இல. | கிளை | தலைவர் | செயலாளர் |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | திரு. எம். நீக்கிலாப்பிள்ளை | திரு. அ. யோசவ் |
| 2 | பாஷையூர் | திரு. சி. ஆர். யோசெவ் | திரு. எஸ். ஈ. பெர்னன்டோ |
| 3 | நல்லூர், கோப்பாய், உரும்பிராய் | திரு. ச. சூசைப்பிள்ளை | திரு. ஆ. வே. துரைரட்ணம் |
| 4 | நாவந்துறை, மானிப்பாய் | திரு. டி. முடியப்பு | திரு. ஈ. எம். யேம்ஸ் |
| 5 | ஊர்காவற்றுறை | திரு, லூ. ஞானப்பிரகாசம் | திரு. கி. பி. சேவியர் |
| 6 | வடமராட்சி | திரு. தோமஸ் ஈப்பன் | திரு. தோ. செபமாலை |
| 7 | மிருசுவில் | திரு: யோ. யோண்பிள்ளை | திரு. மா. பாக்கியநாதன் |
| 8 | இளவாலை | திரு. ஏ, எஸ். லோறன்ஸ் | திரு. சாமுவேல் பெனடிக்ற் |
| 9 | கிளிநொச்சி | திரு. ஏ. பி. மரியதாசன் | திரு. ஜேக். பொன். தில்லைநாயகம் |
| 10 | முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு | திரு. பி. இராசேந்திரன் | திரு. தே. தொம்மையப்பு |
| 11 | மன்னார் | திரு. எவ். எக்ஸ். பங்கிராஸ் | திரு. எஸ். வேதநாயகம் |
| 12 | வவுனியா | திரு. எவ். ஆர். பங்கிராஸ் | தீரு. சு. அலேஸ் |
| 13 | அச்சுவேலி, வசாவிளான், ஒட்டகப்புலம் | திரு. சா. சபாநாயகம் | திரு, ஏ. எம். இராசேந்திரம் |
| 14 | சுண்ணாகம் | திரு. எல். மாசலின் | திரு. அ. தாவீது |
| 15 | நெடுந்தீவு | திருமதி எம். ஜே. கனகரத்தினம் | திரு. பி. யோசேப் |
| 16 | முருங்கன் | திரு. பி. மரியநாயகம் | திரு. அ. அந்தோனிமுத்து |
| 17 | மாந்தை | திரு. ப. ஞானப்பிரகாசம் | திரு. க. யேக்கப் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த்தோலிக்க ஆசிரியர் சங்கம்.

### ரின் நிருவாகிகள்

### — 1981

| பொருளாளர் | துணைத்தலைவர் | துணைச் செயலாளர் |
| --- | --- | --- |
| திருமதி எம். ஜே. ஆசீர்வாதம் | திரு. ஜீ. அருளானந்தம் | திரு. எல். மேரிபேடினன்ட் |
| திருமதி பிளசம் சின்னத்துரை | திரு. ஆர். யோசெவ் | செல்வி மே. சின்னப்பு |
| திரு. கி. யேசுராஜன் | திருமதி ம. தேவராஜன் | செல்வி மே. கி. பு. எட்வேட் |
| | | |
| திருமதி ம. ஜெயபாலா | திருமதி மே. ல. பாலசுந்தரம் | திரு, நா. யேசுராசா |
| திரு. சி. லீனஸ் | திரு. வ. ஸ்ரனிஸ்லஸ் | திருமதி எலிசபெத் யேம்ஸ் |
| திரு. சூ. அந்தோனிப்பிள்ளை | திரு. சி. வின்சென்ற் | திருமதி மே. அ. யுவக்கீம் |
| திருமதி ம. இலங்கைநாயகம் | திரு. அ. அ. ஞானசோதி | திருமதி மே, மி. யோசேப் |
| செல்வி எம். ரி. எம். தோமஸ் | திருமதி கிறிஸ்ரியன் பயஸ் | திருமதி எம். ஸ்ரனிஸ்லோஸ் |
| திருமதி. இ. மயில்வாகனம் | திரு. கே. சூசைநாயகம் | திருமதி இ. மரியநாயகம் |
| திரு. செ. ப. சவரிமுத்து | திருமதி தி. த. அந்தோனிமுத்து | திரு. யோ. தாவீது |
| | | |
| திரு. பி. பெனடிக்ற் | செல்வி எல். எம். பி. அந்திரேஸ்பிள்ளை | திருமதி ரீ. ஞானப்பிரகாசம் |
| திருமதி மே. மெ. மரியதாசன் | திரு, எஸ். பி. அலோசியஸ் | திருமதி வி. ஆர். ஏ. ஒஸ்வெல்ட் |
| திரு. எம். பி, இராசநாயகம் | திரு. ஜே. எம். பி. ஜெயராசா | திரு. எஸ். டானியல் |
| | | |
| திருமதி மே. அ. அந்தோனிமுத்து | திருமதி தி. த, மாசலின் | திருமதி தி. கென்றி |
| திரு. அ. கிறிஸ்ரோப்பர் | திரு. பி. எம். ஜே. அன்ரனி | திருமதி அ. மகேந்திரன் |
| திரு. எஸ். சந்தியாப்பிள்ளை | திரு. அ. செபமாலை | செல்வி அஞ்சலா வாஸ் |
| திரு. அ. நித்தியானந்தராசா | திரு. அ. அந்தோனிப்பிள்ளை | திரு. கி. பி. பிகிருடோ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org